Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
TILKO
❖ Banquet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E-Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P. - 0212225969
Hotline 0212229497
(C/3210)

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 15 திங்கட்கிழமை (30.12.2013) பக்கங்கள் 20 ஓசை - 090



08

தொடரும் சாதனை



18

தேர்தலில்...

## பயங்கரவாதத்திற்கு எதிரான வெற்றியை பாதுகாக்க வேண்டும்

### ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

பயங்கரவாதத்திற்கு எதிரான வெற்றியை பாதுகாக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஜனநாயக இடதுசாரி முன்னணியின் 14 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வினை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடுமையான போராட்டத்திற்கும், தியாகத்திற்கும் மத்தியில் பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். பயங்கரவாதத்திற்கு எதிரான வெற்றியை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைவரையும்

(19) ஆம் பக்கம் பார்க்க

## பயிலுநர் பட்டதாரிகளுக்கு ஜனவரிக்குள் நிரந்தர நியமனம்

(கொழும்பு)

அரச சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட பயிலுநர் பட்டதாரிகள் அனைவருக்கும் அடுத்த மாதத்திற்குள் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே குறித்த பயிலுநர் பட்டதாரிகள் வெற்றிடங்கள் நிலவும் நிறுவனங்களில் தொழிலில் அமர்த்தப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் பீ.பி.அபேகோன் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகளின் இணக்கப்பாட்டுடன் இவர்களுக்கான நியமனங்களை வழங்கவுள்ளதாகவும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

தொழில் வாய்ப்பின்றி இருந்த 52 ஆயிரம் பட்டதாரிகள் அண்மையில் அரச சேவையில் பயிலுநர் பட்டதாரிகளாக இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

எவ்வாறாயினும் இவர்களில் சுமார் ஏழாயிரம் பேர் ஏற்கனவே வேறு பதவிகளுக்கு மாறிச் சென்றுள்ளனர்.

ஒருசில மாவட்டங்களில் பயிலுநர் பட்டதாரிகள் மேலதிகமாக இருக்கின்றமையும் தெரியவந்துள்ளது.

இவர்களின் வதிவிடங்களுக்கு அண்மித்த மாவட்டங்களில் நிரந்தர நியமனங்களை

(19) ஆம் பக்கம் பார்க்க

# தேர்தல் ஆண்டான 2014 அரசுக்கு மிகவும் சவாலானது

### ஆருடம் கூறுகிறது சண்டேரைம்ஸ்

(கொழும்பு)

பிறக்கப்போகும் 2014 தேர்தல் வருடமென அரசு கூறியுள்ள நிலையில் அது அரசுக்கு மிகவும் சவால் நிறைந்ததாக காணப்படுவதாக கொழும்பிலிருந்து வெளிவரும் சண்டேரைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அந்தப் பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஏற்கனவே நாட்டில் பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளன. அதிக கடன் நாட்டை ஆட்கொண்டுள்ளது.

அபிவிருத்தி என்ற பெயரில் அதிகளவான ஊழல்கள் இடம்பெற்றுள்ளன. பெருமளவான பணம் விரயமாக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு பாரிய அபிவிருத்தி திட்டத்துக்கும் கேள்விப்பத்திரங்கள் கோரப்படவில்லை என்பதை பிரதான எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இதன்மூலம் அபிவிருத்திக்கு செலவிடப்படுவதாகக் கூறப்படும் பணத்தில் பெருந்தொகைப் பணம் தரகாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் கூறுகின்றன.

பொதுநலவாய நாடுகள் மாநாட்டின் போது அரசாங்கம் தகுதிக்கு அப்பாற்பட்டு செலவுகளை மேற்கொண்டது.

இவையாவும் 2014 ஆம் வருடம் தேர்தல் வருடம் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அறிவித்துள்ள நிலையில் அதற்கு முன்னுள்ள சவால்களாக உள்ளன.

மறுபுறத்தில் சர்வதேசத்தில் 2014 ஆம் ஆண்டு மார்ச்சில்

(19) ஆம் பக்கம் பார்க்க

## 22 தமிழக மீனவர்கள் நெடுந்தீவில் கைது

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் கைதான தமிழக மீனவர்கள் 22 பேரையும் எதிர்வரும் ஜனவரி மாதம் 10 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதவான் எஸ்.எம்.ஆர்.மகேந்திரராசா உத்தரவிட்டுள்ளார்.


தமிழக மீனவர்கள் 22 பேரையும் ஊர்காவற்றுறை நீதவான் எஸ்.எம்.ஆர்.மகேந்திரராசா முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தியபோதே, அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இந்தியாவின் கோட்டைப்பட்டினம், ஜனதாப்பட்டினம்

(19) ஆம் பக்கம் பார்க்க

## உள்ளூராட்சி மன்றங்களின் ஐந்து உறுப்பினர்கள் நீக்கம்

### ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவிப்பு



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களில் அங்கம் வகிக்கும் ஐந்து உறுப்பினர்கள் கட்சியிலிருந்து நீக்கப்படவுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

வடக்கு உள்ளூராட்சி சபைகளில் இருந்து நான்கு உறுப்பினர்களும் வடமேல் உள்ளூராட்சி சபையிலிருந்து ஒருவருமாக நீக்கப்படவுள்ளனர்.


கட்சி தலைமையுடன் கலந்தாலோசிக்காமல் முடிவுகளை மேற்கொண்டமையே இதற்கான காரணம் என்று அலி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை எதிர்வரும் மேல மற்றும்

(19) ஆம் பக்கம் பார்க்க

## திருமலை எண்ணெய்க் குதம் இந்திய உறவைப் பாதிக்குமா?

(கொழும்பு)



திருகோணமலையில் இந்திய எண்ணெய் நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள எரிபொருள் குதங்களை மீண்டும் பொறுப்பேற்கப்போவதாக இலங்கையின் அறிவித்தல், இந்திய - இலங்கை உறவில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று சிலோன்ருடே ஆங்கில செய்தித்தாள் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமது வரவு - செலவுத்திட்ட உரையின் போது இந்தக் குதங்களை மீண்டும் பொறுப்பேற்கவுள்ளதாக வெளியிட்ட கருத்து இந்திய அரசாங்கத்தின் தரப்பில் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

ஜெனிவா மனித உரிமை மாநாட்டில் இலங்கைக்கு எதிராக செயற்பட்டமை மற்றும் பொதுநலவாய நாடுகள் மாநாட்டை மன்மோகன்சிங் நிராகரித்தமை போன்றவற்றுக்கு பழிதீர்க்கும் வகையிலேயே இந்த

(19) ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை மீது சர்வதேச அழுத்தம் அதிகரிப்பதற்கு காரணம் என்ன?

### விளக்குகிறார் வன்னி கட்டளைத் தளபதி

(கொழும்பு)

இலங்கைத்தீவு மிகவும் அழகானது என்பதுடன், அது முக்கியமான ஒன்றாகவும் திகழ்வதனாலேயே சர்வதேச அழுத்தங்கள் அதன்மீது அதிகரிப்பதற்கு காரணமென வன்னி பிராந்திய இராணுவக் கட்டளைத் தளபதியும் யாழ். மாவட்டத்திற்கு மாற்றலாகி வருபவருமான மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா தெரிவித்தார்.

அம்பேபுஸ்ஸவிலுள்ள சிங்க படைப் பிரிவின் தலைமையகத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையானது புத்த சமயத்தை அடிப்படையாக கொண்டது. நாங்கள் பழிவாங்க மாட்டோம். காணிகளை கொள்ளையிடுவதில்லை. நாடுகளை கொள்ளையடிப்பதில்லை.

அமைதியான கலாசாரத்தை

(19) ஆம் பக்கம் பார்க்க

## கடனுக்குப் பயந்து கடத்தல் நாடகம்

### இளைஞன் பொலிஸில் சரண்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் இளைஞன் கடத்தப்படவில்லையெனவும் அவர் பொய் கூறி முல்லைத்தீவு, முள்ளியவளையில் உள்ள நண்பர் ஒருவரது வீட்டில் இருந்ததாகவும் பருத்தித்துறைப் பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியினைச் சேர்ந்த சூரியகுமாரன் தமிழமுதன் (வயது - 22) இளைஞன் இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டதாக பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் கடந்த 26 ஆம் திகதி அவ்விளைஞனின் தந்தையினால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அத்துடன், தனது மகன் தனக்கு குறுஞ்செய்தி மூலம் தன்னை 4 பேர் கொண்ட கும்பல் வானில் கடத்திச் செல்வதாகக் கூறியதாக முறைப்பாட்டில் அவர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் மேற்படி இளைஞன் முள்ளியவளைப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம்

(19) ஆம் பக்கம் பார்க்க

# யுத்தத்தால் பாதிப்படைந்துள்ள இந்து ஆலயங்களுக்கு நிதியுதவி



(கிளிநொச்சி)

யுத்தம் காரணமாக பாதிப்படைந்துள்ள பகுதிகளில் வணக்க வழிபாட்டு தலங்களை புனரமைப்புச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதன் ஒருகட்டமாக நேற்று கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள 30 இந்து ஆலயங்களின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக நிதி வழங்கப்பட்டுள்ளது.

நிதிவழங்கும் வைபவம் நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக ஈழமக்கள் ஜன்நாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

2004 ஆம் ஆண்டு நான் இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சுக்குப் பொறுப்பாக இருந்தபோது, அப்போது விடுவிக்கப்படாதிருந்த அரச கட்டுப்பாடற்ற பகுதிகளில் அமைந்திருந்த 300 ஆலயங்களின் புனரமைப்பு மற்றும் மீள் நிர்மாணப் பணிகளுக்காக பாரிய நிதி ஒதுக்கீடுகள் மேற்கொண்டதை நினைவுகூர்ந்ததுடன், தற்போது வழங்கப்படுகின்ற நிதி வழங்கல் ஆலய புனரமைப்பு மற்றும் மீள் நிர்மாணப்பணிகளுக்கு போதுமானதாக இருக்குமென நான் எண்ணவில்லை என்றும், எதிர் காலத்தில் மேலும் நிதி உதவிகளை அரசாங்கத்திடம் இருந்து பெற்று வழங்குவதற்கும், அதே நேரம் மேலும் சில ஏற்பாடுகளின் பிரகாரம் நிதியுதவிகளை பெற்று வழங்குவதற்கு தான் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

ஒரு ஆலயத்திற்கு 2 இலட்சம் ரூபா வீதம் 30 ஆலயங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்ட இந்நிகழ்வில், ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், ஈ.பி.டி.பி. யின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் தவநாதன், பூநகரி பிரதேச சபைத் தலைவர் சிறிஸ்கந்தராஜா, உட்பட ஆலய அறங்காவலர்கள், நிர்வாகிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## 27 ஆவது ஆண்டுக்கான நிர்வாக உறுப்பினர் தெரிவு

(நெல்லியடி)

நாவலடி சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தின் 27 ஆவது ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

செ.இலகுநாதன் தலைமையில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் வருமாறு: கொ.குணசிங்கம் தலைவராகவும், திருமதி சு.கீர்த்தனா உப தலைவராகவும், திருமதி சு.சுதாஜினிதேவி செயலாளராகவும், வே.சுந்தரம் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக உறுப்பினர்களாக திருமதி இரா.செல்வம், திருமதி ர.மதிவதனி, அ.தயானேஸ்வரன் ஆகியோருடன் குழுத்தலைவர்கள் ஐந்து பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (18)

# வல்லையில் சிரமதானமும் பார்த்தீனியம் அழிப்பும்

வல்லை இந்து மயானத்தில் சிரமதானமும், பார்த்தீனியம் அழிப்பும் நேற்றுக் காலை இடம் பெற்றது.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை. உறுப்பினர் க. இரத்தினம் தலைமையில் இச் சிரமதானம் இடம்பெற்றது.

மேற்படி மயானத்தின் நிர்வாகிகள் முதற்கட்ட சிரமதானத்தில் ஈடுபட்டுள்ளனர். பழைமை வாய்ந்த இம் மயானத்தை எல்லைப் படுத்தல், நீர் வசதி ஏற்படுத்தல், ஓய்வு மண்டபம் அமைத்தல் போன்ற வேலைத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக இச் சபையின் தலைவர் கொ.குணசிங்கம் தெரிவித்துள்ளார்.

இதற்காக மக்களிடம் இருந்து பெறப்படும் உதவிகள் பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபைக்கு ஊடாகவும் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (18)

# மயங்கி விழுந்த குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

ஆட்டோவில் இருந்து கதைத்துக் கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

ஆஸ்பத்திரி வீதி, சங்கானையைச் சேர்ந்த இரத்தினம் பாஸ்கரன் (வயது-48) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்றுக்காலை 9.00 மணியளவில் வியாபாரத்தை முடித்துக் கொண்டு வீடு திரும்பிய இவர், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆட்டோவில் அமர்ந்தவாறு மயங்கி கீழே விழுந்த நிலையில் சங்கானை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வேளையில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து சங்கானைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலம் மரணவிசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (இ)

# வீட்டு அலுமாரியில் வைத்த தாலிக்கொடி திருட்டு

(கொடிகாமம்)

வீட்டு அலுமாரியில் வைத்த தாலிக்கொடி ஆட்கள் அற்ற வேளையில் திருடப்பட்டுள்ள சம்பவம் ஒன்று நேற்று கொடிகாமத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது, கச்சாய் வீதியிலுள்ள அந்தோனிப்பிள்ளை அன்ரனிக்கா என்ற குடும்பப் பெண்ணின் கணவரும், பிள்ளையும் அருகிலுள்ள தேவாலயத்திற்குச் சென்றவேளையில் பிரஸ்தாபப் பெண் வீட்டைப் பூட்டிவிட்டு திறப்பை பூச்சாடியினுள் மறைத்து வைத்துவிட்டு தாயாரின் வீட்டுக்குச் சென்றுள்ளார். இரண்டு மணி நேரம் கழித்து வீடு திரும்பியவேளை வீட்டுக் கதவு திறந்து விடப்பட்ட நிலையை அவதானித்த அவர் வீட்டுக்குள் சென்று பார்த்த போது அலுமாரியினுள் வைத்த நான்கு பவுண் நிறையுடைய தாலிக்கொடி களவு போயிருந்தது தெரியவந்தது.

இவ்விடயம் குறித்து கொடிகாமம் பொலிஸில் முறையிடப்பட்டதைத் தொடர்ந்து விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. (130)

# பரிசாரகர் பயிற்சி நிறைவு விழா


(யாழ்ப்பாணம்)

பரிசாரகர் பயிற்சி (2013 அணி) நிறைவு விழா இன்று இடம்பெறுகின்றது.

யாழ்.போதனா வைத்தியசாலை பழைய சிறுவர் விடுதி இல. 11 இல் இன்று காலை 10.00 மணிக்கு இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இப்பயிற்சி நிறைவு விழா நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி பி.பவானி, சிறப்பு விருந்தினர்களாக வைத்தியசாலையின் செயலாளர்களான எஸ்.பிரசாத், மோகனதாஸ், கணக்காளர் மு.சுரேஷ்குமார், தலைமை மேற்பார்வையாளர் இ.பாக்கியலிங்கம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (இ)

# அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகளால் நாகர் கோவிலில் முன்னெச்சரிக்கை ஒத்திகை



நாகர்கோவில் வடக்கு பள்ளிக்கூட வைரவர் ஆலயத்திற்கு அருகில் வடமாகாண அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகளால் அனர்த்த எச்சரிக்கை விளக்கமும், அதற்கான ஒத்திகையும் அண்மையில் நடத்தப்பட்டது.

திடீரென்று ஒரு அனர்த்தம் ஏற்பட்டால் பாடசாலை மாணவர்கள் மற்றும் கிராம மக்கள் உடனடியாக என்ன செய்ய வேண்டும். என்று அதற்கான வழிவகையினையும், அச்செயற்பாட்டினை எந்த வகையில் செயல்படுத்துவது எனவும் இந்த ஒன்றுகூடலில் ஒத்திகை பார்க்கப் பட்டது. அச்சமயத்தில் மக்களால் வேண்டுகோள் ஒன்று விடுக்கப்பட்டது. அவ் வேண்டுகோளானது, நாகர்கோவில் வடக்கு பிரதான வீதியாகிய சவேரியார் தேவாலய வீதியில் நீர் அகற்றப்பட வேண்டிய வாய்க்கால் அமைத்து தருவதற்கு எற்பாடு செய்து தருமாறு கேட்டுக்கொண்டதற்கமைவாக அதற்கு சாதகமானதொரு காட்சிதென்பட்டதை அவதானித்த மக்கள் பெரும் சந்தோஷமடைந்துள்ளனர். மாலை 5.00 மணியளவில் இவ் ஒன்றுகூடலும் ஒத்திகை பார்க்கும் நிகழ்வுகள் இனிதே நிறைவுற்றது.


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2491 திகதி 28-12-2013

ஆங்கில எழுத்து: G

வெற்றி எண்கள்: 19 36 42 68

போனஸ் இல: 64

ஜக்பொட் பரிசு ரூ.20,087,475/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 224699 | 20/- | 4,493,980/- |
| 2 இல | 16066 | 100/- | 1,606,600/- |
| 3 இல | 339 | 1,000/- | 339,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8778 | 40/- | 351,120/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 602 | 1,000/- | 602,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 09 | 10,000/- | 90,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 20,087,475/- | - |
| 1 இல + போனஸ் இல | 10662 | 100/- | 1,066,200/- |
| 2 இல + போனஸ் இல | 511 | 500/- | 255,500/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 414 | 200/- | 82,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 18 | 1,500/- | 27,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 262104 | | 10,414,200/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2014.01.01 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 20,700,175/-

வளமான வாழ்வுக்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3112)

# அடிப்படை வசதிகளின்றி இயங்கும்

# அளம்பில் பிரதேச வைத்தியசாலை

(யாழ்.நிருபர்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்றுப் பிரதேசசெயலர் பிரிவிலுள்ள அளம்பில் பிரதேச வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர் இன்மையாலும் அடிப்படை வசதிகள் இன்மையாலும் இப்பிர தேசத்திலுள்ள மக்கள் பல் வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்தில் உள்ள மக்கள் யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து மீள் குடியேறியுள்ள நிலையில் வைத்திய சேவை என்பது மிக அவசியமானதாக உள்ளது.

இந்நிலையில் இவ் வைத்தியசாலையில் நோயாளர்கள் சிரமத்தின் மத்தியில் சிகிச்சை பெற்றுவருவதாக தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக அளம்பில் வடக்கு, அளம்பில் தெற்கு, செம்மலை, உப்பு மாவெளி, குமிழமுனை மேற்கு, குமிழமுனை கிழக்கு, தண்ணிமுறிப்பு, உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்களும் கொக்குத்தொடுவாய் கிழக்கு, கருநாட்டுக்கேணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களும் இவ்வைத்திய சாலையையே பயன்படுத்தி வருகின்றனர்.

ஆனால் இவ்வைத்திய சாலையில் நிரந்தர வைத்தியர் இல்லாமையால் தூர இடங்களில் இருந்து வரும் மக்கள் சிகிச்சை பெற முடியாத நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்திலுள்ள மக்களின் வைத்திய தேவையை கருத்தில் கொண்டு இவ்வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியரை நியமித்து அடிப்படை வசதிகளை ஏற்படுத்துமாறு துறைசார் அதிகாரிகளை மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

# தெல்லிப்பளையில் அறக்கொடை விழா

# அப்பாக்குட்டியின் ஜனனதினத்தன்று

(யாழ்.நிருபர்)

அமரர் சிவத்தமிழ்ச்செல்வி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியின் 89ஆவது பிறந்த நாள் அறக்கொடைவிழா ஜனவரி மாதம் 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி மண்டபத்தில் கலாநிதி ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசியகல்வி நிறுவனத்தின் முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி கு.சோமசுந்தரம் தம்பதியரும் சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா. வைத்திய நிபுணர் த.பேரானந்தராஜா, யாழ்.வலயக்கல்விக் கணிப்பாளர் செ.உதயகுமார் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அன்றையதினம் காலை 8.40 மணிக்கு சிவத்தமிழ்ச் செல்வியின் நினைவாலயத்தில் வழிபாடும் தொடர்ந்து திருமுறைப்பாராயணமும் இடம்பெறும். (10)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் பொது நூலகங்கள் இணைந்து நடாத்தும் வாசிப்பு மாத பரிசளிப்பு விழாவும் உள்ளூராட்சி வார நிறைவு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் சபைத்தவிசாளர் ம.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொன் ஸ்ரன்ரைன் ஜக்சீல் கலந்து கொள்ளவுள்ளார்.

# மழை வீழ்ச்சியின்மையால்

# மீன்குஞ்சுகள் அழிவடையும் அபாயம்

(வவுனியா)

மழை இன்மையால் வவுனியா பகுதிகளிலுள்ள குளங்களில் விடப்பட்ட மீன் குஞ்சுகள் அழிவடையும் அபாயநிலை ஏற்பட்டுள்ளதாக குளங்களை பராமரிக்கும் விவசாய அமைப்புக்கள் கவலை வெளியிட்டுள்ளன.

தற்போது குளங்கள் நிரம்பி வழிகின்ற காலம் ஆனால் குளங்களில் மாடுகள் மேய்கின்றன. மழை காலத்தை எதிர்வுகூறி நன்னீர் மீன்பெருக்கத்திற்கென மீன் குஞ்சுகள் விடப்பட்ட நிலையில் குளங்களில் நீர் வற்றிப் போவதால் இம் மீன்குஞ்சுகளின் பெருக்கம் பாதிக்கப்படுவதுடன் அழிவடையும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

குறிப்பிட்ட அளவு நீரில் வாழும் பெரிய மீன்கள் இச்சிறிய மீன் குஞ்சுகளை உண்பதால் விடப்பட்ட மீன்குஞ்சுகள் அழிவடைந்து போயுள்ளதாகவும் இதனால் எதிர்காலத்தில் மீன்பிடிக்காக குளங்களை குத்தகைக்கு விடுவதில் சிரமங்களை எதிர்நோக்கவேண்டிவரும் அதனால் குறைந்தளவான வருமானத்தையே பெற்றுக்கொள்ள முடியும் என அவ்வமைப்புக்கள் கவலை வெளியிட்டுள்ளன.

சமளங்குளம், மருதங்குளம், இரட்டை பெரிய குளம், பாவற்குளம், வவுனியா குளம் போன்ற குளங்களில் இவ்வாறு மீன்குஞ்சுக்கள் அழிவடையும் அபாயநிலை ஏற்பட்டுள்ளதாக கவலை வெளியிடப்பட்டுள்ளது. (இ)

# ருத்திராபிஷேகம்

# வவுனியாவில் ஏற்பாடு

(யாழ்.நிருபர்)

வவுனியா கோவில்குளம் அருள்மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுவரர் திருக்கோவில் ஒழுங்கு செய்துள்ள ஏகாதசி ருத்திராபிஷேக மஹாயாகம் இன்றும் நாளையும் கோவில் வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணி முதல் விநாயகர் வழிபாடு, புண்ணியாகவாசனம் ஆகியவற்றுடன் ஆரம்பமாகும் கிரியைகள் தொடர்ந்து நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிவரை நடைபெற்று ஏகாதசி ருத்திராபிஷேக மஹாயாகத்துடன் நிறைவுபெறும்.

மஹாயாக கிரியைகளை சிவஸ்ரீநிவாச இரகுநாதக் குருக்களின் ஆசியுடன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ.இரகுநாத கமலேஸ்வரக்குருக்கள் நடாத்துவார். (10)

# வெளிநாட்டு சேவைக்கு

# ஆட்சேர்ப்பு போட்டிப்பரீட்சை

(யாழ்.நிருபர்)

வெளிவிவகார அமைச்சினால் இலங்கை வெளிநாட்டுச் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பட்டம் பெற்ற 22 - 32 வயதுக்கிடைப்பட்ட பட்டதாரிகள் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்ப முடிவுத்திகதி 2014 ஜனவரி 31 ஆகும். மேலதிக விபரங்களை 27.12.2013 அரச வர்த்தமானியைப் பார்வையிடலாம். (10)

# யார் போய்ச் சொல்லுவார்....?




வடக்கு மாகாணசபை மெல்ல மெல்லப் படுத்து விட்டது போல உள்ளது.

தொடக்கத்தில் 'இந்தா பிடி' என்ற மாதிரி அமைச்சர்கள் அங்கும் இங்குமாக ஓடித்திரிந்தார்கள். புல்லுப்பிடுங்கினார்கள். பாலம் திறந்தார்கள். பள்ளிக்கூடங்களுக்கு முன்னே நின்று 'போஸ்' கொடுத்தார்கள். கடற்கரைக்குப்போய்...வள்ளங்களையும் வலைகளையும் புரட்டிப்பார்த்தார்கள். ஆஸ்பத்திரிகளுக்குப்போய் அங்கேயுள்ள பணியாளர்களைச் சந்தித்தார்கள்.

பத்திரிகைகளும் 'வராததுபோல வந்துதித்த மாமணிகள்' என்றமாதிரி இவர்களின் படங்களையும் செய்திகளையும் பக்கம் பக்கமாகப் போட்டுக் கொண்டாடின.

எல்லாம் புதுமாப்பிளைக் காரியம்போல நாலுநாள்தான்.

பிறகு 'பென்சன்காரர் காரியம்' என்றமாதிரி எல்லோரும் படுத்து விட்டார்கள். இப்பொழுது ஒன்றையும் காணவில்லை.

அதிரடி அறிக்கைகளை விட்ட மாகாணசபை உறுப்பினர்கள், தங்களுக்கு என்னென்ன வசதி, வாய்ப்புகள் கிடைக்கும் என்று கிழக்குமாகாணசபை, மேற்கு மாகாணசபை என்று தங்களுக்குத் தெரிந்த சபைகளில் கொஞ்சநாள் விசாரித்துத் திரிந்தார்கள்.

பிறகு சேகரித்த தகவல்களை வைத்துத் தங்களின் காரியங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். பத்திரங்களை நிரப்புவது, சலுகைகளுக்கு விண்ணப்பிப்பது, வேறு வசதிகள் என்ன என்று தேடுவது என்று போகிறது அவர்களுடைய பொழுதுகள்.

'மாகாணசபை எங்கட ஆக்களின்ரை கையில வந்தால் தனிநாடு கிடைச்சமாதிரித்தான்' என்று சொன்னவர்கள் எல்லாம் தலையை வெளியில் காட்டவே வெட்கப்படுகிறார்கள்.

'நாசமாய்ப்போவார் எங்களை ஏமாத்திப் போட்டாங்கள்' என்று ஊர்களில் ஏழை எளிய சனங்கள் திட்டுகிறார்கள்.

இதில் ஒன்றுமே புதினம் இல்லை. தமிழரசுக் கட்சியோ தமிழ்த்தேசியக் கூட்டமைப்போ ஆட்சி அதிகாரத்துக்கு வந்தால் இப்படித்தான் இருக்கும் என்று விசயம் விளங்கியவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

விளங்காதவர்கள் இப்பிடியே காலம் முழுவதும் விரல் சூப்பிக்கொண்டிருக்க வேண்டியதுதான்.

சலுகைகளை வெட்கமில்லாமல் தாங்கள் அனுபவிச்சுக்கொண்டு, சனங்களுக்கு அரச எதிர்ப்புப் பந்தா காட்டும் சீவியமே இந்தச் சிங்கங்களுடையது.

இதை விளங்காத விளக்குமாறுகளை என்னதான் செய்வது?

உண்மையில் விளக்குமாறு என்பது குப்பைகளைக் கூட்டித்தள்ளவேண்டும்.

ஆனால், எங்களின் விளக்குமாறுகளே குப்பையாகிக் கிடக்கின்றன.

மக்கள் சரியாக இருந்தால், மன்னனும் வாலாட்ட முடியாது என்பார்கள்.

உலகில் படிப்பறிவுடைய சமூகங்களில் தமிழ்ச் சமூகமும் ஒன்று என்று சொல்லப்படுவதுண்டு.

ஆனால், அதைப் பார்க்க அப்படியா தெரிகிறது?

இத்தனை ஆண்டுகால அரசியல் அனுபவத்தைக் கூட சரியாக விளங்கிக் கொள்ள முடியாத மக்குச் சமூகமாகவல்லவா தமிழ்ப்பெருங்குடிச் சமூகம் உள்ளது!

சர்வதேச சமூகத்தைப் பற்றிய தமிழ்ச் சமூகத்தின் கணிப்பைச் சொன்னால் சிரிப்புச் சிரிப்பாகத்தான் வருகிறது.

அதையும் விட சில மேதாவிகள், இந்தியாவையும் அமெரிக்காவையும் நம்பி தங்களின் தலையையே அங்கே வைத்திருக்கிறார்கள்.

இதையெல்லாம் என்னவென்று சொல்வது? யாரிடம் சொல்லி ஆறுவது?

தமிழர்களின் தலைவிதி இப்படித்தான் நீளப்போகிறது.

அது இருண்ட பாதையில் குப்புற விழுந்த பயணம்தான்.

என்றாலும் சனங்களுக்குக் கயிறு விடும் கில்லாடிகள் சும்மா இருக்க மாட்டார்கள்.

அவர்கள் தங்களுக்கு ஏற்றமாதிரி பிள்ளையையும் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டி விடுவார்கள்.

அரசாங்கத்தோடு இரகசியமாகப் பின்கதவால் கதைத்துக்கொண்டு, வெளியே இராணுவத்தைச் சீண்டியும் அரசை எதிர்த்து அறிக்கைகளை விட்டும் கொண்டிருப்பார்கள்.

இதில் அவர்கள் நல்ல தேர்ச்சியைப் பெற்றவர்கள்.

தேவையான போது வந்து சனங்களுக்கு ஒருமுறை கலர் காட்டுவதுடன் சரி. மற்றும்படி பழையபடி கோவிந்தாதான்.

இன்னும் ஒரு கலர் விளையாட்டு சில வாரங்களில் நடக்கவுள்ளது.

இந்தியா அன்பளிப்பாக வழங்க இருக்கின்ற வாகனங்களைக் கொண்டு மாகாண அமைச்சர்கள் ஒரு சுற்றுச் சுற்றப்போகிறார்கள்.

அதுவும் கொஞ்ச நாட்களுக்குத்தான். பிறகு அவரகளுடைய பெண்டு பிள்ளைகளுக்காகவே அந்த வண்டிகள் ஓடும்.

இதுதான் வழமை. இதுதானே தமிழ்ப்பெருமை.

காரியங்கள் கடினமாகும் போதெல்லாம் நாம் அமைதியாகவும், மௌனமாகவும் இருக்க வேண்டும். - ஸ்ரீ அன்னை.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## ஜெனீவா முடிந்ததும் என்ன?

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்பதில்லை என்று தீர்மானித்திருக்கிறது தமிழ் தேசியக் கூட்டமைப்பு. ஜெனீவா மாநாட்டில் இலங்கை அரசுக்கெதிராக உலக நாடுகள் கொண்டுவரப் போகும் குற்றவிசாரணைப் பிரேரணைக்கு வலுச்சேர்க்கவே இந்த முடிவை எடுத்திருப்பதாக சுமந்திரன் தெரிவித்திருக்கிறார்.

அதேசமயம், ஈழத் தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்குமாறு சர்வதேச சமூகத்தை வலியுறுத்தி புலம்பெயர் தமிழ் அமைப்புகள் ஜெனீவாவில் நடத்தவுள்ள மாபெரும் எழுச்சி மாநாடு மற்றும் கவனஈர்ப்புப் போராட்டங்களை நாம் வரவேற்கின்றோம் எமது ஆதரவையும் வழங்குவோம் என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியிருக்கிறார்.

புலம்பெயர் தமிழ் குழுக்களின் தனிநாட்டு நிகழ்ச்சிநிரலுக்கு மறுப்பாக நடந்துகொள்ளக் கூடாது என்பதற்காகவே நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை கூட்டமைப்பு நிராகரித்து வருகிறது என்பது உறுதியாகிறது. புலம்பெயர் குழுக்களின் வழியிலேயே தமிழ்மக்களின் தீர்வுப்பிரச்சினையை கூட்டமைப்பு அணுகிவருகிறது என்பதும் தெளிவாகிவிட்டது.

புலம்பெயர் குழுக்களிடமுள்ள தனிநாட்டு எண்ணத்தோடு நமது மக்களின் பிரச்சினைக்கு இன்று தீர்வைக் காணமுடியுமா என்பதை மக்களுக்கு விளக்க வேண்டியது இங்குள்ள அரசியல் நோக்கர்கள் சிந்தனைத் தரப்புகளின் கடமை.

அதை அவர்களிடம் விட்டுவிட்டு, நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்பது ஒரு ஏமாற்று, அதில் பங்கேற்பது முட்டாள்தனம் என்று கூறும் கூட்டமைப்பு, இதுவரைகாலமும் இந்தப் பிரச்சினையில் செய்துவந்த புத்திசாலித்தனமான காரியங்கள் எவை என்றும் கொஞ்சம் திரும்பிப் பார்க்கலாம்.

1976 மே 14 ஆந் திகதி வட்டுக்கோட்டை மகாநாட்டில் தனிநாட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றி அழிவாட்டத்தை ஆரம்பித்து வைத்தது இளைஞர்களோ இயக்கங்களோ அல்ல, அப்போது கூட்டணியாக உருமாற்றம் பெற்றிருந்த தமிழரசுக் கட்சியினர்தான்.

தனிநாட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றியபின் இந்தத் தலைவர்கள் செய்த முதல் காரியம், இவர்களது பங்காளிக் கட்சியான ஐ.தே.க. அரசாங்கம் கொண்டுவந்த, அதிகாரங்கள் அற்ற மாவட்ட சபையை ஏற்று அதற்கான தேர்தலில் போட்டியிட்டதே.

பண்டா–செல்வா ஒப்பந்தம், வடக்கு–கிழக்கு மாகாணசபை, சந்திரிகாவின் தீர்வுத் திட்டம் ஆகியவற்றில் ஐ.தே.க.வுடன் இணைந்து செயற்பட்டுக் குழப்பியதே இவர்களது புத்திசாலித்தன அரசியல்.

வடக்கு–கிழக்கு மாகாணசபை செயற்படாத நிலையை உருவாக்கிய பிரேமதாசாவுக்கு மௌன ஆதரவு, சமஷ்டிக்கு நெருக்கமான சந்திரிகாவின் தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் எரிக்க ஐ.தே.க.வுடனேயே துணைநின்றார்கள்.

புலிகளின் தயவால் பெற்றுக்கொண்ட 22 எம்பிக்களுமாக மக்களை முள்ளிவாய்க்காலுக்கு அனுப்பிவிட்டு வெளிநாடுகளுக்கு ஓடி ஒளித்துக் கொண்டதுதானே இவர்களது கடைசிப் புத்திசாலித்தனமாக இருந்தது.

இன்று 13 பாராளுமன்ற உறுப்பினர்களையும், வடக்கு மாகாணத்தில் 30 மாகாண சபை உறுப்பினர்களையும், கிழக்கு மாகாணத்தில் 11 உறுப்பினர்களையும், உள்ளூர் ஆட்சி சபைகளில் 400 வரையிலான உறுப்பினர்களையும் இவர்கள் கொண்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் அரச சம்பளம், அரச பாதுகாப்பு சலுகைகள், சொகுசு வாகனங்கள், மானியங்கள், இலவச பிரயாணங்கள் போன்ற எல்லாவற்றையும் மக்களின் பெயரால் அனுபவித்து வருகிறார்கள்.

இவ்வளவு பொறுப்புகளையும் இவர்களிடம் கொடுத்திருந்த போதும், தமிழ் மக்கள் அரசியற் பலமும் இழந்து வாழ்வாதார தேவைகளுக்கே நித்தமும், எதற்கும், எல்லோரிடமும் யாசிக்கும் இன்றைய கேவலமான நிலைக்கு யார் காரணமானவர்கள் என்றால் அதற்கு பொறுப்பு கூற யாரும் இல்லை. இவர்கள் செய்து கொண்டிருப்பது, உணர்ச்சிகரப் பேச்சுக்களால் மக்களைத் தேர்தல்களுக்காக ஏமாற்றிவரும் அரசியல் மட்டுமே! - ஆசிரியர்.

# தெற்கில் பரவுகிறது தேர்தல் ஜுரம்

# ஜனவரியில் மேல்மாகாணசபை கலைப்பு

(கொழும்பு)

தென் மற்றும் மேல் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறும் என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த இரண்டு மாகாண சபைகளும் பெரும்பாலும் ஜனவரி மாதம் 11ஆம் திகதி கலைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஜனவரி மாதம் 3ஆம் திகதி மாகாணசபைகளை கலைத்து மார்ச் மாதம் 3ஆம் திகதி தேர்தல் நடாத்த முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது.

தலவில தேவாலய திருவிழா நடைபெறவுள்ள காரணத்தினால் தேர்தலை தாமதப்படுத்த தீர்மானிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. தேவாலய திருவிழாவன்று தேர்தலை நடத்தினால் பெரும் எண்ணிக்கையிலான வாக்காளர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ள மாட்டார்கள் என்பதனால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. சுப நேரமொன்றில் மாகாணசபைகளை கலைப்பது குறித்த ஆவணத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கையொப்பமிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, மாகாண சபைத் தேர்தலில் இரண்டு நடிகைகளை களமிறக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தடை செய்யப்பட்ட பிளைங் பிஸ் என்னும் திரைப்படத்தின் நாயகி கயேஷா பெரேராவை களமிறக்குவது குறித்தும் ஆராயப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதேவளை, வெள்ளாமை களவாடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்பட்ட பிரபல பாடகர் அமல் பெரேராவை மேல் மாகாணசபையின் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராக நிறுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும், வேட்பாளர்கள் தொடர்பில் இதுவரையில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என குறிப்பிடப்படுகிறது.

# நுகர்வோர் சட்ட அமுலாக்கம் பண்டிகைக்காலத்தில் தீவிரம்

(கொழும்பு)

நுகர்வோர் சட்டத்தை மீறிய வர்த்தகர்களை கைது செய்வதற்காக இம்மாதம் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்போது பல வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அதிகார சபை அறிவித்துள்ளது.

பண்டிகைக் காலத்தில் நுகர்வோருக்கு தரமான பொருட்களை நியாயமான விலையில் பெற்றுக்கொடுக்கும் வகையில் இந்த சுற்றிவளைப்புக்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

மரக்கறி மற்றும் பழவகைகள் தரமான முறையில் நுகர்வோருக்கு விநியோகிக்கப்படுகின்றனவா என்பது தொடர்பில் இதன்போது விசேட கவனம் செலுத்தப்படுகின்றன.

இதேவேளை, இரசாயன பதார்த்தம் பயன்படுத்தப்பட்டு பழுக்கவைக்கப்பட்ட சுமார் 75 ஆயிரம் கிலோகிராமிற்கும் அதிகமான பழவகைகள் கொழும்பு மெனிங் சந்தையில் கடந்த வாரம் கைப்பற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சதிகாரர்களை கடலில் போடுங்கள் ஐ.தே.கட்சிக்குள் நதீஷா கோஷம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் சதித்திட்டம் போடும் நபர்களை தூக்கி கடலில் போட வேண்டும் என அந்தக் கட்சியில் புதிதாக இணைந்து கொண்ட பிரபல நடிகை நதீஷா ஹேமமாலி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உட்கட்சி பிரச்சினை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கட்சியின் தலைமைத்துவச் சபையை விமர்சிக்கும் நபர்களுக்கு அடுத்த பிரதான தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை தோற்கடிக்கும் தேவையுள்ளது.

அவ்வாறு தோற்கடித்த பின்னர் ரணிலுக்கு முடியாது என்று நாங்கள் கூறியது சரிதானே என்று அவர்கள் கூறுவார்கள்.

தமது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலை வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்பதே கட்சிக்குள் இருந்து கட்சியை விமர்சிக்கும் நபர்களின் தேவையாக உள்ளது. இவர்கள் 35 இலட்சம் அப்பாவி வாக்காளர்களின் எதிர்பார்ப்பை அழிக்க முயற்சித்து வருகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சி எ[illegible] கப்பலை மூழ்கடிக்க நினைக்கும் நபர்கள் இதனை தொடர்ந்தும் செய்து வந்தால், அப்படியான சதிகாரர்களை தூக்கி கடலில் வீச வேண்டும் என்றார்.

நதீஷா ஹேமமாலி பெயர் குறிப்பிட்டு கூறாத போதிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவச் சபையை சஜித் பிரேமதாச மற்றும் தலதா அத்துகோரள ஆகியோரே கடுமையாக விமர்சித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வேலியே பயிரை மேயும் அபாயம் வலுவடைகிறது குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலஞ்ச ஊழலுக்கு எதிரான ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் நீதிபதி பாலபட்ட பெந்தியின் மீது தொடர்ந்தும் ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த வாரம் நாடாளுமன்றத்திலும் இந்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் பிரபல ஆங்கில செய்தித்தாளான நேஷன் பாலபட்டபெந்தி வாகன விற்பனையாளர் ஹர்ச பிரபாத் என்பவருடன் மேற்கொண்ட தொலைபேசி உரையாடலை பதிவு செய்து அதன் விபரங்களை வெளியிட்டுள்ளது.

பிரபாத்துக்கு எதிரான வழக்கை விசாரணை செய்யும் பாலபட்டபெந்தி அவருடன் மேற்கொண்ட தொலைபேசி அழைப்பு குறித்தே இந்த செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

எனினும் இந்தக்குற்றச்சாட்டை பாலபட்ட பெந்தி மறுத்துள்ளார்.

நீதிபதி பாலபட்டபெந்தி பிரபாத்திடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட காரையே பயன்படுத்தி வருவதாகவும் அந்த ஆங்கில செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது. இதேவேளை இலங்கையின் சுங்கப்பணிப்பாளர் நாயகம் நெவில் குணவர்த்தனவும் ஹர்சா பிரபாத்துடன் நெருங்கிய தொடர்பை கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டிப்ளோமா கற்கை

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தால் தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் நடத்தப்படும் தேசிய தொழிற்தகைமை டிப்ளோமா கற்கை நெறிகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த.உயர்தரத்தில் சித்தி பெற்றவர்கள் இக்கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்ப முடிவுத்திகதி 28.01.2014ஆகும். மேலதிக விபரங்களை 27.12.2013இல் வெளிவந்த அரச வர்த்தமானிப் பத்திரிகையில் பார்வையிட முடியும். (10)



**சங்கர் கேட்டபடி கப்பல் ஒன்றை அனுப்பி வைக்குமாறு பிரபாகரன் கே.பியிடம் சொன்னார். டீலை இதுவரை முடித்துவிட்டு, சென்னையில் தங்கிவிட சங்கர் விரும்பவில்லை. எனவே அந்தக் கப்பலில் தாமும் செல்ல வேண்டும் என்றார். புலிகளின் திருவான்மியூர் எம்.ஓ அலுவலகத்தில் பொறுப்பாளராக இருந்த மனோமாஸ்டர் அவர்தான் அந்த நாட்களில் பிரபாகரனுக்கு டெக்னிகல் ஆலோசகராக செயல்பட்டவர். சங்கரும் கப்பலில் போவதுதான் நல்லது என்று கூறிய மனோ மாஸ்டர் நானும் சங்கருடன் போகிறேன் என்றார். சங்கர்,மனோ மாஸ்டர் ஆகிய இருவருடன் தினேஷையும் அழைத்துச் செல்லுமாறு பிரபாகரன் கூறினார். இந்த தினேஷ் தமிழ்ச்செல்வன் அல்ல. (தமிழ்ச்செல்வனின் ஆரம்பகால பெயரும் தினேஷ்) இவர் வேறு. அப்போது சென்னையில் பிரபாகரனின் கம்யூனிகேஷன் தொடர்பாளராக இருந்தவர் இந்த தினேஷ். ஒரு காரியத்துக்கு ஒருவரை அனுப்பினால், தமது நம்பிக்கைக்குரிய மற்றொருவரையும் சேர்த்து அனுப்புவது பிரபாகரனின் வழக்கம். அந்த வகையில் தினேசும் இதில் இணைக்கப்பட்டார்.**

# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்

## 59

**வே. அர்ச்சுணன்**

விடுதலைப் புலிகளின் விமானப் படைத் தளபதி சங்கரிற்கு ஆயுத இறக்குமதியும், ஆயுத விநியோகமும் புது அனுபவமாக இருந்த போதிலும் இந்த விடயத்தில் தான் எப்படியாவது சாதனை படைக்க வேண்டும். இயக்கத் தலைவர் வே.பிரபாகரனிடமிருந்து பாராட்டுப் பெறவேண்டும் இயக்கத்தில் தனது மதிப்பீட்டை மேலும் உயர்த்திக் காட்ட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். ஆனால் சங்கர் ஆயுத விநியோகத்தில் வெற்றிபெற்றாரோ அல்லது தோல்வி அடைந்தாரோ என்பதற்கு அப்பால் சங்கர் நினைத்தது போன்று அவரால் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் ஏனைய தளபதிகள் போன்று பொதுமக்கள் மத்தியில் பிரபல்யமாகத் திரிவதற்கும் பொதுமக்களிடத்தில் சென்று கூடிக் குலாவுவதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இதற்குப் பிரதான காரணம் புலிகளின் விமானப் படை கட்டமைப்பின் முழுப்பொறுப்பும் சங்கரிடம் ஒப்படைக்கப்பட்டு மிகவும் கவனமாகவும், இரகசியமாகவும் இந்த கட்டமைப்பு செயற்படவேண்டிய தேவை காணப்பட்டமையால் கடற் புலிகளின் விசேட தளபதி கேணல் சூசை போன்று அல்லது புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் பொட்டுஅம்மான் போன்று, அல்லது வடமுனைப் போர்த்தளபதி தீபன் போன்றோ, அல்லது ஏனைய தளபதிகள் போன்றோ இல்லாமல், சங்கரால் அவர் கிளைமோர் தாக்குதலில் கொல்லப்படும் வரை அவரது செயற்பாடுகள் அனைத்தும் ரகசியமாகவே பேணப்பட்டு வந்தன.

விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகளைத் தவிர சங்கரின் செயற்பாடுகள் அல்லது சங்கர் என்று ஒருவர் விமானப்படைத் தளபதியாக விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருக்கிறார் என்பது கூட சில சாதாரண போராளிகளுக்கு அவரது சாவு அறிவித்தல் வெளியிடப்படும் வரை தெரியாத விடயமாகவே இருந்து வந்தது. இந்த நிலையில் சங்கர் அல்ஜீரிய காரருடன் மேற்கொண்டுவந்த ஆயுத இறக்குமதி டீல் எந்த நிலையில் ஆரம்பத்தில் இருந்தது என்பதை மேலோட்டமாக பார்த்துச் செல்வது பொருத்தமானதாக இருக்கும்.

பிரபாகரன் கே.பியிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆயுத விலைப் பட்டியலை ஒருவாறு சங்கரிடம் அனுப்பி வைத்தார். இந்தப் பட்டியலை வைத்துக்கொண்டு விலை பேச ஆரம்பித்தார்கள். ஆனால் அல்ஜீரிய காரர் குறிப்பிட்ட விலைகள் இவர்களை கடும் சந்தோசத்தில் திளைக்கச் செய்தது. ஏனெனில் கே.பி தலைவரிடம் வழங்கிய விலைப்பட்டியலுக்கும் அல்ஜீரிய காரரின் விலைப்பட்டியலுக்குமிடையில் நீண்ட இடைவெளியும், விலை வித்தியாசங்களும் காணப்பட்டன.

உடனே சங்கர், பிரபாகரனை தொடர்பு கொண்டார். கே.பி ஆயுதங்களுக்கு லெபனானில் அதிக விலை கொடுத்து ஏமாந்து விட்டார். அவர் 1800 அமெரிக்க டொலருக்கு வாங்கிய ஆர்.பி.ஜி யை இங்கே ஒருவர் 1675 டொலருக்கு கொடுக்க தயாராக உள்ளார் என்றார். உடனடியாகவே ஆயுதங்களை வாங்கி அனுப்புமாறு பிரபாகரன் உத்தரவிட்டார்.

அமைச்சரும், சங்கருமாக அல்ஜீரியாக்காரருடன் டீல் பேசி முடித்தார்கள். மொத்தம் 1.5 மில்லியன் பிரிட்டிஷ் பவுண்ட்ஸ் முன்பணம் கொடுத்துவிட வேண்டும். புலிகள், தமது சொந்த கப்பலை பாதிதூரம் கொண்டுவர வேண்டும். செங்கடலில், சுயஸ் கால்வாய் இணைப்பு ஏற்படும் Gulf of Suez பகுதிக்கு புலிகளின் கப்பல் வந்து காத்திருக்க வேண்டும். அல்ஜீரியாக்காரரின் ஆயுதக் கப்பல் அங்கே வந்து சேரும். கடலில் வைத்தே ஆயுதங்களை அந்தக் கப்பலில் இருந்து இந்தக் கப்பலுக்கு மாற்றி விடுவார்கள். Gulf of Suez பகுதிக்கு ஆயுதக் கப்பல் வந்து, ஆயுதங்களை சரிபார்த்ததும், மீதி அரை மில்லியன் பவுண்ட்ஸை இலண்டனில் வைத்து ட்ரவலர்ஸ் செக்காக கொடுத்துவிட வேண்டும். அந்த பணம் கிடைத்த பின்தான், புலிகளின் கப்பலில் ஆயுதங்கள் ஏற்றப்படும். இதுதான் டீல்.

பிரபாகரனின் ஒப்புதலும் கிடைக்கவே, முன்பணம் ஒரு மில்லியன் அல்ஜீரியாக்காரருக்கு கொடுக்கப்பட்டது. மீதி அரை மில்லியன் பவுண்ட்ஸை ட்ரவலர்ஸ் செக்ககாக எடுத்து அமைச்சர் தமது இலண்டன் வீட்டில் வைத்துக் கொண்டார். செங்கடலுக்கு கப்பலை கொண்டுவரும் ஏற்பாடுகளை செய்ய சங்கர் மீண்டும் சென்னை திரும்பினார்.

புலிகளின் கப்பல் போக்குவரத்து அப்போது கே.பி யின் வசம் இருந்தது. அதனால் சங்கர் கேட்டபடி கப்பல் ஒன்றை அனுப்பி வைக்குமாறு பிரபாகரன் கே.பி.யிடம் சொன்னார். டீலை இதுவரை முடித்துவிட்டு, சென்னையில் தங்கிவிட சங்கர் விரும்பவில்லை. எனவே அந்தக் கப்பலில் தாமும் செல்ல வேண்டும் என்றார்.

புலிகளின் திருவான்மியூர் எம். ஓ அலுவலகத்தில் பொறுப்பாளராக இருந்த மனோமாஸ்டர் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டோம். அவர்தான் அந்த நாட்களில் பிரபாகரனுக்கு அருகே டெக்னிகல் ஆலோசகராக செயல்பட்டவர். சங்கரும் கப்பலில் போவதுதான் நல்லது என்று கூறிய மனோ மாஸ்டர் நானும் சங்கருடன் போகிறேன் என்றார். சங்கர் மனோ மாஸ்டர் ஆகிய. இருவருடன் தினேஷையும் அழைத்துச் செல்லுமாறு பிரபாகரன் கூறினார். இந்த தினேஷ் தமிழ்ச்செல்வன் அல்ல. (தமிழ்ச்செல்வனின் ஆரம்பகால பெயரும் தினேஷ்) இவர் வேறு. அப்போது சென்னையில் பிரபாகரனின் கம்யூனிகேஷன் தொடர்பாளராக இருந்தவர் இந்த தினேஷ்.

ஒரு காரியத்துக்கு ஒருவரை அனுப்பினால், தமது நம்பிக்கைக்குரிய மற்றொருவரையும் சேர்த்து அனுப்புவது பிரபாகரனின் வழக்கம். அந்த வகையில் தினேசும் இதில் இணைக்கப்பட்டார். கே.பி தம்மிடம் இருந்த கப்பல் ஒன்றை சிங்கப்பூரில் இருந்து அனுப்பினார். அந்தக் கப்பல்செங்கடல் நோக்கிச் செல்லுமுன் இந்தியக் கடல் பகுதிக்குள் வந்தது. சென்னையில் இருந்து சங்கர், மனோ மாஸ்டர், தினேஷ் ஆகியோர் ஒரு படகு மூலமாக சென்று இந்தக் கப்ப லில் ஏறிக் கொண்டனர். கப்பலில் சுமார் 20 விடுதலைப்புலிகள் மற்றும் மாலுமிகள் இருந்தனர். கப்பல் செங்கடலை நோக்கி செல்ல தொடங்கியது.

விடுதலைப் புலிகளுக்காக இலண்டனில் அல்ஜீரியாகாரரிடம் பேரம் பேசி ஒரு மில்லியன் பவுண்ட்ஸ் முற்பணம் கொடுத்துவிட்டு ஆயுதங்களைக் கொண்டுவர புறப்பட்டது சங்கர் தலைமையிலான குழு. சிங்கப்பூரில் நின்ற புலிகளின் கப்பலை உடனடியாக அனுப்பிவைக்குமாறு பிரபாகரன் கூறியதை அடுத்து அந்தக் கப்பலும் புறப்பட்டது. 20 ஆண்டுகளுக்கு முன் ஒன்றரை மில்லியன் பவுண்ட்ஸ் என்பது மிகப்பெரிய தொகை. அவ்வளவு பணம் கொடுத்து வாங்கப்படும் ஆயுதங்களை மிகக்கவனமாக கொண்டுவந்து சேர்க்க வேண்டும் என்பதால் புலிகளின் கப்பல் ஒப்பரேசனில் இருந்த அதி திறமைசாலிகளை அனுப்பிவைக்குமாறு கே.பி யிடம் பிரபாகரன் கூறியிருந்தார்.

இந்த நிலையில் சின்னவர் என அழைக்கப்படும் ஒருவர்தான் கப்டன் ஆக அனுப்பிவைக்கப்பட்டார். இந்த சின்னவர் வடமராட்சிக் கிழக்கை சொந்த இடமாகக் கொண்டவர். விடுதலைப் புலிகள் இயக்கத்தில் ஏற்பட்ட உட்கட்சி உடைவு காரணமாக மாத்தையா குறூப்பிற்கும் பிரபாகரனுக்குமிடையில் ஏற்பட்ட பிணக்கினைத் தொடர்ந்து மாத்தையா அணியுடன் கைது செய்யப்பட்ட சின்னவர் பின்னைய நாட்களில் காணாமல் போயிருந்தார். விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு, தேசத்துரோகம் புரியப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டு காணாமல்போகச் செய்யப்பட்டார்.

கப்டன் சின்னவர் செலுத்திய கப்பலில் இன்ஜினியராக செயற்பட்டவர் சாந்தன் என்பவர். இவர்களது கப்பல் செங்கடல் நோக்கி செல்வதற்கு முன்னர் இந்தியக் கடற்பகுதிக்குள் சங்கர், மனோ மாஸ்டர், தினேஷ் ஆகியோர் ஒரு படகு மூலமாக சென்று இந்தக் கப்பலில் ஏறிக்கொண்டனர். விடுதலைப் புலிகளும் மாலுமிகளுமாக மொத்தம் 20 பேர் இக்கப்பலில் இருந்தனர். இலண்டனில் உள்ள அல்ஜீரியாகாரர் சொன்னபடி செங்கடல் நோக்கி தங்களது கப்பலை செலுத்துமாறு சங்கர் கூறினார். இதற்கு இணங்க கப்பல் செங்கடலை நோக்கி சென்றுகொண்டிருந்தது.

செங்கடலில் காத்திருந்த இவர்களுக்கு சாதகமான நிலையில் அடுத்த கட்டம் இருந்ததா? அல்லது இவர்களுக்கு அல்ஜீரியா காரர்களும் அல்வா கொடுத்தனரா? என்பதை தமிழ் ஊடகங்கள் அன்றைய நாட்களில் அறிந்து கொண்டனவா? அறிந்தும் அறியாதது போன்று நடந்து கொண்டனவா என்பதை தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்)

# "தெற்கு உள்ளூராட்சி சபைகளின் பட்ஜட்" தோல்விக்கு காரணம் என்ன?

## விசாரணையில் வெளிப்பட்டது அதிர்ச்சித் தகவல்

உள்ளூராட்சி மன்ற வரவு செலவுத் திட்டங்கள் படுதோல்வியடைந்தமைக்கு உட்கட்சிப் பூசலே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆளும் கட்சியின் முக்கிய பல உள்ளூராட்சி மன்றங்களின் வரவு செலவுத் திட்டங்கள் அண்மைக்காலமாக தோற்கடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த தோல்வியின் பின்னணியில் ஆளும்கட்சியின் சிலர் செயற்பட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. தோல்விக்கான காரணம் தொடர்பில் ஜனாதிபதி விசாரணைகள் மூலம் இந்தச் சதித்திட்டம் அம்பலமாகியுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் வரவு செலவுத் திட்ட தோல்வியின் பின்னணியில் சில ஆளும் கட்சியின் முக்கிய அமைச்சர்கள் செயற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை உதாசீனம் செய்யும் வகையில் அண்மையில் மேலும் சில உள்ளூராட்சி மன்றங்களின் வரவு செலவுத் திட்டங்கள் தோல்வியடைந்துள்ளன.

வரவு செலுவுத் திட்டத்தை தோற்கடிக்கும் ஆளும் கட்சி உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்ட நிலையில் வரவு செலவுத் திட்டங்கள் தோறகடிக்கப்பட்டன.

வரவு செலவுத் திட்டம் தோலவியடைந்ததன் பின்னணியை கண்டறிந்து அதற்கான சதித் திட்டத்தில் ஈடுபட்டவர்களை தராதரம் பாராது தண்டிக்க வேண்டுமென ஆளும் கட்சி அமைச்சர் ஒருவர் வலியுறுத்தியுள்ளார். கடந்த ஒரு மாத காலப்பகுதியில் 19 உள்ளூராட்சி மன்றங்களின் வரவு செலவுத் திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது

# உளவுத்துறையில் ஊடுருவல்

# உதவி என்ற பெயரில் தகவல் திருட்டு

(கொழும்பு)

நாட்டின் உளவுத்துறை கட்டமைப்பை சீர்குலைப்பதற்கு வெளிநாட்டு உறவு அமைப்புக்கள் சில சதி செய்துவருவதாக தகவல்கள் கசிந்துள்ளன.

இதனால் நாட்டின் படைத் துறை அதிகாரிகள் மட்டத்தில் பெரும் அதிர்வுகளைத் தோற்றுவிக்கிறது. நாட்டின் பாதுகாப்பு பொருளாதாரம் உட்பட முக்கிய துறைகள் பலவற்றின் தகவல்களும் உளவு அதிகாரிகளது தகவல்களும் இப்போது திருடப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

நாட்டின் உளவுத்துறையை குழப்பும் நோக்கில் சில வெளிநாட்டு உளவுப் பிரிவுகள் செயற்பட்டு வருகின்றன என்றும் இப்போது தகவல்கள் தெரிவிக்கின்றன.

உளவுத் துறையினருக்கு பயிற்சி வழங்கும் போர்வையில் இந்தச் சதித்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

உளவுப் பணிகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் மற்றும் அதிகாரிகளின் திறமைகளை மேம்படுத்துவதாகத் தெரிவித்து சில வெளிநாட்டு சக்திகள் தேவையின்றி உளவுச் சேவையில் தலையீடு செய்கின்றன. உளவுத்துறை அதிகாரிகளின் தகவல்கள் இரகசியமாக திரட்டப்படுகின்றன.

பலம்பொருந்திய இரண்டு நாடுகளினால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர் வரும் ஜனவரி மாதம் முதல் உளவுப் பிரிவினருக்கு வெளிநாட்டு நிறுவனங்களினால் அளிக்கப்படும் பயிற்சிகள் நிறுத்தப்படவுள்ளன.

உளவுப் பிரிவில் கடமையாற்றுவோரை அடையாளம் காணவும், அவர்களை தங்கள் தேவைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளவும் சில நாடுகள் முனைப்பு காட்டி வருவதாக குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

# இந்தியத் தம்பதியினர் கைது

## வியாபாரம் செய்ததால் வினை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் துறைநீலாவணை பகுதியில் இந்திய பிரஜைகள் இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பகல் கைது செய்யப்பட்ட இவர்கள் மாலை களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சுற்றுலா வீசாவில் வந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் குற்றச்சாட்டு இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டவர்களை, இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தர விட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் எந்தையூரைச் சேர்ந்த கோப்பையன் மாரியப்பன் (வயது 39), மாரியப்பன் சமண்ணதேவி (வயது 39) ஆகியோரே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்வும் இவர்கள் இருவரும் கணவன்- மனைவி எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# இலங்கையின் பிந்திய களநிலவரம்

# அறிக்கை தயாரிக்கிறார் நவிப்பிள்ளை



இலங்கையின் பிந்திய கள நிலமை தொடர்பான அறிக்கை ஒன்றை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் தயாரித்து வருகிறார்.

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை எதிர்வரும் மார்ச் மாதம் 26ஆம் திகதி இந்த அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளார். ஜெனீவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப பேரவை அமர்வுகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது. அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டதன் பின்னர் பகிரங்க கருத்துப் பரிமாறல் நடைபெறவுள்ளது.

இலங்கை அரசாங்கம் அதன் பக்க நியாயங்களை முன்னிலைப்படுத்த சந்தர்ப்பம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த செப்ரெம்பர் மாதம் நவநீதம்பிள்ளை இலங்கை தொடர்பில் வாய்மொழிமூல அறிக்கை ஒன்றை மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் சமர்ப்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கருத முடியவில்லை என நவநீதம்பிள்ளை தெரிவித்திருந்தார்.

இதேவேளை, எதிர்வரும் மார்ச் மாத அமர்வுகளில் பிரித்தானியா இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றும் முனைப்புக்களில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேற்குலக நாடுகளின் ஒத்துழைப்புடன் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# வாகன தரிப்பிடத்துக்கு கிளம்புகிறது எதிர்ப்பு

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள ஒலகோட் மாவத்தை உலக சந் தைக்கு முன்னால் வாகன தரிப்பிடம் ஒன்றை நிர்மாணிப்பது தொடர்பில் சிக் கல்கள் எழுந்துள்ளன.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றுமுன்தினம் உலக சந்தையின் வர்த்தகர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தி இருந்தனர். பாதையோரங்களில் இவ்வாறு வாகன தரிப்பிடம் அமைக்கப்படுவதானது, பாதசாரிகளுக்கு மாத்திரம் இன்றி, வர்த்தகர்களுக்கும் இடையூறாக அமையும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும் மாநகர முதல்வர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தெரிவிக்கையில் சுயத்தொழிலாளர் சங்கத்தின் தலைவர் மகிந்த கஹந்தகமவின் வாகனத்தை நிறுத்துவதற்காக இந்த வாகனத தரிப்பிடம் அமைக்கப்படுவதாக தெரிவித்தார்.

# புலமைப் பரீட்சையை இரத்துச் செய்ய அனுமதி வழங்கியது யார்?

## ஜே.வி.பி. போர்க்கொடி

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பில் நாடாளுமன்ற விவாதம் நடாத்தப்பட வேண்டுமென ஜே.வி.பி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையை இரத்துச் செய்ய கல்வி அமைச்சு தீர்மானம் எடுத்துள்ளது.

நாடாளுமன்றிடமோ அல்லது நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றிடமோ கேட்காது எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து விரிவான விவாதம் நடாத்தப்பட வேண்டும். நாட்டின் முக்கியமான கல்வித் தீர்மானங்களை ஒரு கல்வி அமைச்சரோ அவரது உதவியாளர்களோ எடுக்க முடியாது.

கிராம பாடசாலைகளை சேர்ந்த மாணவ மாணவியர் வசதிகள் கூடிய நகர பாடசாலைகளுக்குச் செல்ல புலமைப் பரிசில் பரீட்சை வழியமைத்துக் கொடுப்பதாக்த் தெரிவித்துள்ளார்.

இலவச கல்வியின் உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஆனையிறவு ரயில் நிலையத்துக்கு புதிய பெயர் சூட்ட முயற்சி

## முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

ஆனையிறவு ரயில் நிலையத்துக்கு புதிய பெயர் சூட்ட முன்மொழிவு சமர்ப்பிக்கப் பட்டிருக்கிறது.

இந்த முன்மொழிவை அமைச்சர் பந்துல குணவர்த்தன சமர்ப்பித்திருக்கிறார்.

இதன்படி, ஆனையிறவு ரயில் நிலையம் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் இருந்து திரட்டும், 15.5 மில்லியன் ரூபாவைக் கொண்டு, புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன இந்தப் புனரமைப்புத் திட்டத்துக்கான யோசனைக்கு ஒப்புதல் பெற்றுள்ளார்.

இதன் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு இராணுவப பொறியியல் படைப்பிரிவின் உதவியைப் பெறுவது குறித்து



பேச்சுக்கள் நடாத்தப்படுகின்றன.

கிளிநொச்சிக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான ரயில் சேவை ஆரம்பிக்கப்படும் போது, ஆனையிறவு ரயில் நிலையத்தின் பெயரை சேனஷசக்க தொட்டு பொல என்று மறுபெயர்சூட்ட வேண்டும் என்றும கல்வி அமைச்சர் மும்முரமாக உள்ளார்.

# தங்கம் கடத்திய இலங்கையர் கைது

கொழும்பில் இருந்து சென்னைக்கு ரூ.50 இலட்சம் பெறுமதியான தங்கக்கட்டிகளை மலவாசலில் மறைத்து வைத்து கடத்திச் சென்ற 4 இலங்கை இளைஞர்கள் கைது செய்யப்படடனர்.

சென்னை மீனம்பாக்கம் அண்ணா பன்னாட்டு விமான நிலையத்துக்கு கொழும்பில் இருந்து பெரும் அளவில் தங்கம் கடத்தி வரப்படுவதாக விமான நிலைய சுங்க இலாகா அதிகாரிகளுக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. அதன்பேரில் விமான நிலைய சுங்க இலாகா அதிகாரிகள், இலங்கையில் இருந்து சென்னை வந்த 3 விமானங்களை தீவிரமாக கண்காணித்தனர்.

அந்த விமானங்களில் சுற்றுலா வீசாவில் வந்த 4 இலங்கை வாலிபர்களை சந்தேகத்தின் பேரில் பிடித்து



விசாரித்தனர்.

அதில் அவர்கள், கொழும்பு நகரைச் சேர்ந்த அப்துல் அலி (வயது 40), யாழ்ப்பாணத்தை சேர்ந்த விக்னேஷ் (29), கண்டியை சேர்ந்த ஷாஜகான் (27), முகமது யூசுப் (35) எனத் தெரியவந்தது.


அவர்களிடம் இருந்த சூட் கேஸ்களை அதிகாரிகள் பிரித்து சோதனை செய்தனர். ஆனால் 4 பேரிடமும் எந்தவித பொருட்களும் இல்லை.

ஆனால் அவர்களின் நடையில் சந்தேகம் வந்ததால் 4 பேரையும் தனியறைக்கு அழைத்துச் சென்று விமான நிலைய மருத்துவ குழுவினர் உதவியுடன் சோதனை செய்தனர்.

அப்போது 4 பேரின் ஆசனவாய் பகுதியில் தலா 400 கிராம் தங்க கட்டிகள் மறைத்து வைத்து இருந்ததை கண்டுபிடித்தனர். ரூ.50 இலட்சம் மதிப்புள்ள 1 கிலோ 600 கிராம் தங்கக் கட்டிகளை அதிகாரிகள் கைப்பற்றினார்கள். ரூ.5 ஆயிரத்துக்காக ஆசைப்பட்டு 4 பேரும் தங்கக் கட்டிகளை கொழுமபில் இருந்து கடத்தி வந்துள்ளனர்.

அதை அவர்கள் யாருக்காக சென்னைக்கு கடத்தி வந்தனர். இதன் பின்னணியில் உள்ளவர்கள் யார்? என சுங்க இலாகா அதிகாரிகள் விசாரணை நடாத்தி வருகின்றனர்.

# ஊற்றுப்புலம் வர்த்தகர்களின் காணிப் பிரச்சினைக்கு தீர்வு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஊற்றுப்புலம் சந்தி வர்த்தகர்களின் காணி தொடர்பிலான நீண்டகால பிரச்சினை கடந்த வியாழக்கிழமை ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரின் தீர்வுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் வியாபார நிலையங்கள் அழிந்துபோன நிலையில் மூன்றாவது தடவையாக தங்களின் சொந்தப் பணத்தில் வியாபார நிலையங்களை அமைத்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் வர்த்தகர்கள் தங்களுடைய வியாபார நிலையங்கள் அமைந்துள்ள காணிக்கான ஆவணங்கள் இன்மையால் பல்வேறு நெருக்கடிக்களை எதிர்கொண்டு வந்துள்ளனர். தாங்கள் வியாபார நிலையம் அமைந்துள்ள அரச காணிக்கான அனுமதி பத்திரங்களை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரிடம் வேண்டுகோள்விடுத்தமையினைத் தொடர்ந்து குறித்த இடத்திற்கு கரைச்சி பிரதேச செயலாளர் நாகேஸ்வரனுடன் விஜயம் மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் அந்த வர்த்தகளுடன் கலந்துரையாடிய பின்னர் நீண்ட காலமாக வர்த்தக நடவடிக்கையில் ஈடு பட்டுவரும் ஊற்றுப்புலம் வர்த் தகர்களுகே காணிகளை சட்ட ரீதியாக வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலாளருக்கு பணிப்புரை வழங்கினார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் நீணடகாலமாக பல்வேறு துன்ப துயரங்களை சந்தித்து பின்தங்கிய நிலையில் வாழ்ந்துவரும் இந்தப் பிரதேச வர்த்தகர்களின் நிலைமையினை நான் நன்கறிவேன் அந்த வகையில் இந்த வர்த்தகர்களின் பிரச்சினைக்கு சட்டரீதியாக நியாயமான தீர்வினைப் பெற்றுகொடுக்கவேண்டியது எனது கடமையும் பொறுபபுமாகும். எனவேதான் வர்த்தகாகளின் கோரிக்கையினை ஏற்று அடுத்த வாரமே பிரதேச செயலத்தினை காணி ஆவணங்களை வழங்குமாறும் நில அளவை செய்வதற்கும் விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலாளருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளை விரைவுபடுத்தும் வகையில் நில அளவைத் திணைக்களம் மற்றும் மத்திய காணி ஆணையாளர் நாயகத்துடனும் பேசி விரைவில் காணி ஆவணங்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத்தெரிவித்தார்.

## பெரியகடை வீதியில் வாகனங்களுக்கு தடை

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணம் பெரியகடை வீதி வாகனப் போக்குவரத்துக்குத் தடைசெய்யப்பட்டுள்ளது.

வீதியின் இரு மருங்கிலும் அமைந்துள்ள வியாபார நிலையங்களில் நத்தார் புது வருடத்தினை முன்னிட்டு வாடிக்கையாளர்கள் பெருமளவில் கூடுகின்றனர்.

நத்தார், புதுவருட காலத்தில் வியாபார நிலையங்கள் தமது வியாபார நிறுவனங்களிலிருந்து மூன்று அடிக்கு உட்பட்ட பகுதியில் பொருட்களைக் காட்சிப்படுத்த அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து வியாபாரம் களைகட்டத் தொடங்கியுள்ளது. (10)

## ஆலயத்திருப்பணி நிறைவடையும் நிலை

(யாழ்.நிருபர்)

காரைநகர் மடத்துக்கரை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய திருப்பணி வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வேலைகள் பூர்த்தியடையும் நிலையை அடைந்துள்ளன. தீந்தை பூசும் வேலைகள் ஆரம்பமாகவுள்ளன.

அடுத்த வருட முற்பகுதியில் கும்பாபிஷேகம் நடாத்துவதற்கான ஆயத்த வேலைகளில் ஈடுபட்டுள்ளதாக ஆலய அறங்காவலரும் பிரதமசிவாச்சாரியாருமான பிரம்ம ஸ்ரீ கு.சரவணபவானந்த சர்மா தெரிவித்துள்ளார். (10)

## உயர்தரப்பெறுபேறு

(அச்சுவேலி)

அச்சுவேலி மத்திய கல்லூரியின் உயர்தரபெறுபேறுகள்.


கலைப்பிரிவு:-

எஸ்.மேரிதர்மசிறி 2ஏ, பி, எஸ்.ஜவானி ஏ,சி,எஸ்.

வர்த்தகப் பிரிவு:-

எஸ்.கலைவரதன் 3பி, ஜி.மயூரதாசன் 3சி, எஸ்.தனுசாந் 3சி. (85)

## பரமர் சங்கமம்



'தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' எனப்பாடினார் நாமக்கல் கவிஞர் தேசிய விநாயகம் பிள்ளை. தமிழர்களின் வரலாற்றைப் பின்நோக்கிப் பார்த்தால் போராட்ட வீரர்களாக திகழ்ந்ததைக் காணலாம்.

பின் நோக்குவான் ஏன் நாம் வாழ்கின்ற இன்றைய காலங்களிலும், முன்னதாகப் பல ஆண்டுகளாகவும் தமிழர்கள் வாழ்க்கை போராட்டகளமாகவே அமைந்துள்ளது. இலங்கையிலும் அயல் நாடான உபகண்டத்திலும் அந்நியரின் ஆக்கிரமிப்புக்கு எதிரான ஏனைய இனமக்களுடன் கைகோர்த்து நின்று நாட்டின் விடுதலைக்காகப் போராடிய சங்கதிகளைப் பரக்கக் காணலாம்.

சுதந்திரமடைந்த பின்பாக பேரின அரசு வேலை வாய்ப்பு, பொருளாதார அபிவிருத்தி, கல்வி, காணி உரிமம், மதவழிபாடுகள் சார்ந்த பல்வேறு உரிமங்களில் சம அந்தஸ்து வழங்காமல் ஒதுக்கி வருவதால் அவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக இன்றும் போராடிக் கொண்டிருக்கிறது தமிழினம்.


நசுக்கப்படும் ஒரு இனம் தனது உரிமங்களைப் பெறுவதற்காகப் போராடுவது இயல்பாகவே அமையும். அதனைக் கண்டோ, என்னவோ ஜாதிக ஹெல உறுமய தலைவர் வண. அத்துரலிய ரத்தின தேரர் போராட தமிழரை வருமாறு அழைப்பு விடுத்துள்ளார். தேசத்தின் பொதுவான நெருக்கடிகளிலிருந்து விடுபட போராட்டத்துக்கு அழைக்கும் தேரர் தமிழர்களின் எந்தப் பிரச்சினைக்காவது குரல் கொடுத்தாரா?

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இனத்துவேச நச்சுக் கருத்துகளை பரப்பிவரும் ஹெல உறுமய எதற்காகப் போராடத் தமிழர்களை அழைக்குதென்டு பாத்தால் பல் தேசிய நிறுவனங்களுக்கு எதிராகப் போராடத்தான். நாடாளுமன்றத்தில் நடைபெற்ற குழுநிலை விவாதமொன்றில் பேசுங்கயிலேயே அந்த அழைப்பையும் விடுத்திருந்தார்.

இந்த அழைப்பை விடுப்பதற்கு 'ஆடு நனையுதென்டு ஓநாய் அழுதது' போல வடக்கில் கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுநீரக நோய் அதிகரித்துள்ளது. யாழ்ப்பாணக் கிணறுகளில் குடிநீர் மாசடைகிறது என்றெல்லாம் மனமுருகிப் பேசியதைப் பாத்தால் இனியாவது தமிழனுக்கு நல்லது செய்ய வண. அத்துரலிய ரத்தின தேரர் முயல்வார் என நம்பினால் பிழை. கூட்டமைப்பினர் அதைக் கூடச் சிங்களவர் பிரச்சினையாகப் பாக்கின்றனரென்டு போட்டாரே ஒரு போடு.

தேரர்கள் அரசியல் ராஜதந்திரயுக்திகளிலும் கைதேர்ந்து விட்டார்களென்டு சொல்வதற்கு இந்தப் நாடாளுமன்றப் பேச்சுப்போதா என்ன?

தமிழினம் மற்றவர்கள் வாழ்வதற்காக மாரடிக்கும் ஒரு கூட்டமென எண்ணியதாலன்றோ பல்தேசியக் கம்பனிகளின் ஆக்கிரமிப்புக்கெதிராகப் போராடவும் 'கறிவேற்பிலை கணக்கில்' தமிழர்களை அழைத்துள்ளார், அதுவுமொரு பெருமைதான். கவி தேசிய விநாயகம் பிள்ளை பாடியது போலை தமிழர் இதனால் தலை நிமிர்ந்து நிக்கலாம் இல்லையே பின்னை...



கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் வைரவிழா நிகழ்வின் இரண்டாம் நாள் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது விருந்தினர் மாணவனுக்கு பரிசில் வழங்குவதைக் காணலாம். (48)

## வீதிசேதம்

(அச்சுவேலி)

ஆவரங்கால் வங்கி வீதியானது குண்டும் குழியுமான நிலையில் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் காணப்படுவதாக பயணிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மழைகாலங்களில் இந்த வீதியைப் பயன்படுத்தும் பாத சாரிகள் மற்றும் வாகனசாரதிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வலி. கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட இந்த வீதியினை திருத்தி வழங்குமாறு உரிய தரப்பினரை வீதியைப் பயன்படுத்தும் சகல பயணிகளும் கேட்டுக் கொள்கின்றனர். (85)

## முரசின் இன்றைய பலன்



(30.12.2013 திங்கட்கிழமை)

விஜய வருஷம் மார்கழி மாதம் 15 ஆம் திகதி.
திரயோதசி/சித்தம். அனுச நட்சத்திரம் பி.ப. 02.35 வரை.
பின் கேட்டை.
இராகுகாலம் 07.59 - 09.29 வரை. சுபநேரம் 12.29 - 01.59 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** உற்பத்திச் செலவு கூடி விற்பனை விலை நட்டமாவதால் கவலையுறல், விலைப்பட்டியலைக் காட்சிப்படுத்தாதபடியினால் தண்டனை கிடைக்கும் நிலை ஏற்படல்.

**ரிஷபம்** எதிர்பாராத விதத்தில் நன்மை ஏற்படல், புத்தகங்களை கைவிட்டு கணனி விளையாட்டுக்களில் சிறுவர் ஈடுபடுவதைக் கண்டு பெற்றோர் விசனப்படல்.

**மிதுனம்** அனுமதிச் சீட்டின்றி போக்குவரத்து மேற்கொண்டதால் கைதாகி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படல், தோல்வியையும் சறுக்கலையும் கண்டு துவண்டு விடாமையால் காரியசித்தி ஏற்படல்.

**கடகம்** அரும்பிவந்துள்ள நெற்பயிர்களை கட்டாக்காலிகள் சேதமாக்குவதால் கவலை கொள்ளல், கண்டகச் சனீஸ்வரன் இருப்பதினால் தாயாரின் நோயில் தீவிர கவனமெடுத்து குணப்படுத்த முயற்சித்தல்.

**சிம்மம்** உற்பத்தி திகதி காலாவதித் திகதிகள் இல்லாது பொதியிடப்பட்ட பொருட்களைக் கண்டுபிடித்து தண்டத்திற்கு உட்படுதல், அதிர்ஷ்ட இலாபச்சீட்டுக்களினால் பணவரவு காட்டும்.

**கன்னி** காணிகளுக்கான உறுதிகளைப் பெற்றுக் கொள்ள அலுவலகங்களுக்குச் சென்று அலைக்கழிதல், மனந்திறந்து மனக் குறைகளை வெளியிடுவதினால் உளப்பாதிப்பு ஏற்படாமை.

**துலாம்** சுகாதாரச்சீர்கேடான பொருட்கள் சுகாதாரப்பரிசோதகர்களினால் கைப்பற்றப்பட்டு தண்டம் விதித்தல், சக ஊழியர்களின் கருத்திற்கு மதிப்பளித்தமையினால் பணி சிறந்து விளங்கல்.

**விருச்சிகம்** சூடுகண்ட பூனை அடுப்பங்கரைக்குச் செல்லாமை போல முன்னெச்சரிக்கையால் நன்மை விளைதல், மனக்குழப்பத்தைப் போக்க ஓய்வு எடுத்த பின்னர் செயலை மேற்கொள்வதினால் வெற்றி ஏற்படும்.

**தனுசு** சட்டவிரோதமாக இயங்கிவரும் தொழிற்சாலைகளால் ஏற்படும் பிரச்சினைகளை அதிகாரிகளுக்கு எடுத்துரைத்தும் நடவடிக்கை எடுக்காமையினால் விசனம், எதிர்பாராது அதிர்ஷ்ட இலாபச்சீட்டினால் பணவரவு.


**மகரம்** காப்புறுதிப்பணத்தை வைப்புச் செய்யாமல் 'டிமிக்கி' கொடுத்தநபரைத்தேடி அலைந்து விசனப்படல், தைரியமாகச்சில முக்கிய முடிவுகளை எடுத்து கருமமாற்றல்.

**கும்பம்** புத்திமதி கூறியது புறக்குடத்தில் ஊற்றிய நீர்போல் ஆனதால் முரண்பாடு தோன்றுதல், மனச்சோர்வினால் திட்டமிட்ட செயல்கள் தாமதப்போக்கினை அடையும்.

**மீனம்** பட்டியல் விலைக்கும் விற்பனை விலைக்கும் வேறுபாடு காணப்பட்டதை அடுத்து முறுகல் நிலை, வாதம், விதண்டாவாதத்தைக் கைக்கொள்ளாமல் இருந்ததால் பிரச்சினை எழாதுவிடல்.

## ரோஜர்ஸ் சதம்

# ஆஸி. இலகு வெற்றி




(மெல்பேர்ன்)

இங்கிலாந்து அணிக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரின் நான்காவது போட்டியில் அவுஸ்ரேலிய அணி இலகுவாக வெற்றிபெற்றது.

அவுஸ்ரேலியா சென்றுள்ள இங்கிலாந்து அணி பாரம்பரிய ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்று வருகின்றது.. முதல் மூன்று போட்டியில் வென்ற அவுஸ்ரேலிய அணி 3-0 என ஏற்கனவே தொடரை கைப்பற்றிவிட்டது.

இரு அணிகள் மோதிய நான்காவது டெஸ்ட், மெல்பேர்னில் நேற்று நிறைவடைந்தது. இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸில் 255, அவுஸ்ரேலியா 204 ஓட்டங்கள் எடுத்தன. இரண்டாவது இனிங்ஸில் இங்கிலாந்து அணி 179 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதன் மூலம் அவுஸ்ரேலிய அணிக்கு 231 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. மூன்றாவது நாள் ஆட்டநேர முடிவில் அவுஸ்ரேலிய அணி விக்கெட் இழப்பின்றி 30 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இந்நிலையில் நேற்றைய நான்காவது நாள் ஆட்டத்தில் இரண்டாவது இனிங்ஸைத் தொடர்ந்த அவுஸ்ரேலிய அணிக்கு, டேவிட் வோர்னர் (25) நிலைக்கவில்லை. தொடர்ந்து ரோஜர்ஸுடன் ஜோடி சேர்ந்த வட்சன் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவ்வப்போது பவுண்டரிகள் விளாசிய ரோஜர்ஸ், டெஸ்ட் அரங்கில் தனது 2ஆவது சதத்தை பூர்த்தி செய்தார். இவர் 116 ஓட்டங்கள் எடுத்த போது பனிசர் சுழலில் சிக்கினார். எதிர்முனையில் தன்பங்கிற்கு அரைசதம் எட்டிய வட்சன் தொடர்ந்து ஓட்ட வேட்டை நடத்தினார். இறுதியில் அவுஸ்ரேலிய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 231 ஓட்டங்களைப் பெற்று வெற்றியிலக்கை இலகுவாக அடைந்தது. இதில் வட்சன் ஆட்டமிழக்காது 83 ஓட்டங்களைப் பெற்றார். போட்டியின் ஆட்டநாயகனாக ஜோன்சன் தெரிவானர். இப்போட்டித் தொடரில் அவுஸ்ரேலிய அணி 4-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, இரு அணிகளுக்குமிடையிலான ஐந்தாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி எதிர்வரும் 3ஆம் திகதி சிட்னியில் நடைபெறவுள்ளது.

## வேதனையிலும் தொடரும் சாதனை



(மெல்பேர்ன்)

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான 4ஆவது ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது இனிங்ஸில் இங்கிலாந்து கப்டன் அலஸ்டர் குக் 51 ஓட்டங்களைப் பெற்றார். இந்தப் போட்டியில் இவர் 45 ஓட்டங்களை எடுத்தபோது டெஸ்ட் போட்டியில் குறைந்த வயதில் (29 வயது 3 நாட்கள்) 8 ஆயிரம் ஓட்டங்களை கடந்த வீரர் என்ற பெருமையை பெற்றார். முன்னதாக இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் 29 வயது, 24 நாட்களில் இந்தப் சாதனையைப் படைத்திருந்தார்.

இதேவேளை, பேர்த்தில் நூறாவது டெஸ்ட் போட்டியில் களமிறங்கிய வேளை இளவயதில் 100 ஆட்டங்களில் பங்குகொண்ட வீரர் என்ற சச்சினின் சாதனையை குக் முறியடித்திருந்தார்.

நடப்பு டெஸ்ட் தொடரில் இரு சாதனைகளை குக் முறியடித்தபோதும், ஆஷஸ் தொடரை இழந்தமை அவருக்கு பெரும் வேதனையை ஏற்படுத்தியிருந் திருக்கும்.



## ஜோகோவிச் சம்பியன்

(அபுதாபி)

உலக ரென்னிஸ் சம்பியன்ஷிப் கண்காட்சிப் போட்டியில் சேர்பியாவின் ஜோகோவிச் கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டார்.

உலக ரென்னிஸ் சம்பியன்ஷிப் கண்காட்சிப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் அபுதாபியில் நடைபெற்றது. இதில் ஸ்பெயினின் டேவிட் பெரர், சேர்பியாவின் ஜோகோவிச் ஆகியோர் மோதினர்.

ஆரம்பம் முதலே அசத்திய ஜோகோவிச் 7-5, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டார்.

## கால இடைவெளியின்மையே காலைவாரக் காரணம்



(மெல்பேர்ன்)

போதியளவு காலஇடைவெளி இல்லாமல் போனதே நடப்பு

ஆஷஸ் தொடரில் எமது வீழ்ச்சிக்குக் காரணம் என இங்கிலாந்து அணியின் அதிரடி வீரர் கெவின் பீற்றர்சன் தெரிவித்துள்ளார். இரசிகர்கள் மறந்துவிடக்கூடாது. இதற்கு முன்னால் இப்படி நாங்கள் ஆடியதில்லை. ஆஷஸ் தொடர் 10 டெஸ்ட் போட்டிகள் அடுத்தடுத்து நடாத்தப்பட்டால் எப்படி இருக்கும் என்பதை விளையாடுபவர்களுக்குத் தெரியும். தோல்வியால் அவமானப்பட்ட அவுஸ்ரேலிய அணிக்கு சில வேளை வெல்ல வேண்டும் என்ற உத்வேகத்தைக் கொடுத்திருக்கலாம்.

இங்கிலாந்தில் அடைந்த தோல்விக்கு உடனடி பழி தீர்ப்புக் களமாக அதைக்கருதியிருக்கலாம். என்னைப் பொறுத்து இப்போட்டிக்கான போதிய கால இடைவெளி இருக்கவில்லை. பெரிய சவால் மிக்க தொடர்களுக்கு எப்பொழுதும் பெரு இடைவெளி அவசியம்.

ஒலிம்பிக் போட்டிகள் முடிந்த பின்னர் நிறைய தடகள வீர், வீராங்கனைகள் ஒரு விதமான மன அழுத்தத்திற்கு ஆளாவதைக் கேள்விப்பட்டிருக்கிறேன், அல்லது ஒருவிதமான எதிர்மறை மனோ நிலைக்குச் செல்வதாக கேள்விப்பட்டிருக்கிறேன், ஆனால் இங்கிலாந்து வீரர்கள் எதிர்மறை மனோநிலையில் உள்ளனர் என்று நான் கூறவில்லை, சவாலான ஐந்து போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை ஆடிய பின்னரே மனோ நிலை சற்றே அமைதியாக இருக்கும். கொஞ்சம் ப[illegible] வீனமாகக் கூட இருக்கும். இதுபோன்று விளையாடுவது சொல்ல முடியா[illegible] அளவுக்கு கடினமாக உள்ளது.

அவுஸ்ரேலிய பந்து வீச்சாளர்கள் சிறப்பாக வீசுகிறார்கள். நல்ல திட்டங்களுடன் செயற்படுகிறார்கள், எந்த அளவுக்கு என்றால் பல சமயங்களில் சிறப்பான செயற்பாடு என்று நாங்கள் பாராட்டக்கூடிய அளவுக்கு அவர்கள் செயற்பாடு உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பெடரர் மகிழ்ச்சி

ரென்னிஸ் வீரர் ரொஜர் பெடரர் தமது பயிற்சியாளர்களின் குழுவில், தாம் இளவயதில் இரசிகராக இருந்த முன்னாள் ரென்னிஸ் வீரர் ஸ்டெபன் எட்பேர்க்கையும் இணைத்துக் கொண்டுள்ளார்.

தாம் சிறுவயதில் மிகவும் இரசித்த வீரரை தமது பயிற்சியாளராக நியமித்துக் கொள்வதில், மிகவும் மகிழ்ச்சி அடைவதாக பெடரர் தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் முதல் ஸ்டெபன் பயிற்சிகளை ஆரம்பிக்கவுள்ளார்.

முன்னாள் முன்னிலை ரென்னிஸ் வீரரான ஸ்டெபன் எட்பேர்க், ஆறு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பயிற்சியாளராக கொலிங்வூட்

ஸ்கொட்லாண்ட் அணியின் பயிற்சியாளராக இங்கிலாந்து அணியின் முன்னாள் கப்டன் கொலிங்வூட் இணைக்கப்பட்டுள்ளார். அடுத்த வருடம் நடைபெறவுள்ள ருவென்ரி-20 உலக கிண்ணப் போட்டித் தொடரைக் கருத்தில் கொண்டே கொலிங்வூட் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கிலாந்தின் முன்னாள் தலைவர் கொலிங்வூட், ஸ்கொட்லாண்டின் உதவி பயிற்சியாளராக செயற்பட்டு வந்தார்.

இந்த நிலையில் அவர் அந்த அணிக்கான பயிற்சியாளர் குழாமிற்கு தலைமை தாங்குவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


## உமர் குல் சேர்ப்பு; வக்கார் அதிருப்தி

(லாகூர்)

இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் தொடருக்காக பாகிஸ்தான் அணியில் வேகப் பந்துவீச்சாளர் உமர் குல் இணைக்கப்பட்டுள்ளமைக்கு, முன்னாள் அணித்தலைவர் வக்கார் யூனிஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

உமர் குல் காயத்தில் இருந்து இன்னும் முழுமையாக குணமடையாத நிலையில் அவர் அணிக்கு இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கக் கூடாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

அவருக்கு போதுமான கால இடைவெளி வழங்கப்பட வேண்டும் என்றும், அவ்வாறில்லை எனில், அது உமருக்கே பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் வக்கார் சுட்டிக்காட்டியுள்ளார்



டேர்பன் போட்டியுடன் டெஸ்ட் அரங்கில் இருந்து கலிஸ் விடைபெறுகிறார். நேற்று முன்தினம் அவர் துடுப்பாட களமிறங்கிய போது, இந்திய அணி வீரர்கள் இருபுறமும் அணிவகுத்து நின்று, கைகளை தட்டி வரவேற்புக் கொடுத்தனர். இதில் களத்தில் இருந்த நடுவர்கள் இருவரும் சேர்ந்து கலிஸிற்கு வரவேற்பு அளித்தமை குறிப்பிடத்தக்கது.

## நாடு திரும்பினார் டரன் பிராவோ



(ஹமில்டன்)

நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணியின் டரன் பிராவோ திடீரென நாடு திரும்பியுள்ளார்.

நியூசிலாந்து- மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் மோதும் ஒருநாள் போட்டித் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது.

இதில் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் டரன் பிராவோ திடீரென நாடு திரும்பியுள்ளார்.

சொந்தப் பிரச்சினை காரணமாக நாடு திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. டரன் பிராவோவின் நாடு திரும்பியமை அணிக்கு பெரும் இழப்பு என கப்டன் டரன் சமி தெரிவித்துள்ளார்.

# பொம்மர்ஸ், நவஜீவன்ஸ் இன்று பலப்பரீட்சை







(நெல்லியடி)

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் பருத்தித்துறை வை. எம்.சி.ஏ.யினால் நடாத்தப்பட்ட மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டம் இன்றையதினம் மாலை 3.00 மணிக்கு கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி பிரதேசத்திற்குட்பட்ட அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடரில் ஏராளமான அணிகள் பங்குகொண்டன. இருப்பினும் இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு வதிரி பொம்மர்ஸ் அணியும், உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் இன்றைய தினம் மோதவுள்ளன.

வடமராட்சிப் பிரதேசத்தில் இரு அணிகளுமே பிரபல்யம் மிக்க பலமான அணிகள் என்பதால் இப்போட்டி இறுதி வரை பரபரப்பிற்குக் குறைவில்லாமல் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலக நிர்வாக கிராம அலுவலர் வி.கே. சண்முகநாதன், கௌரவவிருந்தினராக பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக் தலைவர் வரதராசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்போட்டி நிகழ்வில் கால்பந்து இரசிகர்கள், விளையாட்டு ஆர்வலர்கள், நலன்விரும்பிகள் என அனைவரையும் கலந்து கொண்டு இரு அணிகளையும் உற்சாகமூட்டுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

(12)

## மழையால் இரத்து

(நெய்பர்)

நியூசிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி மழை காரணமாக இரத்தானது.

நியூசிலாந்து சென்றுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி, 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி தொடரில் 1-0 என முன்னிலையில் உள்ளது. இரு அணிகள் மோதும் இரண்டாவது ஒருநாள் போட்டி நெய்பரில் நேற்று நடைபெறவிருந்தது.

ஆனால் போட்டி ஆரம்பமாவதற்கு முன்பே மழை பெய்த காரணத்தினால் போட்டி ஆரம்பமாவதில் தாமதம் ஏற்பட்டது.

தொடர்ந்து விட்டு விட்டு மழை பெய்த காரணத்தினால், போட்டியை இரத்து செய்வதாக நடுவர்கள் அறிவித்தனர். இரு அணி கள் மோதும் 3ஆவது ஒருநாள் போட்டி வரும் 2014, ஜன. 1இல் குயின்ஸ்டவுனில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இறுதியில் ஞானம்ஸ்



(யாழ்ப்பாணம்)

கொம்மாந்தறை இளைஞர் விளையாட்டுக்கழகம் நடாத்திவரும் மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு கரவெட்டி ஞானம்ஸ் அணி தகுதி பெற்றுள்ளது.

யாழ். மாவட்ட மென்பந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையில் கொம்மாந்தறை இளைஞர் விளையாட்டுக்கழகத்தினால் மாபெரும் மென்பந்து கிரிக்கெட் போட்டி நடாத்தப்பட்டு வருகின்றது. இப்போட்டித் தொடரில் இரண்டாவது அரையிறுதிப் போட்டி நேற்று முன்தினம் கொம்மாந்தறை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

யாழ். 4 ஸ்டார்ஸ் அணி, கரவெட்டி ஞானம்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய 4 ஸ்டார்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 15 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 92 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 93 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஞானம்ஸ் அணி 14.1 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

இதேவேளை, முதலாவது அரையிறுதிப் போட்டியில் கொக்குவில் ஸ்ரீகாமாட்சி அணியும், கொக்குவில் ஏ.பி. அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஸ்ரீகாமாட்சி அணி ஜெயறூபன், ராகுலன் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் கொக்குவில் ஸ்ரீகாமாட்சி அணி 15 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 214 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெயறூபன் 108, ராகுலன் 102 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் உத்தமன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 215 ஓட்டங்களைப்பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொக்குவில் ஏ. பி. அணி 15 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் உத்தமன் 44, ராகுலன் 32, சாயித் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் நிசாந்தன் நான்கு, அஜி இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதேவேளை, இறுதிப் போட்டி நாளை நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி.)

## கந்தையா நல்லதம்பி நினைவு கால்பந்து மேரிஸ், யங்ஹென்றிஸ் முன்னேற்றம்

(சுன்னாகம்)

சுன்னாகம் சூராவத்தை நியூவொரியஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் மாபெரும் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் லீக் ஆட்டங்களில் நாவாந்துறை சென். மேரிஸ், இளவாலை யங்ஹென்றிஸ் அணிகள் வெற்றிபெற்றன.

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் சூராவத்தை நியூவொரியஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தும் கந்தையா நல்லதம்பி நினைவு மாபெரும் கால்பந்தாட்டப் போட்டி நியூவொரியஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்று வருகின்றது.

அணிக்கு ஐந்து பேர் கொண்ட இக்கால்பந்தாட்டப் போட்டி லீக் அடிப்படையில் நடைபெற்று வருகின்றன.

இதில் நேற்றுமுன்தினம் இரண்டு ஆட்டங்கள் நடைபெற்றன. முதல் ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியும், மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே நாவாந்துறை சென். மேரிஸ் அணி ஆதிக்கம் செலுத்தியதுடன் கோல்களை பெற்றுக்கொண்ட வண்ணமேயிருந்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் முயற்சியை மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் அணி மேற்கொண்டபோதும் பலன் கிடைக்கவில்லை. இறுதியில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி 17-03 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் அணியும், இளவாலை யங்ஹென்றிஸ் அணியும் மோதின. இதில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆடின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

போட்டிகள் தொடர்ந்தும் லீக் முறையில் நடைபெற்று வருவதாகவும், இதில் அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் அணிகள் இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெறும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(93)

## முல்லை·யாஸ் சம்பியன்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் நடாத்தப்பட்ட மாபெரும்கூடைப் பந்தாட்டப் போட்டியில் முல்லை. யாஸ் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

அணிக்கு மூன்று பேர் கொண்ட இக் கூடைப்பந்தாட்டத் தொடரில் ஐந்து அணிகள் பங்குகொண்டன. லீக் அடிப்படையில் நடைபெற்ற இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு முல்லைத்தீவு றொக்ஸ் அணியும், முல்லைத்தீவு யாஸ் அணியும் தகுதி பெற்றது.

இறுதிப் போட்டி நேற்று முன்தினம் முல்லைத்தீவில் நடைபெற்றது. பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில் முல்லை. யாஸ் அணி 14-10 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டி நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தைச் சேர்ந்த அதிகாரிகள், விளையாட்டு ஆர்வலர்கள், நலன் விரும்பிகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (93)

## சமநிலையில் நிறைவடைந்த தோமஸ், கலைமதி ஆட்டம்

(நெல்லியடி)

சென். தோமஸ், கலைமதி அணிகளுக்கிடையிலான கால்பந்து ஆட்டம் சமநிலையில் நிறைவு பெற்றது.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் மாபெரும் கால்பந்தாட்டப்போட்டி அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

அணிக்கு ஏழு பேர் கொண்ட இப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் கலைமதி பி அணியும், சென். தோமஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் இரு அணிகளும் சமபலம் கொண்டு மோதின. இதில் 5-5 என்ற கோல் கணக்கில் இருந்தமையால் போட்டி சமநிலையில் நிறைவு பெற்றது. போட்டிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. (12)



# தேர்தல் காய்ச்சலால் இலங்கைச் சன்னி கண்டிருக்கும் ப.சிதம்பரம்!

- தியோடர் கட்டுரையிலிருந்து.

"பிரதமர் மன்மோகன் சிங் விரைவில் யாழ்ப்பாணத்துக்குச் சென்று அங்கு தமிழ்த் தலைவர்களைச் சந்திப்பார்!"

"காங்கிரஸ் கட்சி மட்டுமே இலங்கைத் தமிழர்களின் நலனில் அக்கறையுள்ள ஒரே கட்சி!"

"இலங்கைத் தமிழர்கள் தமது உரிமைகளைப் பெறும் வரை நாம் ஓய்ந்திருக்கமாட்டோம்!"

"மனித உரிமையை மீறியவர்களை இலங்கை கட்டாயமாகத் தண்டித்தே ஆக வேண்டும்!"

இவை நவம்பர் மாதக் கடைசியில் இந்திய ஊடகங்களை அலங்கரித்த தலைப்புச் செய்திகளாகும்.

இவற்றைக் கூறியது திராவிட கட்சிகளல்ல; வழமைக்கு மாறாக காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், மத்திய நிதியமைச்சருமான ப.சிதம்பரம்!

சென்னையில் காங்கிரஸ் கட்சி சார்பில் அல்லாமல் தனிப்பட்ட முறையில் தான் நடாத்திய "இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதார உரிமையும், இந்தியாவின் நிலைப்பாடும்" என்ற தலைப்பிலான கருத்தரங்கில் பேசும்போதே சிதம்பரம் இவ்வாறான கருத்துக்களைக் கூறியிருக்கிறார்.

"எல்லோரும் ஏறி விழுந்த குதிரையில் சக்கடத்தாரும் ஏறி விழுந்தார்" என்றொரு தமிழ் வழக்கு உள்ளது. அதுபோல ப.சிதம்பரமும் இப்பொழுது தமிழ் தேசியம் என்ற அந்தக் குதிரையில் ஏற முயன்று பார்த்திருக்கிறார். சிதம்பரத்தின் முடிவு எவ்வாறாக இருக்கும் என்பதை இங்கு தனியாக விளக்க வேண்டிய தேவை இல்லை. ஆனால் சிதம்பரத்துக்கு திடீரென்று ஏன் இந்த "ஞானோதயம்" ஏற்பட்டது என்பதுதான் கேள்வி.

ஏனெனில், ப.சிதம்பரம் நீண்டகாலமாக அங்கம் வகிக்கின்ற காங்கிரஸ் கட்சி, இலங்கை இனப்பிரச்சினையில் ஆரம்பம் முதல் இன்று வரை முக்கியமான பங்கு வகித்து வருகின்றது என்பது அவர் அறியாத விடயமல்ல. இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கான ஒரு குறைந்த பட்ச தீர்வாகத்தன்னும் கருதப்படும் "இந்திய - இலங்கை ஒப்பந்தம்" காங்கிரஸ் கட்சியின் ராஜீவ் காந்திக்கும், இலங்கை ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற இலங்கை வந்த இந்திய அமைதிப்படை வீரர்களில் ஏறத்தாழ 1,500 பேரையும், அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ராஜீவ் காந்தியையும் புலிகள் கொன்றனர். அதன் பின்னரான காலத்தில் காங்கிரஸ் அரசுகள் மட்டுமின்றி, அனைத்து இந்திய அரசுகளுமே இலங்கைத் தமிழர் பிரச்சினையிலிருந்து தம்மை எட்ட வைத்துக் கொண்டன.

அதேநேரத்தில் இலங்கை அரசுடனான போரில் புலிகள் மேல்நிலை எடுப்பதையும் இந்திய அரசுகள் எவையும் விரும்பவுமில்லை. புலிகளின் வளர்ச்சி இலங்கை அரசுக்கு மட்டுமின்றி, இந்தியாவுக்கும், இந்தப் பிராந்தியத்துக்கும்' கூட ஆபத்தானது என்பதே அதற்குக் காரணமாகும்.

இலங்கையில் புலிகளின் தலைமையில் ஒரு தனிநாடு உருவாகுமானால், புலிகளினால் ஏற்படும் தாக்கத்தினால், தமிழ் நாட்டில் மீண்டும் பிரிவினை வாதம் தீவிரமாகத் தலைதூக்கும் என்பதுவும் இந்தியாவின் அச்சமாகும். அதனால்தான், இந்திய அரசு, புலிகள் இறுதிப் போரில் முள்ளிவாய்க்காலில் வைத்துத் தோற்கடிக்கப்படும் வரை, இலங்கை அரசுக்கு சகலவிதமான உதவிகளையும் வழங்கியது.

உண்மையில் புலிகள் மீதான இலங்கை அரசின் வெற்றி என்பது வெறுமனே அதனுடையது மட்டுமல்ல, அது இந்திய அரசினதுமாகும். புலிகளை அழித்ததன் மூலம் இலங்கை தனது பாதுகாப்பை மட்டுமல்லாது, இந்தியாவின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தியது. அதன் காரணமாக இந்திய அரசு என்றென்றும் இலங்கைக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறது.


இதன் போதெல்லாம், ப.சிதம்பரம் இந்திய அமைச்சரவையின் சிரேஸ்ட அமைச்சர்களில் ஒருவராகத்தான் இருந்தார். புலிகளுக்கு எதிரான போரில் இந்தியா, இலங்கைக்கு உதவக்கூடாது என ப.சிதம்பரம் ஒருபோதும் கூறவில்லை. போரில் சிக்கி அப்பாவிப் பொதுமக்கள் அநியாயமாக இறக்கிறார்கள் எனவும் கூட அவர் கூறவில்லை. ஆனால் இப்பொழுது மட்டும் இலங்கையின் "போர்க்குற்றங்கள்" பற்றி அவருக்கு திடீரென ஞானோ-தயம் ஏற்பட்டதற்குக் காரணம் என்ன? பதில் மிகவும் இலேசானது. அது வேறு ஒன்றும் அல்ல. ஒரு சராசரி அரசியல்வாதிக்கு வரும் தேர்தல் காய்ச்சல்தான்.

2014இல் இந்தியப் நாடாளுமன்றத்துக்கு பொதுத்தேர்தல் நடைபெறவிருக்கிறது. காங்கிரஸ் அரசும், அதனுடன் கூட்டு வைத்திருந்த திராவிட முன்னேற்றக் கழகமும் இலங்கைத் தமிழர்களுக்குத் துரோகம் இழைத்து அவர்களது அழிவுக்குக் காரணமாக இருந்துள்ளன என, தமிழகத்திலுள்ள தீவிரத் தேசியர்கள் கடந்த நான்கு வருடங்களாகச் செய்து வந்த பிரச்சாரத்தால், திமுகவும், காங்கிரசும் ஆடிப்போயுள்ளன. அதன் காரணமாகவே, தேர்தல் வீழ்ச்சியிலிருந்து தப்பும் ஒரு தந்திரமாக, கருணாநிதி (இலங்கைத் தமிழர்கள் அழியும் வரை இருந்துவிட்டு) கடைசி நேரத்தில் அரசாங்கத்திலிருந்து தனது கட்சியை விலக்கிக் கொண்டார்.

காங்கிரஸ்காரரான ப.சிதம்பரத்தின் நிலை இன்னும் மோசமானது. அவர் கடந்த தேர்தலில் சிவகங்கைத் தொகுதியில் போட்டியிட்டு மயிரிழையில் "வெற்றி" பெற்றார். ஆனால் அந்த வெற்றி கூட மோசடியாகப் பெறப்பட்டது என நீதிமன்றத் தில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது.

அத்துடன் கடந்த சில மாதங்களாக இந்திய ரூபாயின் மதிப்பு மிக மோசமாக வீழ்ச்சி அடைந்து வருகிறது. அதன் காரணமாக விலைவாசிகள் கட்டுக்கடங்காமல் சென்று கொண்டிருக்கின்றன. அதனால் மக்கள் காங்கிரஸ் அரசின் மீதும், குறிப்பாக அவ்வரசின் நிதியமைச்சரான சிதம்பரம் மீதும் வெஞ்சினம் கொண்டுள்ளனர். இவையெல்லாம் அடுத்த பொதுத்தேர்தலில் காங்கிரசின் வெற்றி வாய்ப்பைக் கேள்விக்குறியாக்கியுள்ளன.

குறிப்பாக, தமிழகத்தில் காங்கிரசின் எதிர்காலமும், கூடவே சிதம்பரத்தின் வெற்றி வாய்ப்பும் கேள்விக்குறிக்கும் அப்பால், அதலபாதாளத்தில் சென்றுவிட்டன.



இந்த நிலைமையில் ஏதாவது மாற்றம் ஏற்படுத்த முடியுமா என்ற நப்பாசையில் தான், அண்மையில் கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்ளக்கூடாது என, தமிழகத்தைச் சேர்ந்த அமைச்சர்கள், வாசன், நாராயணசாமி, போன்றோர் நிர்ப்பந்தம் செய்தனர். அந்த நோக்கத்தில்தான், ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் யுத்தத்தில் மடிந்த போது ஒரு சொல் வருத்தம் கூடத் தெரிவிக்காத சிதம்பரம், இப்பொழுது சென்னையில் தானே ஒரு கருத்தரங்கு நடத்தி, இலங்கையை வாங்கு வாங்கு என்று வாங்கியிருக்கிறார். அந்த மாநாட்டில் காங்கிரஸ் கட்சியின் தமிழ் மாநிலக் கமிட்டியின் தலைவர் ஞான-தேசிகனோ அல்லது மத்திய அமைச்சர்களான வாசன், நாராயணசாமி போன்றோரோ, இதர தமிழக காங்கிரஸ் தலைவர்களோ பங்கேற்கவில்லை. அதிலிருந்தே, அது தனிப்பட்ட தேவைக்காக, அதாவது தேர்தல் வெற்றிக்காக, சிதம்பரத்தால் கூட்டப்பட்ட, கருத்தரங்கு என்பது தெளிவாகிறது.

இலங்கையிலுள்ள எந்தவொரு கட்சியும் இந்தியாவையோ அல்லது தமிழகத்தையோ காட்டித் தமது தேர்தல் வெற்றிக்காகப் பிரச்சாரம் செய்வதில்லை. ஆனால் கேவலம், தமிழக அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் இலங்கைத் தமிழர்களையும், இலங்கை அரசையும் வைத்தே தமது அரசியல் பிழைப்பை நடாத்துகின்றன.

தற்செயலாக இலங்கையில் தமிழர்கள் இல்லாமலிருந்தால், மலேசியா அல்லது சிங்கப்பூர் தமிழர்களையோ, அதுவுமில்லாவிட்டால் கனடாவில் அல்லது இங்கிலாந்தில் வாழும் தமிழர்களையோ வைத்தாவது தமது பிழைப்பைத் தொ[illegible]த் தயங்கமாட்டார்கள் என்பது மட்டும் திண்ணம்.

"யானை இருந்தாலும் ஆயிரம் பொன் பெறும், இறந்தாலும் ஆயிரம் பொன் பெறும்" என்பது போல, இந்த தமிழக அரசியல்வாதிகள் இலங்கையை நட்பாக வைத்தும் பிழைத்திருக்கிறார்கள், அதை வசைபாடியும் பிழைக்கிறார்கள் என்பதுதான் வரலாறாக இருக்கின்றது.

(வானவில் 35)

# எம்.ஜி.ஆர் நினைவுகள் : அழத்தெரியாத நடிகன்!



பொதுவாக அந்தக் காலத்து சினிமா ரசிகர்களிடம், குறிப்பாகப் பெண்களிடம், எம்.ஜி.ஆரைப் பற்றிய விமர்சனம் இருந்தது. அழும் காட்சி வந்தால் எம்ஜியார் முகத்தைப் பொத்திக்கொள்வார். அவரால் சிவாஜி மாதிரி அழ முடியாது. இயல்பு வாழ்க்கையில்கூடப் பார்க்க முடியாத அளவுக்கு மிகை நடிப்புடன், விதவிதமான அழுகைகளைப் பார்த்த ரசிகக் கண்களுக்கு எம்.ஜி.ஆர். நடிப்பு ஒவ்வாதுதான். உலகில் எல்லோரும் ஒரே மாதிரியாக அழுகிறார்களா என்ன?

நாடகப் பின்புலம் கொண்டவர் என்றாலும் எம்.ஜி.ஆரின் பெரும்பாலான திரைப்படங்களில் அவரிடம் அதீதமான முகபாவனைகளும் விசித்திரமான உடல்மொழிகளும் குறைவாகவே காணப்பட்டன (பாடல் காட்சிகளிலும் பிற்காலத்திய படங்களிலும் அவரது நடிப்பில் வேடிக்கையான பாவனைகள் அமைந்தது வேறு கதை).

வேதனையை வெளிப்படுத்தும் காட்சிகளில் பெரும்பாலும் அவரது பார்வை மேல்நோக்கியே இருக்கும். எனினும், கன்னங்கள் அதிர கண்களிலிருந்து கண்ணீர் பெருகாமல் அந்த உணர்வை, ஒரு மனிதனின் சோகமாக ஏற்றுக்கொள்ள நமது ரசிகர்களால் முடியவே இல்லை. அவர்களைப் பொறுத்தவரை எம்.ஜி.ஆர். ஒரு கேளிக்கை மன்னர். வீரதீர நாயகன். அவரிடம் உணர்ச்சிகரமான நடிப்பை எல்லாம் எதிர்பார்க்கக் கூடாது.

அதீத உடல்மொழிகளைத் தவிர்த்து, மேற்கத்திய பாணியில் நடித்த ஜெமினி கணேசன் போன்ற நடிகர்களின் வரிசையில் எம்.ஜி.ஆர். இணைந்திருக்க வாய்ப்பு இருந்தது. எனினும் பொதுவாகவே, காதல், குடும்பப் பாசம், சூழ்ச்சி வலையில் சிக்கி விடுபட்டு வில்லன்களை அழித்தல் என்ற கதைப் பின்னணியில் தயாரான பல படங்களில் நடித்த அவருக்கு பாந்தமான பாத்திரங்களைச் செய்யும் வாய்ப்பு மிகக் குறைவாகவே அமைந்தது. கிடைத்த சிறிய சந்தர்ப்பத்தையும் சரியாகவே பயன்படுத்திக்கொண்டார்.

எம்.ஜி.ஆர். இரு மாறுபட்ட குணங்களைக் கொண்ட இரட்டையர் வேடங்களில் அவர் நடித்த "எங்க வீட்டுப் பிள்ளை" படத்தில் ஹோட்டலில் டிபன் சாப்பிடும் காட்சி ஒன்று உண்டு. துணிச்சலும் நம்பிக்கையும் கொண்ட ராமு ஆர்ப்பாட்டமாகப் பல உணவு வகைகளைச் சாப்பிட்டுவிட்டு பில்லுக்குப் பணம் கொடுக்காமல்

# தமிழ் ஊடகங்களின் அழும்பு

- பத்ரி சேஷாத்ரி -

ஆரம்பகாலத்தில் நான் பணிபுரிந்த கிரிக்கின்ஃபோ தளத்திலிருந்து ஸ்கோர்விபரங்களை எடுத்துப் பதிப்பிப்பார்கள். இங்கிருந்துதான் எடுத்தோம் என்று சொல்லவேமாட்டார்கள். பின்னர் கண்ணுக்கே தெரியாத எழுத்தில் "Source: Cricinfo" என்று போடத்தொடங்கினார்கள். கொஞ்சம் பெரிய எழுத்தாகப் போட்டு, அது எங்கள் கண்ணில் பட்டுவிட்டால் நாங்கள் காசு கேட்டுவிட்டால் என்ன ஆவது என்ற பயம். சில பிரிட்டிஷ் ஊடகங்கள் எங்களை பொத்தாம் பொதுவாக "Internet" என்றுதான் அழைத்தன. கிரிக்கின்ஃபோ கமெண்ட்ரியிலிருந்து மேற்கோள் காட்டும்போது, "இணையத்தில் எழுதும் ஒருவர் இப்படி எழுதியிருந்தார்" என்று குறிப்பிட்டிருப்பார்கள். "இணையத்தில் எழுதும்"? அதற்கு பதில், "இந்த உலகத்தில் வசிக்கும் ஒருவர் இப்படி எழுதியிருந்தார்" என்று சொல்லியிருக்கலாம். பல ஆண்டுகளுக்குப் பிறகுதான் கிரிக்கின்ஃபோ பெயரை தைரியமாக எழுத ஆரம்பித்தார்கள்.

இதற்கு ஒரு காரணம் உண்டு. தங்களால் கிரிக்கின்ஃபோவுக்கு எந்த ஆதாயமும் "இலவசமாக" போய்விடக்கூடாது என்ற நல்ல எண்ணம்தான் அந்தக் காரணம். கிரிக்கின்ஃபோவிலிருந்து வேண்டிய எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளலாம். அது பிரச்சினை இல்லை. ஆனால் கிரிக்கின்ஃபோவுக்கு எந்த இலவச விளம்பரத்தையும் கொடுத்துவிடக்கூடாது. பின்னர் இந்த விளம்பரங்கள் எல்லாம் இல்லாமலேயே கிரிக்கின்ஃபோவுக்குக் கூட்டம் கூடுகிறது என்றதும் அடங்கிவிட்டனர்.

அதே பாணியில்தான் இன்றைய தமிழ் மீடியாவும் இயங்குகிறது.

2002இலிருந்து - அதாவது கிழக்கு பதிப்பகம் ஆரம்பிப்பதற்கு முன்பிருந்தே தொலைக்காட்சிகளில் அவ்வப்போது முகம் காட்டி வருகிறேன். பெரும்பாலும் கிரிக்கெட் பற்றிப் பேசத்தான் அழைத்துக்கொண்டிருந்தார்கள். அப்புறம் கொஞ்சம் டெக்னோலஜி. இப்போது அரசியல், சமூகம் குறித்த பல விஷயங்களைப் பற்றிப் பேச அழைக்கிறார்கள். ஆரம்பத்தில் எனக்கு "கிரிக்கெட் விமர்சகர்" என்ற அடைமொழிதான். கிரிக்கின்ஃபோ பெயர் வராது. (அது விளம்பரமாம்!) பின்னர் மற்ற விஷயங்கள் குறித்துப் பேசும்போது கிழக்கு பதிப்பகத்தை ஆரம்பித்திருந்தேன். அது குறித்து எதையும் சொல்ல மாட்டார்கள். "சமூக ஆர்வலர்" போன்ற பஜனையான அடைமொழியெல்லாம் கொடுத்திருப்பார்கள். இப்போது "எழுத்தாளர்" என்றுவேறு சொல்கிறார்கள். சில இடங்களில் இப்போது "பதிப்பாளர்" என்று சொல்வது உண்டு. எந்தப் பதிப்பகம் என்பதைச் சொல்ல, பாவம், அவர்களுக்குப் பெரும்பாலும் இடம் இருப்பதில்லை.



ஆனால் நான் விடுவதில்லை. எங்கே போனாலும் நம்ம பிராண்ட் கிழக்கு பதிப்பக டி-ஷேர்ட்டைப் போட்டுக்கொண்டு போய்விடுவது. லைவ் டிவியில் அதையெல்லாம் அழிக்கமுடியாதில்லையா?

சில நாள்களுக்குமுன் குங்குமம் தோழியிலிருந்து எனக்கு சமையல் செய்யத் தெரியுமா என்று கேட்டு அழைப்பு. நான் சமைப்பதைப் படம் எடுக்கவேண்டும் என்று சொல்லியிருந்தார்கள். அதற்காக நாள் குறித்து, ஒரு ஃபோடோகிராபர் வந்திருந்தார். வந்தவுடனேயே "சார், இந்த டி-ஷேர்ட் போட்டிருக்கிறீர்களே, வேறு ஏதாவது பளிச்சென்று சட்டை போட்டுக்கொள்ளலாமே" என்று கேட்டார். "இல்லை, இதுதான் நான் எப்போதும் போட்டுக்கொண்டிருக்கும் சட்டை, ஜீன்ஸ். இதிலேயே இருக்கிறேன்" என்றேன். பொறுமையாக காய்கறிகளை வெட்டி, சமையல் முழுதையும் முடிக்கும்வரை படங்கள் எடுத்துக்கொண்டார்.


பதிப்பிக்கும்போது கவனமாக ஃபோட்டோஷொப்பில் எடுத்துக் கொண்டுபோய் அனைத்து கிழக்கு பதிப்பக லோகோக்களையும் அழித்துவிட்டுத்தான் பதிப்பித்திருக்கிறார்கள்.

சிரிப்பாக வந்தது. இந்த லோகோ உங்களுடைய பத்திரிகையில் வருவதாலா, எனக்குப் பிரமாதமான விளம்பரம் வந்து, என் பதிப்பகப் புத்தகங்கள் விற்று நான் கோடி ரூபாய் சம்பாதித்துவிடப் போகிறேன்? இந்த சட்டை போட்டிருந்தால் அதைப் படமாகப் போட உங்கள் நிறுவனத்தின் சட்ட திட்டங்கள் அனுமதிக்காது என்றால் அதை என்னிடம் சொல்லியிருக்கலாமே? நானும் விரும்பியிருந்தால் வேறு சட்டை போட்டிருப்பேன், அல்லது உங்கள் சங்காத்தமே வேண்டாம் என்று சொல்லியிருப்பேன். அல்லது நீங்களும் என் பிடிவாதத்தைப் பார்த்து, நீயும் வேண்டாம் உன் சமையலும் வேண்டாம் என்று சொல்லியிருப்பீர்கள். நான் பாட்டுக்கு ஏதோ புத்தகத்தைப் படித்துக் கொண்டு என் நேரத்தை நல்லபடியாகச் செலவழித்திருப்பேன். "இங்கே முகத்தைக் காண்பி, அங்கே முகத்தைக் காண்பி" என்று உங்களுக்காக போஸ் கொடுத்து நேரத்தை வீணடித்திருக்கமாட்டேன்.

இனி ஒரு முடிவு எடுத்துவிட்டேன். என் பெயரை "பதிப்பாளர், கிழக்கு பதிப்பகம்" என்று போட்டால்தான் கட்டுரை எழுதித்தருவேன். இல்லாவிட்டால் தயவுசெய்து என்னை அணுகவேண்டாம். உலகில் எவ்வளவோ நல்லவர்கள் இருக்கிறார்கள்.

---

# லட்சுமிகாந்தன் கொலை வழக்கு








பத்திரிகையாளர், "இந்து நேசன்" லட்சுமிகாந்தன் கொலை வழக்கில் கைதான ஜெயானந்தன், உடனே "அப்ரூவர்" ஆனான். சென்னை ஒற்றை வாடைத் தியேட்டரில், எம்.கே.தியாகராஜ பாகவதரையும் என்.எஸ். கிருஷ்ணனையும் சந்தித்ததாகவும், நச்சுப் பாம்பை ஒழித்துக் கட்ட என்ன செலவானாலும் ஏற்பதாகக் கூறி, அவர்கள் சதித்திட்டம் தீட்டியதாக வாக்குமூலம் கொடுத்தான். "எங்கள் கவுரவத்திற்கும், ஒழுக்கும் கேடு விளைவிக்கும் வகையில், துரோகம் செய்யமாட்டோம் என்று சத்தியம் செய்ய வேண்டும்..." என்று, பாகவதர் கேட்டார். அதன்படியே, உப்பு, வெற்றிலை வைத்து சத்தியம் செய்து கொடுத்தானாம்.

பாகவதர், என்.எஸ்.கிருஷ்ணன், பட்சிராஜா ஸ்டுடியோ அதிபர் ராமுலு நாயுடு ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

பம்பாயிலிருந்து வந்த, வழக்கறிஞர் கே.எம்.முன்ஷியின் வாதத்தின் பேரில், சதி ஆலோசனை நடந்ததாக சொல்லப்படும் நாளில், ஸ்ரீராமுலு நாயுடு பம்பாய் தாஜ் ஹோட்டலில் ஆர். கே.சண்முகம் செட்டியாருடன் இருந்தார் என்று நிரூபித்து, ஸ்ரீராமுலு விடுதலை பெற்றார். முனியின் ஒரு நாள் பீஸ், அக்காலத்திலேயே எழுபது ஆயிரம் ரூபாய்.

முன்ஷியின் வாதத்தால் ஸ்ரீராமுலு விடுதலையானதைக் கண்ட என் எஸ்.கே., தானும் முன்ஷியை வழக்கறிஞராகக் வைத்துக் கொண்டார். முன்ஷியின் வாதத்தைக் கேட்டவுடன், கோர்ட் தன்னையும் விடுவிக்கும் என்று நம்பிக்கையோடு இருந்தார்.

சதி நடந்ததாகச் சொல்லப்படுகிற நாளில், கிருஷ்ணன் மாடர்ன் தியேட்டர்சின் படப்பிடிப்பில் இருந்தார் என்று நிரூபிக்க முயன்றார் முன்ஷி.

அப்போது, மாடர்ன் தியேட்டர்சின் படம் டைரக்ட் செய்து வந்தவர் எம்.வி.ராமன் என்பதால், அவர் சாட்சிக் கூண்டில் ஏற்றப்பட்டார். "நவ., 7ஆம் திகதி, என்.எஸ் கிருஷ்ணன் மாடர்ன் தியேட்டர்சில் இருந்தார்..." என்று சாட்சி அளித்தார் ராமன். "அன்று பக்த ஹனுமான் படத்துக்காக, ஒரு தந்திரக் காட்சி எடுத்துக் கொண்டிருந்தோம். மாலையில் என்.எஸ்.கிருஷ்ணன் வந்தார்..." என்று, ஒளிப்பதிவாளர் பெய்லஸ்சும், "மாலையில் மாடர்ன் தியேட்டர்சில் சிற்றுண்டி சாப்பிட்டார்..." என்று, சவுண்ட் இன்ஜினியர் பிள்ளையும் சாட்சி கூறினார்.

ஆனால், இந்தக் சாட்சிகள் எதுவும் பலிக்கவில்லை. என்.எஸ். கிருஷ்ணனுக்கும், பாகவதருக்கும், ஆயுள் தண்டனை என்று தீர்ப்பானது.

- "புகழ் பெற்ற வழக்குகள்" நூலிலிருந்து...

---

- வெ.சந்திரமோகன் -




நழுவிச் சென்ற பின்னர், அதே நாற்காலியில் எதுவுமே தெரியாத அப்பாவியாக அமரும் பாத்திரம் எம்.ஜி.ஆரின் இயல்பான நடிப்புக்கு ஒரு உதாரணம். "இதெல்லாம் நான் சாப்பிடவேயில்லயே" என்று அவர் சொல்லும்போது முகத்தில் அத்தனை வெகுளித்தனம் இருக்கும்.

அரச கட்டளை படத்தில் பெருங் கோபத்துடன் தன்னைத் தாக்க வரும் நம்பியாரிடம் சண்டை போடுவதற்கு முன் தனக்கே உரிய நம்பிக்கைப் புன்னகையுடன் அலட்டிக்கொள்ளாமல் எம்.ஜி.ஆர். பேசும் விதம் அவரது நிதானமான, அழுத்தமான நடிப்பைப் பறைசாற்றும். நம்பியாரின் வாள் எம்.ஜி.ஆரின் மார்புக்கு அருகே நீண்டிருக்கும். "உன் உயிரைப் பறிப்பேன்" என்று கண்களை உருட்டி நம்பியார் மிரட்டுவார். அப்போதும் அதே புன்னகையுடன் "செடியில் பூத்த மலரல்ல பெரியவரே என் உயிர்..." என்று சொல்லிச் சிறிய இடைவெளி விடுவார். புன்னகை மறையும். முகம் சற்றே தீவிரம் கொள்ளும். "...நீங்கள் நினைத்தவுடன் கை நீட்டிப் பறிப்பதற்கு" என்பார். அப்போது கை உடைவாளைப் பற்றியிருக்கும். அதன் பிறகு வாய்ப்பேச்சுக்கு வேலை இருக்காது. "மகாதேவி" படத்தில் தன் தளபதி வீரப்பாவின் நிஜ முகம் தெரியும் கணத்தில் எம். ஜி.ஆர். தன் கண்களின் சலனத்தில் அந்த பிரக்ஞையை வெளிப்படுத்துவார். எம்.ஜி.ஆரின் நுட்பமான நடிப்பு வெளிப்படும் இடங்கள் இவை.

வில்லன்களைவிடக் குறைந்த பணபலம் கொண்டவர் என்றாலும் மக்களின் அன்பும், விதவைத் தாயின் ஆசீர்வாதமும் தனது பலம் என்று துணிச்சலாகச் செயற்படும் பாத்திரங்கள் பெரும்பாலும் அவருக்கு அமைந்தன. அந்தத் துணிச்சலுடன் பதற்றம் எதுவுமில்லாமல் வில்லன்களிடம் நம்பிக்கைப் புன்னகையுடன் அவர் பேசும் வசனங்கள் அவரது அரசியல் செல்வாக்குக்கே அடித்தளமாக அமைந்தன. அந்தக் காட்சிகளில் அவர் தனது எல்லையைத் தாண்டி ஆர்ப்பாட்டமாகப் பேசமாட்டார். "நாகப்பா.. நல்லா கேட்டுக்க! உன் அக்கிரமங்களை நான் ஒரு நாளும் பொறுத்துக்கமாட்டேன்" என்பதுதான் வில்லன்களுக்கான அவரது அதிகபட்ச எச்சரிக்கை. அதன் பின்னர் அவர் வீணாகப் பேசிக்கொண்டிருக்க மாட்டார். வீர வசனங்களை அவரது கைதான் பேசும். சண்டைக் காட்சிகளில் வேகமும் கோபமும் அற்புதமாக வெளிப்பட்டுவிடும்.

துணை நடிகராக அறிமுகமாகி இறுதிவரை கதாநாயகனாகவே நடித்த நடிகர் என்பதால், தன் வயதுக்குத் தகுந்த பாத்திரங்களில் நடிக்கும் சந்தர்ப்பம் அவருக்கு வாய்க்கவே இல்லை. சக நடிகரான சிவாஜி போல தந்தை, மாற்றுத் திறனாளி போன்ற பாத்திரங்களில் அவர் நடிக்காமல் போனது துரதிருஷ்டம் தான். பெரும் வணிக மதிப்பும், ஆராதிக்கும் இரசிகர் கூட்டமும் கொண்ட நட்சத்திர நடிகர்களுக்கு நிகழும் விபத்துத்தான் இது.






# நிகழ்வுகளின் பதிவுகள்....

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் நிறுவுனர் நினைவு தினமும் அண்மையில் நடைபெற்றபோது வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். நந்தகுமார் மங்கள விளக்கேற்றுவதையும், இளைப்பாறிய அதிபர் சிவா கிருஷ்ணமூர்த்தி உரையாற்றுவதையும், மாணவர்களின் நடன நிகழ்வையும் காணலாம். (03)





காரைநகர் ஈழத்து சிதம்பரம் மாணிக்கவாசகர் சுவாமிகள் மடாலயத்துடன் இணைந்த புதிய ஸ்ரீ மனோன்மணி அம்பாள் மண்டபத்திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கட்டடத்தை அமைத்து வழங்கிய சிவஞானம் தம்பதிகள் கௌரவிக்கப்படுவதையும், தேசிய கல்வியியற்கல்லூரி மாணவர்களின் நாட்டிய நாடகத்தினையும், மண்டபத்தின் தோற்றத்தையும் காணலாம். (50)





உடுப்பிட்டிநீதிதேவி சனசமூக நிலையத்தின் தலைவராக பல ஆண்டுகள் கடமையாற்றிய அமரர் சின்னக்குட்டி வடிவேலுவின் உருவப்படத்திற்கு கரவெட்டி பிரதேச செயலர் சிவஸ்ரீ மலர்மாலை அணிவித்து கௌரவிப்பதைக்காணலாம். (116)



நாணாட்டான் வைத்தியசாலையில் நடைபெற்ற தென்மராட்சி லயன்ஸ் கழகத்தின் கண்பரிசோதனை முகாமில் லயன்ஸ் அதிகாரியால் பயனாளிக்கு கண்ணாடி வழங்குவதைக் காணலாம். (01)



சாவகச்சேரி அரசடி சந்தியிலுள்ள சனசமூக நிலையம் கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகிறது. (130)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் உள்ளூராட்சி வார நிகழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மங்களவிளக்கேற்றுவதையும், மின்சாரசபை சாவகச்சேரி அத்தியட்சகர் மாணவிக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (11)

# வாகன வசதிகள் போதியளவு இல்லை நெருக்கடி நிலையில் செயற்பாடுகள்

(வடமராட்சி)

போதியவாகன வசதிகள் இன்மையால் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் சேவையில் நெருக்கடி நிலை தோன்றியுள்ளதாக கால்நடை வளர்போரினால் தெரிவிக்கப்படுகிறது.

கால்நடை உற்பத்தி சுகாதார அமைச்சினால் பருத்தித்துறை கால் நடை அலுவலகத்துக்கென வழங்கப்பட்ட வாகனம் கரவெட்டி, மருதங்கேணி, சாவகச்சேரி போன்ற அலுவலகங்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றது. அதன் சாரதி அச்சுவேலி பாம் வாகனம் தெல்லிப்பளை கால்நடைத்திணைக்கள ஆட்டோ மற்றும் யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப்பணிப்பாளரின் உத்தியோகபூர்வ வாகனம் போன்றவைக்கு சாரதியாகவும் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றார்.

இதேவேளை மருதங்கேணி கால்நடை அலுவலகத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வந்த வைத்தியர் இடை நிறுத்தப்பட்டு பதிலாக பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரியே கடமையாற்றிவருகின்ற துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இவ்வாறானதொரு நிலையில் பருத்தித்துறை பிரதேசசெயலர் பிரிவு மற்றும் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுகளில் கால்நடை வளர்போர்களுக்கென பல்வேறு திட்டங்களை அரசாங்கம் வழங்குகின்றபோதிலும் நடைமுறைப்படுத்துவதில் காலதாமதங்களும் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு வறுமைக்கோட்டின் கீழ்வாழும் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக வழங்கபபடும் கால்நடைகள் நோய்த்தாக்கம் ஏற்படும் மிடத்து அலுவலகம் கொண்டுசென்று சிகிச்சையளிக்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளதாக கால்நடை வளர்ப்போர் கவலை தெரிவித்துள்ளனர்.

மேற்படி பருத்தித்துறை கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தில் தொடர்ந்துவரும் நெருக்கடிகள் தொடர்பிலும் அதனால் கால்நடை வளர்போர் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பிலும் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டபோதிலும் அதிகாரிகள் கவனயீனமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (116)

## சுதேச வைத்திய சபையின் இயக்குநர் சபைக்கூட்டம்

(யாழ். நிருபர்)

வடஇலங்கை சுதேசவைத்தியசபையின் இயக்குநர்சபை, அபிவிருத்திக்குழு, பாடத்திட்டக்குழு, நடவடிக்கைக்குழு ஆகியவற்றுக்கான பொதுக் கூட்டம் எதிர்வரும் ஜனவரிமாதம் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மதியம் 1.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

188,பி மானிப்பாய் வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடஇலங்கை சுதேச வைத்தியசபை கட்டடத்தில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படி வடஇலங்கை சுதேச வைத்தியசபை செயலாளர் டாக்டர் ஜெ.ஜெயலன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (10)



யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியின் பொன்விழா இறுதிநாள் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்ற போது பிரதம அதிதி, அதிபர் மாணவிகளின் கண்காட்சியை பார்வையிட்டுவருவதையும் பொன்விழா நூலை யாழ். மாநகரசபை உதவி மேஜர் சட்டத்தரணி எம்.ரமீஸ் பெற்றுக்கொள்வதையும் காணலாம். (105)

# அபிவிருத்திகள் தாமதமடைவது ஏன்? தவிசாளர் தருகிறார் விளக்கம்

(திருநெல்வேலி)

நல்லூர் பிரதேச சபையின் சில அபிவிருத்திப் பணிகளைத்தொடரவிடாமல் ஆளுநரின் அங்கீகாரம் தேவை எனத் தெரிவித்து பிராந்திய உதவி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தடைகளைப்போட்டு வருகிறார் என சபையின் தவிசாளர் ப.வசந்தகுமார் குற்றஞ் சாட்டியுள்ளார்.

வாழ்வாதார உதவிகள், சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி, முன்பள்ளித் தேவைகள், விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்போன்ற சில திட்டங்களை உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் தடங்கல்களால் நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லை என அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

பல தடவைகள் நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டும் அவற்றுக்கும் எந்தவிதமான பதிலும் இல்லை. 2013ஆம் ஆண்டுக்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆண்டும் முடிவடைந்து 2014ஆம் ஆண்டும் தொடங்கப்போகின்றது. உதவி ஆணையாளரிடமிருந்து எதுவும் கிடைக்கப் பெறவில்லை எனத் தவிசாளர் மேலும் வருத்தத்துடன் தெரிவித்தார்.

இவற்றுக்கான நிதி ஒதுக்கப்பட்ட நிலையில் இவ் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க விடாமல் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரே தடைகளைப் போட்டு வருகிறார். எமது சபைக்கான நிதி ஒதுக்கீட்டை நாம் உரிய முறையில் பயன்படுத்துவதற்கு அனுமதியைப் பெற்றுத்தர வேண்டும் எனத் தவிசாளர் மேலும் தெரிவித்துள்ளார். (137)

# உமாமகேஸ்வரன் வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(வவுனியா)

வவுனியா உமாமகேஸ்வரன் வீதி மிக மோசமான நிலையில் சேதமடைந்துள்ளதால் இவ் வீதியில் பயணிக்கும் போது பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கோயில் குளம் முதல் சிதம்பரபுரம் வரை செல்லும் இந்த பிரதான வீதியில் நாள் ஒன்றுக்கு 20இற்கும் மேற்பட்ட அரசு, மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவைகள் இடம் பெறுகின்றன.

கோயில் புதுக்குளம், சமளங்குளம், முருகனூர் ஆசிகுளம் கோமரசன் குளம் போன்ற கிராமப்புறங்களில் இவ்வீதி படுமோசமான நிலையில் சேதமடைந்துள்ளது. பல ஆண்டு காலமாக சேதமடைந்த இவ்வீதியினை செப்பனிட இதுவரையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

பல்லாயிரக்கணக்கானோர் பாவிக்கும் சேதமடைந்த இவ்வீதி எந்த ஒரு அதிகாரியின் கண்ணுக்கும் புலப்படவில்லையா? என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இவ்வீதியை மக்களின் போக்குவரத்திற்கு உகந்ததாக அமைந்துத்தர உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (இ)

# வேலை வாய்ப்புச் செய்திகள்

தற்போது ஆண்களுக்கு ஏராளமான வேலை வாய்ப்புகள் உங்களுக்குத்தேவையான வேலைகளை நீங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளமுடியும். வயது 20 முதல் 60 நல்ல சம்பளம் இலங்கையில் எப்பகுதியிலிருந்தும் தொடர்பு கொள்ளமுடியும். தொடர்புக்கு: 0114345313, 077013303

---

கிருலப்பனையிலுள்ள யாழ். குடும்பத்துக்கு தங்கியிருந்து நன்றாக யாழ். உணவு சமைக்கக்கூடிய பணிப்பெண் தேவை. வடக்கு கிழக்கு மாகாணத்துப்பெண்கள் விரும்பத்தக்கது. தொடர்புக்கு: 0115288916, 0759600233.

---

தனியார் நிறுவனத்திற்கு சாரதி உதவியாட்கள் தேவை. 48,000 நிரந்தர தொழில் உணவு தங்குமிடம் தொடர்புக்கு 0712528369, 0777554068, 0726293122, 0754763658.

---

ஜேம், பிஸ்கட், பால்மா உற்பத்தி நிறுவனங்களுக்கு வெல்டர் சாரதி, பாதுகாப்பு அதிகாரி ஆண், பெண் 48,000 தொடர்புக்கு 0712528369, 0777554068.

---

ஆண்,பெண் இருபாலாருக்கும் விரைவான தொழில் வாய்ப்பு திருகோணமலை, களனி, பேலியகொடை, அவிசாவளை, நாரஹேன்பிட்டிய, ப்ஸ்யால, போன்ற பிரதேசங்களில் தொழிற்சாலைகளான ஆடை, தேயிலை, பால்மா, பிஸ்கட், ஜேம், கோடியல், கிளவுஸ் போன்ற தயாரிப்புக்களுக்கு உற்பத்தி உதவியாளர் களஞ்சியம், பொதியிடல் உணவு, தங்குமிடம் வசதிகள் உண்டு தொடர்புக்கு 0770224156.

---

வருகைதரும் நாளிலேயே நிரந்தரத்தொழில் கொழும்பு, குருநாகல், ஜாஎல, வத்தளை, கொட்டாவ கருவெல போன்ற பிரதேசங்களில் பிஸ்கட், கிளவுஸ், பால்மா, சொக்லேட் PVC என்பவற்றில் உற்பத்தி பொதியிடல் களஞ்சியப் பிரிவில் ஆண், பெண் வேலையாட்கள் தேவை. நாடு முழுவதும் ஆட்சேர்ப்பு உண்டு தங்குமிடம் செய்து கொடுக்கப்படும் தொடர்புக்கு 0776838223.

---

லொன்றி பாஸ் உடனடியாகத் தேவை உணவு மற்றும் தங்குமிடவசதி இலவசம் சம்பளம் தொடர்புக்கு 0788572903.

---

இலங்கையின் பழைய நாணயத்தாள்கள் சகல வெண்கல வகைகள் தேவை. தொடர்புக்கு 0774663874.

---

துறைமுகத்தில் பொருட்கள் போக்குவரத்து செய்யும் கண்டெய்னருக்கு சிங்களம் தெரிந்த கண்டெய்னர் உதவியாட்கள் தேவை. தொடர்புக்கு 0770696202.

---

யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து வேலை செய்ய சகல தையல் வேலைகளும் சொல்லிக்கொடுக்கத்தெரிந்த பெண்ணொருவர் தேவ்வை. தொடர்புக்கு 0786724671.

---

புத்தாண்டுபுதுத்தொழில் நிரந்தரமாக சேர்த்துக் கொள்ளப்படும் சம்பளம் 39,000 நாடு எங்கிலும் உணவு, தங்குமிடம் இலவசம். O/L பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கு விசேடமான்து தொடர்புக்கு 071 2250047, 0758265788.

---

போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் மற்றும் பழச்சாறு வகைகள் இலங்கை முழுவதும் விநியோகம் செய்ய முகவர்கள் தேவை. தொடர்புக்கு 0717876661.

---

ஆண்,பெண் இருபாலாருக்கும் உடனடி வேலை வாய்ப்புக்கள். யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா கிளைகளுக்கு சந்தைப்படுத்தல் குழு வவுனியா கிளை அலுவலகத்திற்கு பெண் உத்தியோகத்தர் வெற்றிடம் உண்டு தமிழ், சிங்களம் தெரிந்தவர்கள் நேர்முகத்தேர்விற்கு நேரில் வரவும் யாழ்ப்பாணம் 0212270586, வவுனியா 0242226382.

---

வவுனியா,குருமண்காடு பகுதியிலுள்ள வீடொன்றுக்கு வீட்டு வேலைகள் தெரிந்த 40-58 வயதுக்கிடைப்பட்ட வீட்டுப்பணிப்பெண் தேவை. தங்கிநின்று பணிபுரியக்கூடியவராக இருத்தல் வேண்டும். சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும் தொடர்புக்கு 0752582397.

# சாதனை மாணவர்களின் உள்ளத்திலிருந்து.....

## ஜெரின்ஷியா டொமினிக் அல்பிரட்

வேம்படி மகளிர் கல்லூரி
வர்த்தகப்பிரிவு -3A
மாவட்ட நிலை : 05
தேசிய நிலை: 651



பாடசாலை ஆசிரியர்களின் ஒத்துழைப்பும், பெற்றோரின் ஆதரவுமே நான் இப்பெறுபேற்றை பெற்றமைக்கு காரணமாகும். அந்தவகையில் அவர்களுக்கு நான் நன்றி கூறுகின்றேன்.

நான் க.பொ.த (சா/த) பரீட்சையில் 6ஏ,பி,2சி பெற்றேன் சுயமாகக் கற்றால் இலகுவாக படித்துவிடலாம். எனது தந்தை வாகன திருத்துனராகவும் தாய் ஆசிரியராகவும் உள்ளனர். இவர்களின் ஒத்துழைப்பும் ஊக்கத்தாலுமே நான் இப்பெறுபேற்றைப் பெற்றேன்.

## பாலமனோகரன் கீர்த்தனா

வேம்படி மகளிர் கல்லூரி
வர்த்தகப் பிரிவு -3A
மாவட்ட நிலை : 06
தேசிய நிலை: 763



கற்கும் காலத்தில் கல்வியை சிறந்த முறையில் கற்றுவிட வேண்டும். பாடசாலை ஆசிரியர்கள், கல்விநிலைய ஆசிரியர்கள், நண்பர்களின் ஒத்துழைப்பிலும் உதவியாலுமே இப்பெறுபேற்றை பெறமுடிந்தது.

நான் க.பொ.த (சா/த) பரீட்சையில் 5ஏ,2பி,2சி பெறுபேற்றைப் பெற்றேன். நான் கல்வியில் மட்டுமல்ல பூப்பந்தாட்டத்தில் மாவட்ட மட்டம் வரை சென்றிருக்கிறேன்.

நான் இப்பெறுபேற்றை பெற்றமைக்காக அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

## ராஜசிங்கம் கார்த்திகா

வேம்படி மகளிர் கல்லூரி
உயிரியற் பிரிவு -3A
மாவட்ட நிலை : 09
தேசிய நிலை: 169



கற்பதற்கு இணைப்பாட விதானச் செயற்பாடுகள் தடையல்ல கரப்பந்தாட்ட அணித்தலைவராக இருந்து தேசியம் வரை அணியை வழிநடாத்தியிருக்கிறேன்.

தந்தை தபால் அதிபராகக் கடமையாற்றுகின்றார். நான் க.பொ.த (சா/த) பரீட்சையில் 9ஏ பெறுபேற்றைப் பெற்றேன். ஆசிரியர்களின் ஆலோசனையும் நண்பர்களின் உதவியும், பெற்றோரின் ஆதரவுமே இப்பெறுபேற்றை பெறுவதற்கு காரணமாகும் சுயகற்றலே பரீட்சைக்கு அவசியமானது.

## பாலசுந்தரம் பானுஜா

வேம்படி மகளிர் கல்லூரி
வர்த்தகப் பிரிவு -3A
மாவட்ட நிலை : 03
தேசிய நிலை: 530



நம்பிக்கையும் திடமனமும் இருந்தால நல்ல பெறுபேற்றினை பெறலாம். எனது தந்தை விவசாயி அவரின் அக்கறையும் ஒத்துழைப்புமே நான் இப்பெறுபேற்றை பெற்றமைக்கு காரணமாகும்.

நான் க.பொ.த (சா/த) பரீட்சையில் 7ஏ,2பி பெற்றேன்.எனது பெற்றோர் கல்விக்கு தடையாக இருக்கவில்லை சுதந்திரமாகக் கற்றேன்.

சாதிப்பதற்கு முயற்சியும் நம்பிக்கையும் அவசியமாகும்.

தொகுப்பு : கணா நாதன்

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொழில் தன்மை அறிய வேண்டும்

### வேலைவாய்ப்பு பணியகம் அறிவுறுத்து

SRI LANKA BUREAU OF FOREIGN EMPLOYMENT

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்லும் பணியாளர்கள் தமது தொழில் தன்மை தொடர்பாக அறிந்துகொள்ள வேண்டும என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த அறிவுறுத்தலை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக பிரதி பொதுமுகாமையாளர் மங்கல ரந்தெனிய விடுத்துள்ளார்.

தமது தொழில் தன்மை தொடர்பாக அறிந்து கொள்ளாமை குறித்தே ஏராளமான முறைப்பாடுகள் கிடைக்கப் பெறறுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தொழில் தருனர்களிடம் உடன்படிக்கை கையெழுத்திடும் போது தொழில் தன்மை குறித்து அறிந்துகொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நாளை வெளிவருகின்றது மரணச்சடங்கு பாடல்களின் ஒலிப்பேழை

பட்டிப்பளை பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம் தொகுத்து வழங்கும் மரணச் சடங்குப் படல்களின் ஒலிப்பேழை வெளியிட்டு விழா எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அரசடிவீதி விக்னேஸ்வரா மகாவித்தியாலய மண்டபத்தில் மன்றத் தலைவர் த.மேகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பட்டிப்பளை பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்தினம் பிரதம விருந்தினராகவும், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஞா.ஸ்ரீநேசன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் த.தயாசீலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்கின்றனர்.

கலாசார உத்தியோகத்தர்களான வளர்மதிராஜ், ஆர்.பிரபாகரன் ஆகியோர் கௌரவ அதிதிகளா கவும் சிவசிறீ.த.சாம்பசிவ சிவாச்சாரி யார் ஆன்மிக அதிதியாகவும் கலந்துகொள்கின்றனர்.(10)

# வவுனியாவில் வீடு தீக்கிரை சந்தேகத்தில் நால்வர் கைது

(வவுனியா)

வவுனியா - சுந்தரபுரத்தில் இராணுவத்தில் இணைந்து கடமையாற்றும் தமிழ் பெண்ணின் வீட்டை எரித்த குற்றச்சாட்டில் நால்வரை சந் தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா - சுந்தரபுரம் வீட்டுத திட்ட பகுதியில் இராணுவத்தில் இணைந்துள்ள யுவதியொருவரின் வீடு நேற்று முன்தினம் அதிகாலை இனந்தெரியாதோரால் எரியூட்டப்பட்டிருந்தது.

எனினும் சம்பவம் இடம்பெற்ற வேளை தாயார் அவரது மகன் வட்டிற்கு வெளியே சென்றிருந்ததுடன், ஏனையவர்கள் அருகில் உள்ள வீடொன்றில் இரவு தங்கியி ருந்த நிலையில் குறித்த வீட்டிற்குள் நுழைந்து பெறுமதி மிக்க தளபாடங்கள், ஆவணங் களை தீயிட்டு எரித்துள்ளனர். அத்துடன் வீடும் எரியூட்டப்பட் டுள்ளது.

தற்போது வவுனியா மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டின் பாதிக்கப்பட்ட மேற்படி குடும்பத்தினர் தங்குவதற்கு தற்காலிக கொட்டகை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், இராணுவத்தினரால் சமைத்த உணவும் வழங்கப்படுகிறது.

இதேவேளை, இச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் நால்வரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# அதிகளவு மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு

2012-2013 ஆம் ஆண்டு கல்வி மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு இணைத்துக் கொள்ளும் நடவடிக்கை ஜனவரி இறுதி வாரத்தில் இருந்து முன்னெடுக்கப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைககுழு தெரிவித்துள்ளது.

பொறியியல் மற்றும் பௌதீகவியல் பிரிவு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் முதலில தொடங்கி வைக்கப்படும என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் க்ஷெனிகா ஹிரும்புரேகம தெரிவித துள்ளார்.

# விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்காக 76 பாடசாலைகள் 8 இல் ஆரம்பம்



(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும் 76 பாடசாலைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் எட்டாம் திகதி வரை மூடப்பட்டிருக்கும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாளை தொடக்கம் ஜனவரி ஏழாம் திகதி வரை சாதாரண தரப் பரீட்சையின் முதற்கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்.யூ.எம்.என்.ஜே.புஸ்பகுமார கூறியுள்ளார்.

விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்காக 103 நிலையங்கள் தயார்படுத்தப்பட் டுள்ளன.

சாதாரண தரப் பரீட்சையின் இரண்டாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் ஜனவரி மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை முன் னெடுக்கப்படவுள்ளன.

இதற்காக 19 பாடசாலைகளில் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இம்முறை கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் 40 ஆயிரம் ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

மொத்தமாக 110 இலட்சம் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# சபரிமலை புனித யாத்திரை மஹா மண்டல பூஜை

(யாழ்.நிருபர்)

அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கத்தின் 38 ஆவது ஆண்டு சபரிமலை புனித யாத்திரை மஹாமண்டல பூஜைப் பெருவிழா கடந்த வியாழக்கிழமை ஜெயந்திநகர் ஜிந்துப்பிட்டி ஸ்ரீசிவசுப்பிரமணியர் ஆலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட பிரதமர் டி.எம்.ஜயரட்ணவுக்கு கிரீடம் சூடி பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

சபரிமலைக்குச் செல்லும் யாத்திரிகைகளை வழியனுப்புவதற்கு பிரதமர் அங்கு விஜயம் செய்திருந்தார்.அவருடன் ஜனாதிபதியின் இந்துசமய விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரம்மஸ்ரீ இராமச் சந்திரக்குருக்களும் (பாபுசர்மா) உடன் சென்றிருந்தார்.

மாலை அணிந்த சுவாமிகளுடன் பெருமளவு அடியார்களும் இந்நிகழ்வுகளில் கலந்துகொண்டனர். (10)

# க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை - 2014

# கல்வி முரசு

ஆங்கிலம்

பகுதி - I - II
2 மணி



**TEST 01**

**Fill in the blanks in the following text. Use words form the box. The first one is done for you.**

**I, mine, me, myself, my**

1) .......My mother presented (2) ................... a bicycle on (3) ..................... birth-day.

4) ................... was so happy that rode it the whole day. My Friend, Nimal also has an old bicycle.

(5) ......................... . is a new one. One day, there was a puncture in it and I re-paired it.

**TEST 02**

**Find required information from the invitation and fill the blanks.**

> **Madya Maha Vidalaya - Anuradhapura T.P 025 -2265337**
>
> **Dear Principal**
> Our \Annual Prefects' day' will be held on 16th January 2013 at the school auditorium from 8.30 a.m. to 3.30 p.m.
> We cordially invite ten prefects of your school for this function.
> Confirm your participation before 10th January 2013.
>
> **Thank you,**
> **Upul Galagedara**
> **Head Prefect**
> **Kekirawa M.M.V.**

(1) Function : -------------------
(2) Date of the function : -------------------
(3) Time : -------------------
(4) Venue : -------------------
(5) Invitees : -------------------
(6) Sender of the invitation : -------------------

**TEST 03**

**Fill in the blanks in the following text using the words given in the box.**

**water, paddy, town, helpful, fruits, before, small, tank, happy, chance**

I went to Anuradhapura to see my (1) grandparents last vacation. They live in a (2) ------------------------------- village near Anuradhapura (3) ---------------- There is a large tank in this village. This tank provides (4) ------------ to the (5) -------- ------------ fields around. The people in the village were very (6) -------- and kind to me. They me some wild flowers and (7) ------------------------- which I had never seen or tasted (8) -------------------- I had a (9) ---------- to have a bath in the (10) ------------------ and it made me so (11) -------------- and excited.

**TEST 04**

**Fimd the missing information from the box about the following historical places in Sri Lanka.**

| | | |
|---|---|---|
| **hot and dry** | **North Central** | **Tisawewa** |
| **about 175 kms** | **historical place** | **Agriculture** |
| **Anuradhapura** | **Srimahobodhi** | **Ruwanweliseya** |
| **wilputtu** | | |

1. Place : -------------------------
2. Province : -------------------------
3. Importance : -------------------------
4. Religious : -------------------------
5. Climate : -------------------------
6. How far from Colombo : -------------------------
7. Tank located : -------------------------
8. Game park in the district : -------------------------
9. Famous Dagaba : -------------------------
10. Main occupation in tha area : -------------------------

**TEST 05**

**Write a paragraph on one of the following. Use about 50 words.**

(1) My pet (2) My favourite story book (3) My favourite teledrama

------------------------------------------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------

**TEST 06**

**Read the following text and answer the questions below.**

Sports and games prepare students for the future work place. In addition to the lesson they learn in the class room, such as discipline and unselfishness, they gain experiences in the playground. One of the most important tasks a child needs in to prepare for the life outside home. It is what the student do in their free time that really prepares them to take their place in society as citizens when they grow up. Instead of working their own benefit, sports and games teach them how to work as a team. This training enables the younger generation to work for the country at a later stage. Another important lesson, a child must learn is how to overcome fears of failure.

1) What prepares students for the future work place?
------------------------------------------------
2) What do they ain in the playground?
------------------------------------------------
3) "Sports and games develop team spirit" write down the sentences which give the above idea.
------------------------------------------------
4) Write down two adjectives from the text.
1) ------------------ 2) -------------------------

5) What refers. i) "They" in line i) --------------------
ii) "It" in line ii) --------------------

**TEST 07**

**As the monitor of your class, you want to keep the classroom clean and beautiful. Write down five instructions to be followed.**

Example : Sweep the classroom daily.

1) ------------------------------------------------------------
2) ------------------------------------------------------------
3) ------------------------------------------------------------
4) ------------------------------------------------------------
5) ------------------------------------------------------------

Write on one of the following. Use about 100 wards.
How I spent my last weekend
Our School Sports meet
School Holidays

**TEST 08**

**Read the following text and fill in the blanks using the words given in the box.**

**have, are, has, could, had, is**

I ----------------------- many friends both in my village and at school. But among them Dinesh (2) ----------------------- the best. Dinesh (3) -------------------- good qualities that I admire most. This year we (4) ----------------------- in the same class, but we (5) ----------------------- no chance to be together when we were in Grade 10. Even then we (6) ----------------------- meet each other every day.

Fill in the following blanks using correct forms of the verbs given in the brackets.

I (1) ----------------------- (born) in the city of York in the year 1632. When I was still a boy, I (2) ----------------------- (want) a young man. Then some friends asked me (4) ----------------------- (go) sea with them, I went without (5) -------- ---------------- (ask) my father, trusting in God (help) me, I went to sea. Our ship was a small one, carrying fifteen men.

Fill in the blanks correctly. The blanks are numbered. Insert the correct number into the box next to each of the following words.

One day Andare and (1) ----------------------- wife had a quarrel (2) --- -------------------- wife chased him out (3) ----------------------- the house and locked (4) ----------------------- door. I am going to (5) ------------------- ----- into the well should (6) ----------------------- and ran into the (7) ----------- ------------- In the dark he (8) ----------------------- up a huge stone (9) --------- ------------- threw it into the (10) ----------------------- on hearing the noise, his wife came out weeping and Andare ran back into the house laughing.

| | |
|---|---|
| a) Jump ☐ | f) the ☐ |
| b) Andare's ☐ | g) picked ☐ |
| c) Andare ☐ | h) and ☐ |
| d) Of ☐ | i) well ☐ |
| e) garden ☐ | j) his ☐ |

**TEST 09**

**Turn the following sentences into Passive vioce. The first one is done for you.**

1) He must finish the works before 2 O'Clock.
The work must be finished by him before 2 O'Clock

2) They will publish the advertisement
------------------------------------------------
3) He has sent the application to the university
------------------------------------------------

4) Sha Jahan built the Taj Mahal in Agra.
---------------------------------------------------------------------------

5) She has writeen many poems on rural life.
---------------------------------------------------------------------------

6) Farmeru cultivate rice in the dry zone.
---------------------------------------------------------------------------

**TEST 10**

**Fill in the blanks in the following text using the words given in the box below.**

**threat, unclean, important, threat, economical, people, polythene, empty, recycling, roads, undecaying, environment, resources**

Today polythene has turned out to be a (1) ----------------------- to the environment especially in our country. (2) ----------------------- doesn't decay or blend with soil. the polythene that is thrown away by the (3) ----------------------- remains for a long time, making the environment (4) ----------------------- Apart from this, (5) ----------------------- cans, broken bottles and kitchen refuse are put on the roads, making the (6) ----------------------- and the entire (7) ----------------------- not only dirth but also foul smelling.

There are two (8) ----------------------- reasons for the need to recycle. The first reason is to prevent the environment from being polluted by the (9) ----------------------- Materials. The second important reason is that (10) ----------------------- Saves the natural (11) ----------------------- and it is economical too.

**TEST 11**

**Write on one of the following. Use about 100 words.**

a. Write a letter to friend inviting him / her to spend a few days with you after the examination.
- Talk about what you could do. For example : go on a trip
- Ask about what he / she likes / dislikes.
- Remind him / her to bring - camera, books, etc.

b. Science Socity of your school wishes to visit the Victoria Dam of the Mahaweli scheme. Write a letter to the Director General, Mahaveli Authority asking for permission to visit the place. Give the following details.

- Date and time of the visit
- Number of students and teachers participating
- How long you are going to spend there
- Request the services of an officer to explain about the Dam

---------------------------------------------------------------------------
---------------------------------------------------------------------------
---------------------------------------------------------------------------
---------------------------------------------------------------------------
---------------------------------------------------------------------------

**TEST 12**

**Read the following text and answer the questions given below.**

Even though we had heard of it before, it was only during last school holidays that we thought of visiting my grandparents' house in the dry zone. We were wondering where we should go during the holidays when father suggested we could visit 'Bird's Nest.

Bird's Nest is the wattle and daub hut with a straw foof where my grandparents had lived for a good part of their lives. They were two of the first teachers to teach in school in the dry zone, and they had built the hut, when they first started teaching, so many years ago.

We set off on a Saturday, and after travelling for miles and miles, reached the house, now looked after by uncle Piyasome, a neighbor.

'There! That's 'bird's Nest' - no water of electricity. We carried water from the well in tha garden and when it grew dark lit the kerosene lamps.

That night, we slept outside, with the sky as the roof, listening to the hooting owls, it was very cool and comfortable.

'With no T.V. or radio how did you spend your free time' I asked my father before I fell asleep.

'We played games, related stories and read books, 'said father.
'But you didn't have electricity' I reminded him.
'These kerosene lamps gave enough light for everything we did. 'Father said.
He was happy reliving his childhood.
it was the best holoday of my life.

1) When did the writer first visit his grandparent's house?
-----------------------------------------------------------

2) Write the name that given to the house?
-----------------------------------------------------------

3) Where had the writer's grandparents taught?
-----------------------------------------------------------

4) Write two things that the writer's father did spend him free time.
i) --------------------------------
ii) --------------------------------

**TEST 13**

**5) Underline the correct answer.**

They slept
a. inside the tow small rooms.
b. with sky as a roof
c. with piyasome, a neighbour

6) Write th sentences from the text that says sleeping outdoor was quite good.
---------------------------------------------------------------------------

7) Who was happy reliving his childhood?
---------------------------------------------------------------------------

8) Find words from the text which have the same meaning as the following
a) gave a idea : --------------------------------
b) shining with light :--------------------------------

**TEST 14**

**Write on one of the following. Use about 200 words.**

a. Write an article to the Junior Page of a newspaper on Water - our life blood. include the following.
- uses of water
- problems with water - floods
  - drought
- need to - protect waterways
  - manage water, minimize waste

b. Write a speech to be made at your school assembly on A healthy mind in a healthy body.
include the following:
- eating a balanced diet - (what a balanced diet is)
- exercise (walking / running etc.)
- mental happiness (though helping other, be free of worries)

c. Complete the followig story.
It was a rainy day. I was in bed reading a book. Suddenly the light wet off. I went to the window and looked out.--------------------------------

d. An interesting incident that I can never forget.

**TEST 15**

**The following are five students expressing how they help their parents during school vacations. Write their expressions in reported speech. The first one is done for you.**


Priya

I help my mother in cooking.

1) Priya says that she helps her mother in cooking

2) ................................

3) ................................


Shanthi

I keep the house clean.


Gamini

I help my father in his garage.

4) ....................

**I wash all my clothes my self.**


**Nelum**

5) ....................

**I make tea for all, in the morning.**


**Fathima**

6) ....................

**I do shopping for my family.**


**Kumar**

**TEST 16**

**The following extract contains 10 mistakes which are underlined. Write each correct word in the box provided. First one is done for you.**

Once upon a time, a long time ago, (1) <u>their</u> (there) was a knight, who as he (2) <u>grow</u> [ ] older lost all his (3) <u>hairs</u> [ ] He (4) <u>become</u> [ ] a s bald as (5) a [ ] agg. He (6) <u>don't</u> [ ] want any one to see his bald head. So he (7) <u>buy,</u> [ ] a beautiful, black (8) <u>curl</u> [ ] wig.

# "இரணைமடு" இயற்கைச் சமன்பாட்டை மாற்றியமைக்க முயன்றால் விளையும் விபரீதம்

**இரணைமடு குளத்து நீரை யாழ்ப்பாணத்துக்கான குடிநீராக மாற்றும் பாரிய செயற்றிட்டம் இன்னமும் சுகப் பிரசவம் பெற வில்லை.**

**ஆரம்பத்தில் இருந்ததைவிட இத்திட்டத்துக்கான எதிர்நிலை வாதங்கள் இப்போது வலுவடைந்து வருகின்றன.**


**இதனால் இச்செயற்றிட்டம் செயல்வடிவம் பெறும் என்று காத்திருந்த யாழ் மக்களின் கனவுகள் இப்போது கலையத் தொடங்கிவிட்டன.**

இத்திட்டத்தின் பிரதிகூலங்கள் தொடர்பாக இரணைமடு குளத்தின் கீழ் உள்ள விவசாய அமைப்புக்கள் தமது கருத்துகளை இங்கே சிலாகித்து சொல்கின்றன.

இரணைமடு நீர்ப்பாசனத்திட்டமானது 1800 களின் இறுதிப் பகுதியில் திட்டம் தீட்டப்பட்டு 1902 ஆம் ஆண்டு நிர்மானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 1920 களில் நிறைவுறுத்தப்பட்டது. இத்திட்டமே இலங்கையின் முதலாவது திட்டமிடப்பட்ட நீர்ப்பாசனத்திட்டமாகும். இத்திட்டத்தின் பிரதான நோக்கமாக அமைந்தது யாழ்ப்பாணத்திற்கான உணவுப் பாதுகாப்பு ஆகும். ஏனெனில் செறிவான சனத்தொகையைக் கொண்ட யாழ்ப்பாணத்தில் நெல் உற்பத்தி செய்யக்கூடிய மூலம் காணப்படாமை ஆகும்.

தொடர்ந்து யாழ்ப்பாணத்திற்கான அரிசி தேவையின் அதிகரிப்பிற்கு ஏற்ப காலத்திற்கு காலம் இரணைமடு குளத்தின் கொள் ளவு அதிகரிப்பட்டு நெல் உற்பத்தி அதிகரிக்கப்பட்டது. அத்துடன் யாழ்ப்பாண குடித் தொகையின் செறிவு கட்டுப்படுத்தப்பட்டு படித்த வாலிபர்கள் திட்டம், கொலனித்திட்டம் என்ற குடிப் பரம்பல் செய்யப்பட்டு உற்பத்தி அதிகரிக்கப்பட்டது. ஆகவே இரணைமடு நீர்ப்பாசனத்திட்டத்தின் அடிப்படை சமன்பாடான உணவுச் சமன்பாட்டை மாற்றி அதிகாரிகளினால் யாழ்ப்பணத்திற்கான குடிநீர்சமன்பாடாக மாற்ற முயல்வது யாழ்ப்பாணத்திற் கான உணவு பாதுகாப்பில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் யாழ்ப பாண எதிர்கால சந்ததியினர் அரிசிக்காக ஏனைய மாவட்டங்களிலும் நாடுகளிலும் முழுமையாக தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதுடன் இரணைமடு விவசாயிகள் இன்னுமொரு குடிப்பெயர்வுகளுக்கும் உட்படலாம்.

இரணைமடு குளமானது 1920 களில் நிர்மானிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தின் உணவுத்தேவைக்கு அமையும் குடியேற்றத் திட்டங்களுக்கு அமைவாகவும் 1950 மற்றும் 1970 களில் கொள்ளவு அதிகரிக்கப்பட்டது. 1970இற்கு பின் கொள்ளவு அதிகரிக்கப்பட்டு. 1970 இற்கு பின் கொள்ளளவு அதிகரிக்கப் படவில்லை. ஆனால் நிலப்பரப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ள துடன் தற்போதுள்ள 22,000 ஏக்கருக்கு மேலதிகமாக 12,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப் பலப்புகளுக்கு நீர்ப்பாசன் வசதி செய்துகொடுக்க வேண்டிய தேவை உள்ளது. தற்போது குளத்தின் நீர்மட்டம் 2 அடியினால் உயர்த்தப்பட்டு அதிகரிக் கப்படும் நீரே யாழ்ப்பாண குடிநீருக்கு பயன்படுத்தப் போவதாக அதிகாரிகளினால் கூறப்படுகின்றது. ஆனால் இவ்விரண்டடி அதிகரிப்பானது 1970களில் விவசாய தேவைக்காக திட்டமிடப்பட்டதாகும். இதற்கான ஆதாரம் இரணைமடு குளத்தில் 11 சுழற்சிக்கதவுகள் அமைக்கும் போது 2. அடி மேலதிக உயர்த்துடன் அமைக் கப்பட்டுள்ளதை அவதானிக்க லாம். எனவே ஏற்கனவே விவ சாய தேவைக்காக திட்டமிடப்பட்ட நீரை வேறு தேவைக்கு பயன்படுத்தப்படுவது விவசாயிகளின் வாழ்வாதாரத்தை ஒட்டுமொத்தமாக பாதிக்கும் என்பதுடன் இம்மட்டத்தின் மேல் இனிவரும் காலங்களில் இரணைமடு குளத்தின் நீர்மட்டத்தினை அதிகரிக்கமுடியாது என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.



கடந்த பல தசாப்தங்களாக இரணைமடு விவசாயிகள் தமது நிலப்பரப்பில் 40 வீதத்திற்கு குறைவான பகுதியில் தான் சிறுபோகம் செய்து வருகின்றனர். பல வருடங்களில் நீரின்மை காரணமாக சிறுபோக செய்கையை கைவிட்டும் உள்ளனர். ஆனால் யாழ்ப்பாணம்-கிளிநொச்சி நுகர்வானது தொடர்ந்து பெரிய அளவில் அதிகரித்துச் செல்வதுடன் விவசாயிகளின் குடும்ப எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கின்றது. இந்நிலையில் சிறுபோக செய்கை விஸ்த்தீரணம் அதிகரிக்கப்பட்டு விவசாயிகளின் தனிநபர் வருமானம் அதிகரிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கும் போது இரணை மடு நீர்ப்பாசன திட்டத்தின் நோக்கத்தை மாற்ற முயற்சிப்பது வேதனைக்குரிய விடயமாகும். கடந்த ஒரு நூற்றாண்டில் குறைந்தது 20-25 வருடங்கள் பெரும்போகமும் நீரின்றி பொய்த்தமை யாவருமறிந்த வரலாறாகும்......

தொடரும்.....

# பால்மாவை பதுக்கினால் சட்ட நடவடிக்கை

## வர்த்தகத்துறை அமைச்சு நடவடிக்கை

இலங்கையில் பால்மா விலையை அதிகரிக்க அனுமதி தருமாறு பால்மா நிறுவனங்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத துள்ளன. அந்தக் கோரிக்கை பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது. அதற்கிடையில், பால்மா நிறுவனங்கள் தங்களின் கையிருப்புகளை பதுக்கிவைக்கும் வேலைகளில் ஈடுபட்டுவருவதாக அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதனை முறியடிக்கும் முயற்சியாக, பால்மா நிறுவனங்கள் தஙகளின் களஞ்சியசாலை களை நுகர்வோர் விவாகார அதிகார சபையில் பதிவுசெய்துகொள்ள வேண்டும் என்ற உத்தரவை கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தகத்துறை அமைச்சு கொண்டுவந்துள்ளது.

இதற்கான வர்த்தமானி உத்தரவு வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக இலங்கை நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ரூமி மரஷுக் தெரிவித்தார்.

அனைத்து பால்மா கம்பனிகளின் களஞ்சியசாலைகளையும் நுகர்வோர் அதிகார சபையில் பதிவுசெய்துகொள்ள வேண்டும் என்பது முதல் தடவையாக கட்டாயப்படுத் தப்பட்டுள்ளது என்றார் ரூமி மர்ஷ்க். இதன்படி, பால்மா நிறுவனங்களின் களஞ்சிய சாலைகளுக்குள் நேரடியாகச் சென்று நுகர்வோர் விவகார



அதிகாரசபை அதிகாரிகள் சோதனை நடத்தமுடியும்.

சில நாட்களுக்கு முன்னர் சில கம்பனிகள் தங்களின் பால்மா கையிருப்புகளை அநாவசியமான முறையில் பதுக்கி வைத்திருப்பதாக அமைச்சருக்கு முறைப்பாடு கிடைத்தது. எமது அதிகாரிகள் அப்படியான பதுக்கல்களை கைப்பற்றி நீதிமன்றத்தின் முன்னால் ஒப்படைத்துள்ளனர் என்றார் ரூமி மரஷுக்.

பால்மா கையிருப்பை பதுக்கி வைத்திருப்பதன் மூலம் திறந்த சந்தையில் பால்மா தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, அதன்மூலம் பின்னர் நல்ல விலைக்கு விற்பது தான் அப்படியான நிறுவனங்களின் நோக்கம் என்றும் நுகர்வோர் விவகார அதிகாரசபை கூறுகிறது.

பால்மா விலை உயர்வு பற்றிய பேச்சுவார்த்தைகள் நடந்துவருவதாகவும் கூடிய விரைவில் முடிவு வெளியாகிவிடும் என்றும் அதிகாரசபை தெரிவித்தது.

பதுக்கிவைக்கப்பட்டிருந்த பால்மா கையிருப்புகளை அதிகாரிகள் கைப்பற்றி சட்ட நடவடிக்கை எடுத்துள்ள தாகவும் அதிகாரசபையின் தலைவர் ரூமி மர்ஷுக் கூறினார். இலங்கைச் சந்தைகளில் ஏற்கனவே 810 ரூபாவுக்கு விற்கப்படும் ஒரு கிலோ பால் மாவுக்கு மட்டும் மேலும் 250 ரூபா அதிகரிப்பை நிறுவனங்கள் கோரியுள்ளன. அதற்கு அனுமதி கிடைப்பதற்கு முன்னதாக நாடெங்கிலும் கடைகளில் பால்மா தட்டுப்பாடு தொடங்கிவிட்டதாக மக்கள் முறையிடுகின்றனர்.

சில கடைகளில் இப்போதே ஒருகிலோ பால்மா பாக்கெட் 1000 ரூபாவுக்கு விற்கப்படுவதாகவும், விலை உயர்வு கோரப் படாத 325 ரூபாவுக்கு இருந்த 400 கிராம் பாக்கெட் 410 ரூபாவுக்கு விற்கப்படுவதாகவும் உள்ளூர் மக்கள் கூறுகின்றனர். இலங்கையை பசும்பாலில் தன்னிறைவு அடையச் செய்யும் செயற்றிட்டத்தை முன்னெடுத் துவருவதாக அரசாங்கம் பல ஆண்டுகளாக கூறிவருகின்றது. ஆனால், இன்னும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பால்மாவிலேயே பெரும்பாலும நாடு முழுவதும் தங்கியிருக் கின்றமை குறிப்பிடத்தக்கது.

# இந்துக் கோயில்களுக்கு நிதி உதவித்திட்டம்



இந்து கலாசார திணைக்களத்தால் கிளிநொச்சி மாவட்டத்தில் இந்துக் கோயில்களுக்கு நிதி உதவி வழங்கும் நிகழ்வு நேற்றுக் காலை 10 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபருமாகிய திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் மு.சந்திரகுமார் வட மாகாணசபை உறுப்பினர் அ.தவநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிரதேச செயலர்களும் ஏனைய திணைக்களத் தலைவர்களும் இந் நிகழ்வில் பங்கேற்றனர். 9 இந்து ஆலயங்களுக்கு தலா 2 இலட்சம் ரூபா வீதம் காசோலை வழங்கப்பட்டது. 30 இந்துக் கோயில்களுக்கு நிதி தலா 2 இலட்சம் ரூபா வழங்குவதற்கான கடிதங்கள் வழங்கப் பட்டன. கட்டுமான வேலைகள் முடிவுற்றதும் காசோலை வழங்கப்படும்.



# சிரியாவில் விமானத் தாக்குதல்
# சிறுவர்கள் உட்பட 20 பேர் பலி



சிரியாவில் அதிபர் ஆசாத்தின் அரசுப் படைகளுக்கும், புரட்சிப் படைகளுக்கும் இடையே நடைபெற்று வரும் உக்கிரமான சண்டையில் அப்பாவி பொது மக்கள் தொடர்ந்து பலியாகி வருகின்றனர். புரட்சிப் படை வசம் உள்ள இடங்களில் அதிபரின் படை அடிக்கடி விமான தாக்குதல் நடாத்தி வருகிறது. சட்டத்திற்கு புறம்பாகவும், கண்மூடித்தனமாகவும் விமானத் தாக்குதல் நடப்பதாக மனித உரிமை அமைப்புகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. ஆனால், தீவிரவாதிகளை குறிவைத்து தாக்குதல் நடாத்துவதாக அரசு கூறுகிறது.

இந்நிலையில், வடக்குப்பகுதியில் உள்ள வர்த்தக நகரமான அலெப்போவில் நேற்று மக்கள் அதிகம் நடமாட்டம் உள்ள ஒரு காய்கறிச் சந்தை மீதும், மருத்துவமனை அருகிலும் ஹெலிகொப்டர்கள் மூலம் குண்டுகள் வீசப்பட்டன. இதனால் கட்டடங்கள் கடுமையாக சேதம் அடைந்தன. ஒரு கட்டடம் இடிந்து விழுந்தது.

இதில், 2குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள் உட்பட 20 பேர் இறந்தனர். இந்தத் தாக்குதல் படுகொலை என்று சிரிய புரட்சி பொது ஆணைக்குழு கண்டித்துள்ளது. டிசம்பர் 15ஆம திகதிக்குப் பிறகு அலெப்போ மற்றும் அருகில் உள்ள கிராமங்களில் நடந்த விமானத் தாக்குதலில் 400இற்கும் மேற்பட்ட மகள் கொல்லப்பட்டதாக மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

உலகச் செய்திகள்

## பிரித்தானியாவில் வெள்ள அனர்த்தம் மீட்புப் பணிகள் தொடர்கின்றன



பிரித்தானியாவில் இடம் பெற்று வரும் அடை மழை வீழ்ச்சி காரணமாக 100,000இற்கும் அதிகமான வீடுகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. அந் நாட்டு மணிக்கு 90 மைல் வேகத்தில் காற்று வீசி வருவதுடன் பல பிராந்தியங்களில் கடும் பனிப்பொழிவும் உள்ளது. பிரித்தானிய சுற்றுச்சூழல் நிலையம் 150 பிராந்தியங்களில் வெள்ள அனர்த்த எச்சரிக்கைகளையும் இங்கிலாந்திலும் வேல்ஸிலும் மட்டும் 50இற்கு மேற்பட்ட வெள்ள அனர்த்த எச்சரிக்கைகளும் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

தென்கிழக்கு மற்றும் தென் மேற்கு இங்கிலாந்தில் 1200 வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் சுமார் 7500 வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டிக்கப்பட்டுள்ளது. இதேவேளை அத்திலாந்திக் சமுத்திரத்திலிருந்து பிறிதொரு புயல் வீசலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. கடுமையான காற்று வீசி வருவதால் தென் புகையிரத சேவை லண்டனுக்கும் சட்விக்குமிடையிலான அதிவேக புகையிரத சேவை என்பன ஸ்தம்பிதமடைந்துள்ளன. வெள்ளத்தில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணியில் மீட்புப் பணியாளர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

## நாடாளுமன்ற தேர்தலில் ஜெயா கட்சி உறுப்பினர்கள் விரும்பம்



நாடாளுமன்றத் தேர்தலில் தமிழக ஜெயலலிதா போட்டியிட வேண்டும் என அ.தி.மு.கவினர் விருப்பம் தெரிவித்துள்ளனர்.நாடாளுமன்றத் தேர்தலில், தமிழகம் மற்றும் புதுச்சேரி உட்பட 40 தொகுதிகளில், அ.தி.மு.க சார்பில் போட்டியிட விரும்புவேர் கட்சித் தலைமை அலுவலகத்தில் வரும் 19ஆம் திகதி முதல் 27ஆம் திகதிவரை தினமும் காலை 10 மணி முதல் இரவு 7 மணி வரை உரிய கட்டணத்தை செலுத்தி விண்ணப்ப படிவங்களை பெற்று பூர்த்தி செய்து வழங்கலாம் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து அக்கட்சித் தொண்டர்கள் மனுக்களை பெற்று, பூர்த்தி செய்த விண்ணப்பங்களை அளித்தனர். தமிழகம், புதுச்சேரியில் போட்டியிட பெறப்பட்ட 4,537 விண்ணப்பங்களில் 1175 விண்ணப்பதாரர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் தங்கள் தொகுதியில் ஜெயலலிதா போட்டியிட வேண்டும் என விருப்பம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் நடந்த அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில் தொன்மைச் சிறப்பு வாய்ந்த தமிழகத்திலிருந்து ஒருவர் இந்தியாவுக்கு தலைமை ஏற்கும் காலம் கனிந்திருக்கிறது.

இந்தியாவின் ஒளிமயமான எதிர்கால வாழ்வுக்கு ஏற்ற ஆட்சியை வழங்கும் திறமையுடைய ஒரே நம்பிக்கை நட்சத்திரம் தமிழக முதல்வர் ஜெயலலிதா மட்டுமே என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்பது கவனிக்கத்தக்கது.


## பனிப்படலத்தில் சிக்கிய கப்பலை மீட்பதில் தாமதம்

அந்தாண்டிக்கா கடற்கரைக்கருகே கடலில் சூழ்ந்த பனிக் கட்டிகளால், பயணிக்க முடியாமில் சிக்கியிருக்கும், ரஷ்ய ஆய்வுக் கப்பலை மீட்பதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. இதைச் சூழ்ந்திருக்கும் பனிக் கட்டிகள் மிகவும் தடிப்பாக இருப்பதால், அவைகளை உடைத்து , கப்பல் பயணிக்கப் பாதை அமைப்பதில் சிரமம் ஏற்பட்டிருப்பதாக, இந்தக் கப்பலுக்கு உதவச் சென்ற பிரெஞ்சு மற்றும் சீனக் கப்பல்கள் கண்டறிந்துள்ளன.



இந்தக் கப்பல்களைவிட மிக அதிகத் திறன் கொண்ட அவுஸ்ரேலிய பனி உடைக்கும் கப்பல் ஒன்று இப்போது இன்னும் இரண்டு நாட்களுக்குள் இந்த இடத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. நிலைமை மிகவும் மோசமானால், கப்பலில் இருக்கும் 74 பயணிகள் மற்றும் கப்பல் ஊழியர்கள், வானிலை சீராக இருக்கும் பட்சத்தில், ஹெலிகொப்டர்கள் உதவியுடன் மீட்கப்படலாம் என்று சிக்கியிருக்கும் கப்பலான, அகடெமிக் ஷோக்கால்ஸ்க்கியின் ஆய்வுக்குழுத் தலைவர் கூறினார். இந்தக் கப்பல் அவுஸ்ரேலியத் தீவான டாஸ்மேனியாவுக்கு தெற்கே, 2000கிலோ மீற்றருக்கும் மேலான தொலைவில் சிக்குண்டுள்ளது.

## மகரவிளக்கு பூஜைக்காக நடை இன்று திறப்பு



மகரவிளக்கு பூஜைக்காக சபரிமலை கோயிலில் இன்று நடை திறக்கப்படுகிறது.

சபரிமலை ஐயப்பன் கோயிலில் கடந்த 26ஆம் திகதி மண்டல கால பூஜைகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து நடை அடைக்கப்பட்டது. இந்தநிலையில்மகரவிளக்கு பூஜைகளுக்கு சபரிமலையில் இன்று மாலை நடை திறக்கப்படவுள்ளது. மகரவிளக்கு பூஜைகளுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகிறது. 15 இலட்சம் டின் அரவணை தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இரண்டு இடங்களில் தினசரி ஒன்றேகால் இலட்சம் டின் அரவணை தயாரிக்கப்படுகிறது.

இதே போல் ஒன்றேகால் இல்ட்சம் கவர் அப்பமும் தயாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. பம்பையில் சுத்திகரிப்பு பணிகள் நடந்து வருகிறது. பம்பையில் ஐயப்ப பக்தர்களுக்காக தேக்கி வைக்கப்பட்டிருந்த தண்ணீர் திறந்து விடப்பட்டு கழிவுகள் அப்புறப்படுத்தப்படுகின்றன.

## மோடிக்கு வீசா வழங்குவதில் சட்டத்தில் மாற்றம் இல்லை
### என்கிறது அமெரிக்கா



பா.ஜ.க. பிரதமர் வேட்பாளரும் குஜராத் முதல்வருமான நரேந்திர மோடிக்கு வீசா வழங்குவது தொடர்பான விவகாரத்தில் அமெரிக்காவின் கொள்கை மாறவில்லை. எனினும் அவர் வீசா கேட்டு விண்ணப்பிக்கலாம். அந்த விண்ணப்பம் அமெரிக்க சட்டதிட்டப்படி ஆய்வுக்கு உட்படுத்தப்படும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் தெரிவிக்கையில் அமெரிக்காவின் வீசா கொள்கையில் மாற்றம் ஏதும் இல்லை. நரேந்திர மோடி வீசா கேட்டு விண்ணப்பிக்கலாம் என்பதே அமெரிக்காவின் நிலையாகும். மற்ற விண்ணப்பதாரர்களின் மனு மீது எப்படியோ அது போலவே மோடியின் மனுவும் ஆய்வுக்கு உட்படுத்தப்படும்.

அமெரிக்க சட்டதிட்டத்துக்கு உட்பட்டு இந்த ஆய்வு இருக்கும். அதன் இறுதி முடிவு எப்படி இருக்கும் என்பதை ஊகிக்க இயலாது உச்ச நீதிமன்றம் நியமித்த சிறப்பு புலனாய்வு குழு, 2002இல் குஜராத்தில் நிகழ்ந்த வகுப்பு கலவரத்தில் மோடிக்கு எதிரான புகார்கள் பற்றி விசாரித்தது. அவருக்கு கலவரத்தில் தொடர்பு உள்ளதை நிரூபிக்கும் ஆதாரங்கள் இல்லை என தெரிவித்து நற்சான்று கொடுத்துள்ளது.

# மகா தமிழ் பிரபாகரன் குற்றச்சாட்டு; முற்றாக நிராகரிக்கிறது பொலிஸ்

விசா விதிகளை மீறியதாக இலங்கையில் கைது செய்யப்பட்டு இந்தியாவுக்கு திருப்பியனுப்பப்பட்ட தமிழ்நாட்டு ஊடகவியலாளர் மகா தமிழ் பிரபாகரன், காவலில் வைக்கப்பட்டிருந்தபோது உளவியல் ரீதியில் துன்புறுத்தப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

அவர் நேற்றுமுன்தினம் விடுதலையாகி நாடு திரும்பியவுடன் பி.பி.சி.க்கு வழங்கிய பேட்டியின் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் அளித்த பேட்டியில், நான் எந்தவொரு ஊடக நிறுவனப் பிரதிநிதியாகவோ, பணியாளராகவோ இலங்கைக்குச் செல்லவில்லை. விகடனில் புலித்தடம் தேடி தொடர் கட்டுரை மட்டும் எழுதியிருந்தேன். அவ்வளவுதான் என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், என்னைக் கடற்கரையோரமாக வைத்தே இராணுவத்தினர் கைது செய்தனர். நான் பல காட்சிகளை எனது புகைப்படக் கருவியில் பதிவு செய்திருந்தேன். ஆனால் இராணுவத்தினர் என்னைக் குற்றஞ்சாட்டுவதற்காக இராணுவ உயர் பாதுகாப்பு பிரதேசங்களையும் முகாம்களையும் மட்டும் படமெடுத்ததாக தெரிவித்திருந்தனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

என்னைக் கைது செய்த மூன்று நாட்களும் ஆயுதபாணிகள் சகிதம் மிரட்டும் பாணியிலேயே நடத்தினார்கள். நீ சொல்வதை நாம் எழுத முடியாது. நாம் கேட்பதற்கு சாதகமான பதிலாகவே நீ சொல்ல வேண்டும் என என்னை வற்புறுத்தினார்கள் என்று மகா. தமிழ் பிரபாகரன் குறிப்பிட்டுள்ளார்.

நாச்சிக்குடா பொலிஸ் நிலையத்தில் வைத்து சாப்பிட்டபின் குடிப்பதற்கு தண்ணீருக்குப் பதிலாக பெற்றோலை வைத்திருந்தார்கள். அதிலிருந்து எனக்கு அவர்களின் மீது சந்தேகம் வலுத்திருந்தது. விசாரணையின் போது என்னை ஒரு விடுதலைப் புலிகளின் ஆதரவாளராக, ஒரு தமிழராக மட்டும் அவர்கள் நோக்கினார்களே தவிர சாதாரண மகனாக அவர்கள் விசாரணை செய்யவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சுற்றுலா விசாவில் வந்ததாக இராணுவத்தினர் சுமத்திய குற்றச்சாட்டிற்கு பதிலளித்த தமிழ் பிரபாகரன், அதெல்லாம் ஒரு குற்றச்சாட்டும் கிடையாது, ஊடகவியலாளர் விசா பெற்று வந்து யாழ்ப்பாணம் சென்ற சனல் - 4 நிறுவனத்தினர் உட்பட சர்வதேச செய்தியாளர்களை கடந்த மாதங்களில் வவுனியாவில் வைத்து தடுக்கவில்லையா?

இவைகளெல்லாம் வேடிக்கையான குற்றச்சாட்டுக்கள். சரி. அப்படியிருந்தாலும் ஏன் என்னை முன்னால் தடுக்கவில்லை. போகவிட்டு பின்னால் வந்து ஏன் தடுத்தார்கள்? நான் இலங்கை அரசின் அராஜகப் போக்குகளை உலகமறியச் செய்வேன் என்று மகா. தமிழ் பிரபாகரன் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை, இந்திய ஊடகவியலாளர் மகா. தமிழ் பிரபாகரனின் குற்றச்சாட்டுக்களை முழுமையாக மறுத்த பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சருமான அஜித் ரோஹன, இக்குற்றச்சாட்டுக்களை அவர் இலங்கையில் இருந்து புறப்படுவதற்கு முன்னர் முன்வைத்திருந்தால் வைத்தியரொருவருக்கு காண்பித்து மருத்துவ பரிசோதனை செய்து அறிக்கை பெறப்பட்டதன் பின்னரே அவரை நாடு கடத்தியிருப்போம் என்றார்.

இலங்கை பாதுகாப்பு தரப்பு மீது வேண்டுமென்றே குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் நோக்கிலேயே அவர் மேற்கண்டவாறான கருத்துக்களை முன்வைத்துள்ளார் என்றும் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார்.

# நெருக்கடியில் இந்திய அணி



(டேர்பன்)

இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் டேர்பனில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் நான்காம் நாளான நேற்று ஆட்டநேர முடிவில் இந்திய அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக 3 ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் தென் ஆபிரிக்க அணி 5 விக்கெட் இழப்பிற்கு 299 ஓட்டங்கள் எடுத்தது. கலிஸ் 78 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

நேற்று 4 ஆம் நாள் ஆட்டத்தில் கலிஸ் அபாரமாக விளையாடி சதம் அடித்தார். அவர் 115 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதன்பின் களம் இறங்கிய ஸ்ரெயின் 44, டுபிளிசஸ் 43, பீட்டர்சன் 61 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தனர்.

பிளண்டர் மற்றும் மோர்கல் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டம் இழந்தனர். இறுதியில் தென் ஆபிரிக்க அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 500 ஓட்டங்கள் குவித்தது. இந்திய அணியில் ஜடேஜா அதிகபட்சமாக 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து 166 ஓட்டங்கள் பின்னிலையில் இருந்த இந்திய அணியின் தவான் மற்றும் விஜய் களம் இறங்கி இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்தனர். விஜய் 6, தவான் 19 ஓட்டங்களிலும் ஆட்டம் இழந்தனர்.

4 ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் இந்திய அணி 2 விக்கெட்டுகளை இழந்து 68 ஓட்டங்கள் எடுத்தது. புஜாரா 32, கோலி 11 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். இன்று 5 ஆம் நாள் ஆட்டம் நடைபெறுகிறது.

# முதுபெரும் கலைஞர்களுக்கு 'சிவத்தமிழ்' விருது

(யாழ்.நிருபர்)

முதுபெரும் கலைஞர்கள் ஐவருக்கு சிவத்தமிழ் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

வைத்திய கலாநிதி கந்தையா மாணிக்கம் பழம்பெரும் அரங்க ஒலியமைப்பாளர் நாகலிங்கம் தவமணி நாயகம், கலாபூஷணம் சுப்பையா கணபதிப்பிள்ளை, மூத்த ஊடகவியலாளர் அன்னலெட்சுமி இராஜதுரை, இளைப்பாறிய அதிபர் நாகமுத்து நல்லதம்பி ஆகியோரே சிவத்தமிழ் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளவர்களாவர்.

ஜனவரி மாதம் 7 ஆம் திகதி நடை பெறவுள்ள சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்த நாள் அறக்கொடை விழாவில் இவர்கள் சிவத்தமிழ் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். (10)

## உள்ளூராட்சி...

தென்மாகாண சபைத் தேர்தல்களில் தனித்து போட்டியிடுவது என்று காங்கிரஸ் முடிவெடுத்துள்ளதாகவும் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

## பயிலுநர்...

வழங்குவது தொடர்பிலும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு ஆலோசித்து வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இலங்கை மீது...

கொண்ட மனிதர்கள். இதனால் இராணுவத்தினர் மனித உரிமைகளை மீற மாட்டார்கள்.

உலகில் அதிகமாக கூறும் வார்த்தை என்னவென்று கேட்டால் நாங்களும் அம்மா என்போம். இரண்டாவது வார்த்தை என்னவென்று கேட்டால் இராணுவம் என்போம். காரணம் அவர்களே எங்களை பாதுகாக்கின்றனர்.

இலங்கைத் தீவு மிகவும் அழகானது. இலங்கை என்ற நாடு மிக முக்கியமானது. வெளிநாட்டு சக்திகளுக்கு இந்த நாட்டை பெற முடிந்தால் பெற்றுக்கொள்வார்கள். இதன் காரணமாகவே சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்துள்ளன. படையினர் இல்லாமல் 9 கிலோ கிராம் குண்டை அமெரிக்காவால் போட முடியும்.

எமது பிக்குகள் கொலை செய்யப்பட்டனர். தலதா மாளிகைக்கு குண்டு வைத்தனர். ஸ்ரீமகாபோதி மீது தாக்குதல் நடத்தினர். அப்படி செய்த பயங்கரவாதிகள் 12 ஆயிரம் பேர் சரணடைந்தனர். எமது ஜனாதிபதி அவர்களுக்கு மன்னிப்பு வழங்கினார்.

அவர்களுக்கு உணவு கொடுத்து புனர்வாழ்வளிக்கப்பட்டனர். அவர்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக்கொள்ள உதவிகள் வழங்கப்படுகின்றன. அப்படியானால் ஏன் அமெரிக்கா இவ்வளவு தகவல்களை தேடுகிறது. இலங்கை நியூசிலாந்தைப் போலிருந்தால் இப்படி மனித உரிமைகள் குறித்து தேட மாட்டார்கள்.

ருவாண்டாவில் 10 இலட்சம் மக்கள் கொலை செய்யப்பட்டனர். ஏன் அந்த நாடு குறித்து மனித உரிமை அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்று நான் கேட்டேன். அதில் பயனில்லை என்று அவர்கள் கூறினார்கள் என்றார்.

## 22 தமிழக...

ஆகிய பகுதிகளிலிருந்து 6 படகுகளில் வந்த இந்திய மீனவர்கள் 22 பேரும், யாழ். நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் நேற்று முன்தினம் இரவு கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 22 பேரையும் யாழ். மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் கடற்படையினர் ஒப்படைத்தனர்.

இதனைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதவான் எஸ்.எம்.ஆர்.மகேந்திரராசா முன்னிலையில் இந்திய மீனவர்கள் 22 பேரையும் ஆஜர்படுத்திய நிலையிலேயே இவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்படையினரால் தாம் பிடிக்கப்படுவதாகவும், எனவே அதனைத் தடுக்க வேண்டுமெனவும் தமிழக மீனவர்கள் இந்தியப் பிரதமரை சந்தித்து கலந்துரையாடிய நிலையில் அவரும் விரைவில் இதற்கு சுமுகமான தீர்வு காணப்படுமெனத் தெரிவித்திருந்த நிலையில் நேற்று முன்தினம் மீளவும் இலங்கைக் கடற்பரப்பில் தமிழக மீனவர்களின் அத்துமீறல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (25)

## திருமலை...

முடிவை இலங்கை அரசாங்கம் எடுத்ததாக இந்தியா உணர்கிறது.

எனினும் குத்தகைக்கு பெறப்பட்ட இந்த எரிபொருள் குதங்களை தமது தேவைக்கு ஏற்ப பயன்படுத்தவுள்ளதாக இந்திய எரிபொருள் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

எனவே அதனை திரும்பப் பெற்றுக் கொள்ளும் இலங்கை அரசாங்கத்தின் தீர்மானம் குறித்து கருத்துக்கூற முடியாது என்று இந்திய எரிபொருள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

## தேர்தல் ஆண்டான...

ஜெனிவாவில் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்வின் போது இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள மேற்குலக தீர்மானம் பெரும் சவாலாக உள்ளது.

எனினும் உள்நாட்டின் ஆதரவை குறைத்துக்கொள்ளக்கூடாது என்பதற்காக அரசாங்கம் இந்த விடயத்தை பொருட்படுத்தாததை போன்று செயற்படுகிறது.

அதேநேரம் தமது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாத அரசாங்கம் தென்னாபிரிக்காவின் உண்மையை கண்டறியும் ஆணைக்குழு போன்ற அமைப்பை உருவாக்கப்போவதாக அறிவித்துள்ளது.

இது சர்வதேசத்தை ஜெனிவா மாநாட்டுக்காக ஏமாற்றும் வித்தை என்பதை அரசியல் வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனினும் சர்வதேச விசாரணை மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் என்பவற்றை தவிர்ப்பதற்காக அரசாங்கம் உண்மையை கண்டறியும் குழுவை அமைக்கும் தேவையையும் நிராகரிக்கமுடியாது.

அத்துடன் தேசிய இனப்பிரச்சினை தீர்வுக்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் நிராகரித்துள்ளது.

இது அரசாங்கத்துக்கு முன்கூட்டியே தெரியும் என்றபோதும் கூட்டமைப்பின் இந்தத் தீர்மானத்தின் பின்னணியில் அண்டை நாடு ஒன்று இருக்கலாமா? என்ற சந்தேகமும் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில் யாழ்ப்பாண கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க கொழும்புக்கு மாற்றல் செய்யப்படுவதும் அண்டை நாட்டின் அழுத்தம் என்றே இராஜதந்திர தரப்புக்கள் கருதுகின்றன என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடனுக்குப்...

சென்று சரணடைந்ததுடன், தான் காணாமற்போனதாக பொய் கூறியதாகவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். இதனையடுத்து முள்ளியவளைப் பொலிஸார் மேற்படி இளைஞனை பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பருத்தித்துறைப் பொலிஸார் மேற்படி இளைஞனை விசாரணை செய்த போது, தான் நடத்தி வரும் வியாபார நிலையத்தில் தனக்கு அதிகமான கடன்கள் இருந்தமையினால், தன்னைக் கடத்தியதாகக் கூறினால் கடன்காரர்கள் தன்னை தொந்தரவு செய்ய மாட்டார்கள் என்ற நோக்கத்தில் தான் கடத்தப்பட்டதாக பொய் கூறி, முள்ளியவளையிலுள்ள நண்பர் ஒருவர் வீட்டில் தங்கியிருந்ததாகத் தெரிவித்திருந்தார்.

மேற்படி நபர் பொய் கூறியமை மற்றும் அவதூறான செய்தியினை ஊடகங்களில் பரப்புவதற்கு காரணமாக இருந்தமை தொடர்பாக மேற்படி இளைஞனுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு, பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## பயங்கர...

சாரும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அனைத்து இன மக்களும் ஏனைய இனங்களை மதிக்க வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார். மும்மொழிச் சமூகமொன்றை உருவாக்கும் முனைப்புக்களில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மக்கள் நல இலக்குகளை அடைவதற்கு ஜனநாயக இடதுசாரி முன்னணி வழங்கி வரும் ஒத்துழைப்பு பாராட்டுக்குரியது என ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பிள்ளைகளுக்கு முன்னுதாரணமற்ற அரசியல்வாதிகள் குறித்து விசனம்



இந்நாட்டுக்கு இப்போது குறைவாக இருப்பது கஸினோ மட்டுந்தான். அதனால் அதனைக் கொண்டுவருவதற்கு முயற்சி மேற்கொள்கிறார்கள் என ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழக பீடாதிபதி பெல்லன்வில விமலரத்ன தேரர் குறிப்பிடுகிறார்.

ஸ்ரீபோதிராஜ அறநெறிப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவின்போதே தேரர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று நாட்டின் அரசியல்வாதிகள் சீர்கெட்டுப் போயுள்ளனர். அவர்களின் ஊழல் மோசடிகள். குற்றச் செயல்கள் பற்றி, திருட்டுத்தனங்கள் பற்றி நாங்கள் ஊடகங்கள் வாயிலாக நாளுக்கு நாள் அறிந்து கொள்கிறோம். இவர்களினால் பிள்ளைகளுக்கு எவ்வித முன்னுதாரணங்களும் கிடைப்பதில்லை. இதனால் பிள்ளைகளை சீரிய முறையில் வளர்க்கும் ஒரே இடமாக அறநெறிப் பாடசாலைகளே காணப்படுகின்றன.

இந்நாட்டுக்குக் குறையாக இருப்பது இப்போது கஸினோ மட்டுமே. தற்போது அதனையும் கொண்டுவர முயற்சிக்கின்றார்கள். அவ்வாறான சூழ்நிலையில் மாணவர்களுக்கு ஒழுக்கத்தைப் புகட்ட முடியாது. தேவையிருந்தால் அரசாங்கத்திற்கும் மாகாண சபைகளுக்கும் ஞாயிறு வகுப்புக்கள் நடத்தப்படாதிருக்க ஆவன செய்ய முடியும். யாருக்குச் சொன்னாலும் யாரும் ஞாயிறு வகுப்புக்களை நிறுத்தவதாக இல்லை.

இன்று நாடெங்கிலும் இந்த பிரத்தியேக வகுப்புக் கலாசாரம் இருப்பதால் மாணவர்களில் மூன்றில் இரண்டு பகுதியினருக்கு அறநெறிக் கல்வி இல்லாமலாகிவிட்டது. பிள்ளைகள் சித்தியடைவது போன்றதல்ல அறநெறிப் பாடசாலைகளினால் கிடைக்கும் அறிவு. ஞாயிறு வகுப்பு தவிர பிரத்தியேக வகுப்புக்கள் வாரத்தில் ஆறரை மணித்தியாலங்கள் நடைபெறுகின்றன. பிள்ளைகளை அறநெறிப் பாடசாலைகளுக்கு அனுப்புவதற்கு மென்மேலும் பெற்றோர் முழு முயற்சி எடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அவுஸ்ரேலியாவிற்கு சென்ற முன்னாள் பொலிஸ் பேச்சாளர் சேவையிலிருந்து நீக்கம்

(கொழும்பு)

பொலிஸ் தலைமையகத்திற்கு எவ்வித தகவலையும் தெரிவிக்காது தனது குடும்பத்தாருடன் அவுஸ்ரேலியாவுக்குச் சென்று மீளவும் நாட்டுக்குத் திரும்பி வராத முன்னாள் பொலிஸ் பேச்சாளரும், இரத்தினபுரி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகருமான பிரசாந்த ஜயக்கொடி பொலிஸ் சேவையிருந்து நீக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார்.

தகவல் எதனையும் தெரிவிக்காமல் அவுஸ்ரேலியாவிற்குச் சென்றதற்கான காரணத்தை நாட்டிற்கு வந்து விளக்குமாறு அவருக்கு அறுமாத கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் அவருக்கு வழங்கப்பட்ட கால அவகாசத்தை அவர் சரிவரப் பயன்படுத்தவில்லை.

எனவே பிரசாந்த ஜயக்கொடி பொலிஸ் சேவையிலிருந்து நீக்கப்படுவதுடன், அவருக்கான ஓய்வூதியம் மற்றும் மேலதிக கொடுப்பனவுகள் எவையும் வழங்கப்படமாட்டாதெனவும் அஜித் ரோகண மேலும் தெரிவித்துளார்.

# உண்ணாவிரதத்திற்கு முயலும் திருமலையிலுள்ள தமிழக மீனவர்கள்

திருகோணமலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 142 பேர் உண்ணாவிரதப் போராட்டமொன்றை நடத்த தீர்மானித்துள்ளனர். இது தொடர்பில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு அறிவிக்கும் கடிதமொன்றை அவர்கள் அனுப்பி வைத்துள்ளனர்.

இந்தியாவில் சிறை வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களுக்கு கிடைக்கும் அற்ப வசதிகளுக்கு கண்டனம் தெரிவித்தே இலங்கைச் சிறையிலுள்ள தமிழக மீனவர்கள் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்த தீர்மானித்துள்ளனர்.

இலங்கை சிறைச்சாலைகள் ஆணையாளர் ஊடாக அவர்கள் இந்த கடிதத்தை தமிழக முதலமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளனர். இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அக்கடிதத்தில், இலங்கைச் சிறைச்சாலைகளில் எங்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், தொலைபேசி அழைப்புக்களை மேற்கொள்வதற்கான அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இவ்வாறானதொரு நிலைமை இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. இதேவேளை இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான மீனவர் பரிமாற்ற நடவடிக்கையின் பிரகாரம் இரு நாடுகளின் சிறைச்சாலைகளிலுமுள்ள மீனவர்களை அந்தந்த நாடுகளுக்கு அழைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சட்டவிரோதமாக வெட்டப்பட்ட பனை மரங்கள் சிக்கின



(பச்சிலைப்பள்ளி)

பச்சிலைப்பள்ளி இயக்கச்சியில் சட்டவிரோதமாக வெட்டப்பட்ட பல இலட்சம் பெறுமதியான பனைமரங்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இயக்கச்சிப் பகுதியில் சட்டவிரோதமாக வெட்டப்பட்டு களவாகக் கொண்டு செல்லப்படவிருந்த சுமார் ஐந்து இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியான பனைமரங்களே பளை பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, நேற்று முன்தினம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து இயக்கச்சி விநாயகபுரம் பகுதிக்குச் சென்ற பளை பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி ராஜபக்ஷ தலைமையிலான பொலிஸார் மேற்படி பனை தீராந்திகளைக் கைப்பற்றி பளை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

தனிநபர் ஒருவர் அந்தப் பிரதேச மக்களிடம் உரிய எல்லா அனுமதியையும் பெற்று பனை மரங்கள் வெட்டப்படுவதாக தெரிவித்து ஒரு தொகுதி பனை மரங்களை சட்டவிரோதமாக வெட்டி கடத்தப்பட இருந்த நிலையிலேயே பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது. பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (29)

## சிறுதானியச் செய்கை ஆரம்பம்

(சாவகச்சேரி)

பொய்த்துப் போன மாரி மழை வீழ்ச்சியை அடுத்து நெற் பயிர்கள் அழிக்கப்பட்டு மேட்டு நிலங்களில் சிறு தானியப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மட்டுவில், சரசாலை போன்ற பகுதிகளில் உள்ள மேட்டுக் காணிகளிலேயே இவ்வாறான பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. (இ)

# இந்திய, சீன மீன்பிடியால் 600 மில்லியன் ரூபா நட்டம்

## தேசிய மீன்பிடி அமைப்பாளர் கவலை

இந்திய மற்றும் சீன மீன்பிடிப் படகுகளினால் 600 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுவதாக தேசிய மீன்பிடி அமைப்பின் அமைப்பாளர் ஹேர்மன் குமார சண்டே லீடர் பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார். இந்திய மற்றும் சீன மீன்பிடிப் படகுகள் அத்துமீறல்களில் ஈடுபட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு புறத்தில் இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுவதுடன் மறுபுறத்தில் சீனப் படகுகள் இலங்கை மீன் வளத்தை ஆக்கிரமித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

முதலீட்டுச் சபையின் அனுமதியுடன் சீனப் படகுகள் இலங்கையில் மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சீன மீன்பிடிப் படகுகளினால் பாரியளவில் இலங்கை மீனவர்கள் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார். கடந்த காலங்களில் மீன்களுக்கு நல்ல விலை கிடைத்ததாகவும் தற்போது மீனவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சீனப் படகுகளில் பிடிக்கப்படும் மீன்கள் இலங்கையில் விற்பனை செய்யப்படுவதில்லை என பிரதி மீன்பிடித்துறை அமைச்சர் சரத்குமார குணரட்ன தெரிவித்துள்ளார். சீன மீனவர்கள் இலங்கைச் சந்தையில் மீன்களை விற்பனை செய்வது குறித்த தகவல் இருந்தால் அறிவிக்குமாறு அவர் மீனவர்களிடம் கோரியுள்ளார்.

# மதுவற்ற ஆண்டு 2014 சுகாதார அமைச்சு தீர்மானம்

2014 ஆம் ஆண்டை மது அற்ற ஆண்டாக பெயரிட சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. இது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைத் தயாரிக்குமாறு சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன அறிவுரை வழங்கியுள்ளதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் அதிகாரிகளுடன் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார். இந்த வருடத்தில் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட 54 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு, பாடசாலைகளுக்கு அருகிலும் இவை விற்கப்படுவதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்படி போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. இந்த வேலைத்திட்டத்திற்கு அனைத்து அமைச்சுக்களின் உதவியையும் பெற்றுக்கொள்ளுமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அறிவுரை வழங்கியுள்ளார்.

# 450 சிறை அதிகாரிகள் ஜனவரி முதல் இடமாற்றம்

எதிர்வரும் 2014 ஆம் வருடம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் சிறைச்சாலைகள் திணைக்களத்தில் பணியாற்றும் 450 பேருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

ஐந்து வருடங்கள் ஒரே இடத்தில் பணிபுரியும் அதிகாரிகளே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் பணி அவசியம் கருதியும் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறைச்சாலைகள் திணைக்களத்தில் உள்ள அனைத்து தர அதிகாரிகளும் இந்த இடமாற்றத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வீட்டில் அடைக்கப்பட்ட மூன்று சிறுமிகள் மீட்பு



வீடொன்றுக்குள் அடைக்கப்பட்டிருந்த மூன்று சிறுமிகள் பொலிஸாரால் மீட்கப்பட்ட சம்பவமொன்று பட்டபொல, கிரிமெட்டிய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

பெற்றோர் அற்ற நிலையில் குறித்த சிறுமிகள் மூவரும் வீட்டுக்குள் அடைக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் அவசர அழைப்புக்கு கிடைத்த முறைப்பாட்டை அடுத்தே இச்சிறுமிகள் மீட்கப்பட்டுள்ளனர்.

7 வயது, 5 வயது மற்றும் ஒன்றரை வயதுடைய மூன்று சிறுமிகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளனர். இவர்களது பெற்றோர்களை தேடும் பணிகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, சுமார் ஒரு நாள் தனிமையில் இருந்த இச்சிறுமியரை காலி, கிதுலம் பிட்டிய சிறுவர் இல்லத்தில் ஒப்படைத்து பராமரிக்குமாறு பலபிட்டிய நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 டிசம்பர் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.